
# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ரூபா 250 /=

ஜூலை - செப்டம்பர் 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போ வருவாரோ?

( கூட்டமைப்புத் தேர்தல் கச்சேரிப் பாடல் )

பல்லவி

எப்போ வருவீரோ, எப்போ வருவீரோ
எப்போ வருவீரோ, எப்போ வருவீரோ
எங்கள் கலி தீர
சனங்களை ஏய்த்து தேர்தலில் வெல்ல
துணைதர நீரும் தயவுபுரிந்து
எப்போ வருவீரோ, எப்போ வருவீரோ
எப்போ வருவீரோ, எங்கள் கலி தீர
எப்போ வருவீரோ

அனுபல்லவி

தந்தை முதல் அண்ணர், தம்பியர் யாவரும்
நம்பிய தில்லித் தலைநகர் வாசா
எப்போ வருவீரோ

சரணங்கள்

தீர்வொன்று தந்து அமைதியும் பேணு
வீரென்று நம்பி வணங்கிய பேரை
போரொன்று செய்து பதற வைத்தீரே
பேச்சுகள் பொய்க்கச் சூழ்ச்சி செய்தீரே
அரசுக்குப் போரில் துணைபுரிந்தீரே
அவையெதும் பேச அனுமதியோமே

( பல்லவி : எப்போ வருவீரோ )

பதவிகள் மீதே பாசமுங் கொண்டோம்
பவிசுடன் வாழும் பாதையுங் கண்டோம்
தேர்தலில் வெல்லப் புளுகிட வல்லோம்
தீர்வு நீர் வந்து தருகுவீரென்றோம்
தீர்வெதுங் காணோம் தில்லியம்பலவா
திரும்பவும் வெல்லத் திசை அருள்வீரோ

( பல்லவி : எப்போ வருவீரோ )

பற்பலரும் புகழ் தில்லியின் தலைவா
பதவிகள் வெல்லநின் பாதம் பணிந்தோம்
மற்றவர் யாவரும் மன்று புகுந்தால்
மாண்புறு தில்லிச் சொல்வழி கேளார்
கொற்றவா நாமும் ஆளென அறிவீர்
கருணையாய் ஒருசொல் கூறிட இங்கே

( பல்லவி : எப்போ வருவீரோ )


சீனர்சொல் கேட்கும் சிங்கள நாட்டார்
சோனகர் உம்மைப் பகையெனப் பார்ப்பார்
சீனரெம் மண்ணில் அடிபதியாமல்
சீருடன் நீரும் எங்களை ஆள
மீனவர் துன்பம் பேசுதல் செய்யோம்
மீண்டொரு தேர்தல் நாங்களும் வெல்ல

( பல்லவி : எப்போ வருவீரோ )

உம்மையல்லாது அந்நியர் யாரும்
அடிபதியாமல் துறைமுக நகரும்
சம்பூரு முமக்காய் தீவுகள் உமக்காய்
செறி கடல் வளமும் உம் வசமாக
ஊழியஞ் செய்வோம் - தமிழரைக் காப்பீர்
என்றொரு பொய் நீர் இயம்பிட இரங்கி

( பல்லவி : எப்போ வருவீரோ )

சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

THAYAKAM

Art, Literature and Social science Magazine

இதழ் 106 ஜூலை-செப்டம்பர், 2022

பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்

நிர்வாக ஆசிரியர் :
ச. சத்தியதேவன்

ஆசிரியர் குழு :
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
வே. தினகரன்
ஆதித்தன்

வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்

உள் ஓவியங்கள் :
இணையத்திலிருந்து

அச்சுப் பதிவு :
ஜே. எஸ். பிறின்ரேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com

வெளியீடு :

தேசிய கலை இலக்கியப் பேரவை
62, கொக்குவில் சந்தி
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்
இலங்கை


## உள்ளடக்கம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### கவிதைகள்


| | |
|---|---|
| சிவசேகரம் | 00 |
| பாமரன் | 04 |
| செ.சுதர்சன் | 16 |
| ராசாத்தோட்டம் எஸ்.ராமஜெயம் | 17 |
| வள்ளியம்மை சுப்பிரமணியம் | 20 |
| ஷெல்லிதாசன் | 25 |
| அலெக்ஸ் பரந்தாமன் | 26 |
| செம்மலர் மோகன் | 35 |
| தம்பா | 41 |
| த.வி. ரிஷாங்கன் | 45 |
| இதயராசன் | 52 |


### சிறுகதைகள்


| | |
|---|---|
| சிவ. இராஜேந்திரன் | 11 |
| மாலாதேவி மதிவதனன் | 21 |
| அநாதரட்சகன் | 36 |


### கட்டுரைகள்


| | |
|---|---|
| சரஸ்வதி பிரபாகரன் | 05 |
| விகடன் இதழிலிருந்து | 18 |
| சோ. தேவராஜா | 27 |
| பி. முத்துலிங்கம் | 40 |
| இதயராசன் | 42 |
| ஞாலசீர்த்தி மீநிலங்கோ | 47 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

இதழ் 106

ஜூலை - செப்டம்பர், 2022

## "காரணங்கள் எவை எனும் அறிவு..."

உலகில் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம் பெற்றுவிட்டதாக உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது. பிரித்தானிய கொலனித்துவ வாதிகள் விட்டுச் சென்ற 74 ஆண்டுகால முதலாளித்துவ பாராளுமன்ற பிரதிநித்துவ போலி ஜனநாயக ஆட்சி அமைப்பின் பெறுபேறாக இந்தப் பட்டத்தை எமது நாடும் மக்களும் சுமக்க வேண்டியுள்ளது. இன்று உலகமயமாகி உலகெங்கும், நெருக்கடிகளை தோற்றுவித்து வரும், நவகொலனித்துவ தாராளவாத முதலாளித்துவப் பொருளாதார முறைமையை எமது நாட்டின் ஆளும் வர்க்கம் 1977ம் ஆண்டில் இருந்து வெளிப்படையாக ஏற்றுக் கொண்டது. அவ்வமைப்பின் மீதான இலங்கை மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பில் இருந்து பாதுகாக்கவே, ஆளும் வர்க்கம் அன்று தொழிற் சங்கங்களின் பலத்தை முடங்கச் செய்தது, தேசிய இனங்களை ஒடுக்கியது, போரின் பேரழிவுவரை நாட்டை இட்டுச் சென்று, அதற்கூடாக அவ்வமைப்பைப் பாதுகாக்கவல்ல இராணுவ பலத்தையும் கட்டியமைத்துக் கொண்டது. அத்துடன் புனிதப்படுத்தப்பட்ட இனவாத, மதவாத அரசியல், பொருளாதார, நுகர்வுப் பண்பாட்டுத் திணிப்புக்களையும், பழமைவாதத்தின் அடிப்படை பலத்துடன் பாதுகாத்து வருகிறது. போலி ஜனநாயகப் போர்வையின் கீழ் தொடர்ந்து நடைபெறும் இவ்வரசமைப்பின் ஏமாற்றுக்களை விமர்சனம் எதுவுமின்றி மக்கள் ஏற்றுப் பின்பற்றி வருகின்றமையே, நாடு இன்று எதிர்கொண்டிருக்கும் பெரும் பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணமாகும்.

ஊழல்கள் நிறைந்த ஆட்சியும், தனிநபர்களும் அந்நியக் கொம்பனிகளும் பெருலாபங்களைச் சுருட்டிக் கொள்வதும் இந்த அரசியல் பொருளாதார அமைப்பின் இயல்பாகும். அந்நிய மூலதனத்தை இங்கே கொண்டுவந்து முதலிடுங்கள். எமது மக்களது உழைப்பையும், நாட்டின் வளத்தையும் முடிந்தளவு சுரண்டிச் செல்லுங்கள் என்று அழைப்பு விடுவது இந்த அமைப்பின் இயல்பாகும். வேண்டுமானால் நாட்டின் நிலங்களை மட்டுமல்ல, நாட்டின் எதிர்கால சந்ததிகளின் வாழ்க்கையையே உங்களுக்கு தாரை வார்த்துத் தருகிறோம் என ஏகாதிபத்திய நாடுகளுக்கும், பிராந்திய வல்லரசுகளுக்கும் உறுதி அளிப்பதும் இந்த அரசியல் பொருளாதார அமைப்பாகவே இருக்கிறது.

இவ்வமைப்பின் கீழ் தொடர்ந்த ஆட்சிமுறையின் பெறுபேறாகவே இலங்கையின் மக்கள் தொகையில் பெரும்பாலானோர் இன, மத வேறுபாடுகளின்றி இதுவரை கண்டிராத விலைவாசி உயர்வையும், பஞ்ச நிலையின் கொடுமையான பாதிப்புக்களையும் அநுபவித்து வருகின்றனர். மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட, தம்மிடமிருந்த சேமிப்புக்களை வேகமாக இழந்து படிப்படியாக, தாம் வீதிக்குத் தள்ளப்படுவதை உணர்கின்றனர். ஏற்றத்தாழ்வுகளும் ஒடுக்குமுறைகளும் நிறைந்த ஒரு சமூக அமைப்பில் மக்களின் இயல்பு வாழ்க்கை என்பது ஆதிக்கம் செலுத்தும் அரசுகள் தமக்குச் சாதகமாக அமைத்துக் காக்கும் 'பண்பாட்டு உணர்வு' தரும் தற்காலிக அமைதி நிலைதான். ஆனால் மக்கள்மீது திணிக்கப்பட்ட, பழகிப்போன இயல்பு வாழ்க்கையில் இதுபோன்ற பலமான தாக்கம் ஏற்படும் போது இத்தகைய அவல நிலைகளுக்கான காரணங்களைக் கண்டறியும் உணர்வு மக்களிடம் எழுகிறது. மக்களை ஏமாற்றி இனவாத, மதவாத உணர்வுகளை இலகுவாகத் தூண்டி, வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரத்துக்கு வந்த ஆளும் வர்க்கங்களும், ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க நாடுகளின் எடுபிடிகளும் சேர்ந்து செய்யும் கூட்டுச் சதிக்குள் தாமும், தமது சந்ததிகளும் அகப்பட்டிருப்பதை உணரத் தலைப்படுகின்றனர். ஆளும் வர்க்கங்கள், கோப்ரேட் கொம்பனிகளுடன் கூட்டுச் சேர்ந்து, நீண்ட காலமாக எமது மண்ணின் வளத்தையும், மக்களின் உழைப்பையும் சுரண்டிச் சேர்த்த சொத்துக்கள், பணங்கள் மக்கள் நலன்களுக்கும், நாட்டின் நலன்களுக்கும் பயன்படவில்லை என்பதை உணர்கின்றனர். பதிலாக அவர்கள் சுருட்டிக்கொண்ட பணத்துக்கும், சுகபோக வாழ்வுக்குமான பணத்தின் பெரு வட்டிகளையும், கடன்களையும், மறைமுக வரிகளாக, விலைவாசி ஏற்றங்களாக தொடர்ந்து மக்கள் தலைகளிலேயே சுமத்திவருகிறார்கள் என்பதை அறிகின்றனர். இவற்றால், இலங்கையின் மக்கள் தொகையில் பெரும்பான்மையான அனைத்து இனங்களையும் சேர்ந்த உழைக்கும் தொழிலாளர்கள், விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் மீளமுடியாத கடன் சுமைகளுடனும், பஞ்சவாழ்வுடனும் தொடர்ந்து என்றும் பயணிக்க வேண்டி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளுக்கான காரணத்தை மக்கள் தேடிப் புறப்பட்டால் தமது நலன்களுக்கு ஆபத்து என்று அஞ்சிய அதிகார வர்க்கங்களின் ஆதரவு சக்திகள் சிலவும், உண்மையாகவே பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு, அதன் காரணங்களைக் கண்டுணர்ந்து எதிராக செயல்பட முனைந்தவர்கள் பலரும் இணைந்தே காலிமுகத்திடல் போராட்டத்தை ஆரம்பித்தனர். பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பும், ஆதரவும் பேரெழுச்சியாக மாறி அரசை ஆட்டங்காண வைத்தபோது, முதலாமவர்கள் அரங்கிலிருந்து பின்நின்றனர். எது எவ்வாறு அமைந்த போதும், பொருளாதார அமைப்பை விமர்சித்து எழுந்த கோஷங்களும், பொருளாதார நெருக்கடியை எதிர்த்து எழுந்த இன, மதம் கடந்த ஐக்கியத்துக்கும் புரிந்துணர்வுக்குமான எழுச்சிக் குரல்களும், ஒடுக்குமுறைகளுக்கான காரணங்களை கண்டறிவதற்கு அவசியமான களங்களை மேலும் மக்களுக்கு திறந்துவிட்டுள்ளன. அதுபோலவே சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் கண்டு அஞ்சி ஒடுங்கி, அதனைக் காக்கும் அரசமைப்பின் அடிமைகளாக உழைக்கும் மக்கள் தொடர்ந்தும் வாழாமல், இனமத பேதங்கள் கடந்து அனைத்து ஒடுக்கு முறைகளுக்கும் எதிராக ஒன்றுபட்டு எழுந்தால் இச்சுரண்டல் அமைப்பையே மாற்றமுடியும் என்ற நம்பிக்கையையும் இவ் எழுச்சி மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் காரணங்களைக் கண்டறியும் அறிவு மக்கள் மத்தியில் எழுச்சியுற்றுப் பரவுவதை அதிகார வர்க்கங்கள் இலகுவில் அனுமதிப்பதில்லை. இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை ஆய்வு செய்து வெளியிடுபவர்களின் வர்க்கச் சார்பு நிலைக்கு ஏற்ப இக்காரண அறிவும் வேறுபடுவதை நாம் உணரமுடியும். இந்த அறிவின் இருமை நிலை ஏன் எழுகிறது என்பதை "பண்ணையாள் கிழக்கே பார்ப்பான். உழைப்பாளி மேற்கே பார்ப்பான்" என்ற சீனப் பழமொழியின் மூலம் எளிதாக புரியமுடியும். நாள் முழுவதும் மண்ணில் வியர்வை சிந்தி உழைக்கும் பண்ணை அடிமை, பொழுது சாய்ந்தால் கடின உழைப்பில் இருந்து, தான் ஓய்வு பெறலாம் என்று பொழுது மேற்கே சாய்வதை அடிக்கடி பார்ப்பான். பண்ணையாள் மண்ணில் அவ்வடிமைகளின் உழைப்பு நேரம் அதிகரித்தால் விளைநிலம் விரிவடையும் என்ற நிலப்பிரபுவின் இலாப நோக்குடன், கிழக்கில் இருந்து பொழுது மெல்ல நகர்ந்தால் நல்லது என பொழுதைப் பார்ப்பான். இதுபோன்றே நவீன தொழிற்சாலைகள் மேற்குலகில் உருவாகிய பின்னர் கடிகாரத்தை பின்னுக்கு இழுக்கும் மனிதத் தன்மையற்ற முதலாளித்துவ மனப்பாங்கும் இருந்தது. மிகக் கொடிய 18 மணி நேர உழைப்பில் இருந்து இன்று உழைப்பவர்கள் அனைவரும் அநுபவிக்கும் 8 மணி நேர உழைப்பாக அதனைக் குறைப்பதற்கு தாராள முதலாளித்துவத்தின் முழுமையற்ற பகுத்தறிவும், மனிதாபிமானமும் உதவவில்லை. உயிர்ப்பலிகளையும், சிறைக் கொடுமைகளையும், தாங்கியபடி தொடர்ந்த உழைக்கும் மக்களின் இரத்தம் சிந்திய எழுச்சிப் போராட்டங்கள் மூலமே அதனைப் பெறமுடிந்தது.

புறத்தோற்ற வேறுபாடுகள் பல இருந்தாலும் ஒரே வானம், ஒரே பூமியின் மீது ஒரே மனிதர்களாகத்தான் இயற்கை கொண்டுள்ளது. ஆனால் உழைப்பவனும். உழைப்பின் பயன்களை சுரண்டி வாழ்பவனும் என்று வேறுபட்டு நிற்கும் நிலை தோன்றிய பின், இவ்வுலகில் மனித வாழ்க்கையைப் புரிந்து கொள்வதிலும், இரு வேறு உலகப் பார்வைக் கூடான அறிதலும், உணர்தலும், புரிதலும் இருந்து வருவதை மேற்குறிப்பிட்ட 'உழைப்பைப் பற்றிய மார்க்சிய சமூக விஞ்ஞான அறிதல் முறை தெளிவுபடுத்துகிறது. இதுவே இருவேறு உலகப் பார்வைகளாக தத்துவம், அரசியல், அறிவியல், விஞ்ஞானம், கலை, இலக்கியம், அறம், பண்பாடு, இன்றைய தகவல் தொழில் நுட்பம் என மனிதச் சிந்தனை, செயற்பாடுகள் அனைத்திலும் விரவிக் கிடக்கின்றன.

இவற்றை பணபலத்தாலும், படைபலத்தாலும் மட்டுமல்ல, மத பண்பாட்டு மேலாதிக்க பலத்தாலும் தமதாக்கிக் கொள்வதன் மூலமாவே 21ம் நுற்றாண்டிலும், அதிகார வர்க்கங்களால் சுரண்டலும், ஒடுக்கு முறைகளும், ஏற்றத்தாழ்வுகளும், போர் அழிவுகளும் நிறைந்ததாக உலகை கட்டிக்காக்க முடிகிறது. அதுவே மக்களின் இயல்பு வாழ்வாக, வரலாற்றை பின் இழுக்க எண்ணும் செயற்பாடுகளாக இலத்திரனியல் ஊடகங்களின் பலத்துடன், மக்களின் மனங்களில் இறுகப் பதியவைக்கப்படுகின்றன. 'தானாக எல்லாம் மாறும்', 'இறைவன் விதித்த விதி, போன்ற தத்துவ வார்த்தைகளின் பின்னாலும் வரலாற்றின் இத்தொடர்ச்சியான 'பின் இழுப்பை' நாம் அடையாளம் காணமுடியும். ஆனால் இம் மக்களாட்சி யுகத்திலும், 'வல்லது வாழும்' என்ற விலங்கின நுகர்வுப் போட்டி வாழ்வை பண்பாடாக மக்கள் மேல் ஏற்றி, மந்தைகளாக மக்களை ஆக்கிவைத்து, அவருழைப்பில் மாமனிதர்களும், ஏகாதிபத்தியங்களும், அதன் அடிவருடிகளும் வாழவேண்டும், ஆளவேண்டும் என்ற நிலையை நீட்சியுறச் செய்ய முடியாது. இதனை என்றும் இல்லாத வகையில், தமது நாளாந்த வாழ்வின் பொருளாதார நெருக்கடிகளுக்கு உட்படும் உழைக்கும் மக்களும், மாற்றத்தை விரும்பும் ஜனநாயக சக்திகளும் உண்மைக் காரணங்களைக் கண்டறிந்து, இம் மண்ணில் ஒன்றுபட்டு எழுச்சியுற்று. விடுதலை நோக்கி முன்செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படி

படி படி படி படி படி படி படி படி படி

சத்தியமே வெல்லும் என்று
சாய்மனையில் படுத்திருந்தால்
சரித்திரங்கள் மாறாது முதல் படி
சரியான நூல்களை நீ முதல் படி!

மக்கள் படும் துன்பங்களை
மாற்றுதற்குப் படி படி
மகிழ்சியான உலகைக் காண
மாக்சியத்தைப் படி படி

சாதி, இன, மத, பேதம்
சாய்ப்பதற்குப் படி படி
சமத்துவத்தை நிலை நாட்ட
சமுகமைப்பை படி படி

பரீட்சைக்காக படி படி
பாரை மாற்றப் படி படி
பழமைச் சேற்றில் இருந்து மீள
பகுத்தறிவு நூல் படி

புதிய வாழ்வை மலர வைக்க
புதிய நூல்கள் படி படி
புதிய பண்பாட்டை வளர்க்க
புதியவாழ்வைக் கடைப்பிடி

நித்தம் படும் மக்கள் துயர்
போக்குதற்குப் படி படி
நீசர் செய்யும் கொடுமைகளை
நீக்கும் நல்ல செயல் படி

கத்தி தீட்ட முதல் உந்தன்
புத்தி தீட்டப் படி படி
அறிவும் செயலும் ஒன்றிணைந்தால்
அகிலம் மாறும் படி படி

தானாய் எதுவும் மாறா தென்ற
தத்துவத்தை படி படி
அடிமைகளாய் எமை ஒடுக்கும்
அமைப்பை தகர்க்கப் படி படி!

பாமரன்

## அஞ்சலி



கவிஞர் முருகையனின் மகன் நாவலன் (கண்ணன், கவிஞர் பவித்திரன்) இருதயக் கோளாறு காரணமாக 6/10/2022 அன்று இயற்கையெய்தினார்.

கொழும்பில் இயங்கிய சவுத் ஏசியன் புக்ஸ் எனும் வசந்தம் புத்தக நிலையத்தின் முகாமையாளராக சில வருடங்கள் செயற்பட்டு இலங்கை எழுத்தாளர்கள் பலருடனும் உறவும் நட்பும் பூண்டிருந்தார். எழுத்தின் மீதும் புத்தகங்கள் மீதும் அளவற்ற காதல் கொண்டிருந்தார்.

தாயகம் இதழில் கவிதைகள் எழுதியதோடு தாயகம் இதழ் வாசிப்பும் நேசிப்பும் கொண்டிருந்தவர். தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக 'உரசல் ஓசைகள்' என்ற கவிதைத் தொகுப்பை கவிஞர் பவித்திரன் என்ற பெயரில் தந்த நாவலனின் திடீர் மறைவு குறித்து தாயகம் இதழும் தேசியகலை இலக்கியப் பேரவையும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் துயர் பகிர்வதோடு இறுதி அஞ்சலியைத் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மருத்துவத்தில் அறுவை மருத்துவம் ஒரு பார்வை

சரஸ்வதி பிரபாகரன்
ஆயுள்வேத மருத்துவர்

## அறிமுகம்

மூலிகைகளால் செய்யப்படுகின்ற சிகிச்சைகள் மானிட சிகிச்சை எனப்படும். உலோக, தாது, நீறு, செந்தூரம் முதலியவற்றால் செய்யப்படும் சிகிச்சை தேவசிகிச்சை எனப்படும். கத்தி முதலிய கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சைகள் ஆசுர அல்லது இராக்கத சிகிச்சை என சித்தர்கள் கூறினார்கள்.

அறுவை மருத்துவம் என்பது சத்தகம், கத்தி முதலான கூரான ஆயுதங்களினால் வெட்டுதல், அறுத்தல், பிளத்தல் முதலிய செயல்களைக் குறிக்கும்.

அறுவை மருத்துவத்தில் கீறுதல், அறுத்தல், வெட்டுதல், வெளியே இழுத்து எடுத்தல், பிளத்தல், குத்துதல், சுரண்டுதல், தைத்தல், துழாவுதல், கடைதல், சுடுதல் ஆகிய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

மேலும் அக்குபஞ்சர், வர்ம சிகிச்சை, புகைபோடல் சுட்டிகை (Cauterization) குருதி உறிஞ்சல் ((blood ledding) கொம்பாடல் (injection) குடோரி, காரத்திரி பிரயோகம், வேதுபிடித்தல், ஒத்தணம் இதில் அடங்குகின்றன.

## அறுவைச் சிகிச்சை பிரிவுகள்

கண் சத்திரசிகிச்சை, பொது சத்திர சிகிச்சை, சிசேரியன் சத்திர சிகிச்சை, பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை, கபலா சத்திர சிகிச்சை (Cranial Surgery) அவயவங்கள் அறுவை சிகிச்சை (Amputation of limbs) செயற்கை அவயவங்கள் பொருத்துதல் என்பன தமிழ் அறுவை சிகிச்சை மருத்துவர்களால் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆசுர மருத்துவம் (Surgery) அல்லது அறுவை மருத்துவம் செய்பவர் ஆசுரி (Surgeon) எனப்பட்டார். வர்ம விதியைக் கையாள்பவர் வர்மானி என்று அழைக்கப்படுவர். அறுவை கத்திகள், சத்தங்கள் என அழைக்கப்பட்டன.

அறுவை சிகிச்சை செய்வதற்கு முன் தயார்படுத்தல் செய்யும்போது அங்குசம் என்னும் ஊசியை வ்மானி வெட்டுக்கால வன்மம், கவளிக்கால வன்மம் போன்ற வன்மங்களில் குத்தி நோயாளியை மயக்கமடையச் செய்வார்.

## சித்த மருத்துவ இலக்கியங்களில் அறுவை மருத்துவம்

தமிழ் மருத்துவ வரலாற்றில் காலத்துக்கு காலம் பல அறுவை மருத்துவம் சார்ந்த கருத்துக்கள் உள்ள நூல்கள் வெளிவந்து உள்ளன. அவற்றில் சில பல்வேறு காரணிகளால் அழிவடைந்துள்ளன. இருப்பினும் அவ்வாறான வெளிவந்த நூல்களில் அறுவை மருத்துவ கருத்துக்கள் சார்ந்த நூல்களை பார்பபோம். திரேத யுகத்தில் அறுவை மருத்துவ புத்தகம் இராவணனால் எழுதப்பட்டது. முருகசாலம், பேரகத்தியம் 21000, அகத்தியர் சத்திராயுதம் விதி, பரராசசேகரம் 12000, செகராசசேகரம் 2000, அகத்தியர் நயனவிதி, நாகமுனி நயனவிதி, சிவஞான சித்தியர், முரிவுசாலி போன்றன. அவை மருத்துவ கருத்துக்களை கொண்ட சித்த மருத்துவ நூல்களாக காணப்படுகின்றன.

### 1. முருக சாலம் நூல்

துவாபர யுகத்தில் முருகசாலம் என்ற அறுவை மருத்துவநூல் முருகக் கடவுளால் பொதியில் (கிழக்கு இலங்கை) இயற்றப்பட்டது. இது வன்மவிதி மற்றும் அறுவை மருத்துவம் பற்றிக் கூறுகிறது.

குமரன் முன்னைய காலத்தில் பூவுலகத்தின்மீது இரக்கமுற்று அவர்கள் உய்வடையும் பொருட்டு அறுவை மருத்துவ நூலான முருகசாலம் என்ற நூல் இயற்றப்பட்டது. அதில் சொல்லப்பட்ட வன்மவிதியும், சத்திராயுத விதியும் பரராசசேகரம் 12000 நூலில் உளள் பாடல் ஒற்றைக் கொம்பு கணபதியே காப்பு என்று அமைந்துள்ளது. பாடல்:

*சேவலங் கொடியோன் முன்னாட் சிந்தையி லிரக்கமுற்று*
*பூவலகோர் களுய்ய புகல்கின்ற வன்ம மற்றும் மூவுலகோடு மெச்சு முறிய சத்திரமும் பாடக்*
*காவல னொற்றைக் கோட்டு கணபதி காப்பதாமே.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன் முருகசாலத்தில் வன்மவிதியில் கதிர்காம வர்மம் என்று ஒரு வன்மத்திற்கு பெயரிட்டு கதிர்காமத் திற்கு மதிப்பளித்து அருகில் பொதியிலில் இவை அரங்கேற்றப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றது.

## 2. பேரகத்தியம் 21000 நூல்

அகத்தியரின் பேரகத்தியம் என்னும் நூல் முத்தூர் என்னும் இடத்தில் இயற்றப்பட்டது என்று அ. சிதம்பரனார் குறிப்பிட்டுள்ளார். பேரகத்தியத்தில் உள்ள பாடல்

*மாறான வனக்காய மெடுத்த தேக*
*மானிடரி லிரண்டு வகைப் பதிப்பதான*
*ஊறான விதமறிவாரவர் காண் முன்ன*
*ருத்தம பண்டிதத் தலைவருரைத் தாரிங்கு*
*வீறான கதை வாள் புத்திரத்தினாலு*
*மேயநகம் பல் கல் பாய்கல் வீட்டலுங்*
*கூறான யிவையிவையே பகுத்துப் பார்க்க*
*கொள்ளவரு முறைமை யெலாங் கோடனன்றே*

என்று அகத்தியர் 21000இல் உள்ள பாடல் உடலில் ஏற்படும் காயங்களைப் பற்றி கூறுகிறது. மேலும், அகத்தியரின் அறுவை மருத்துவம் பற்றிய குறிப்புகளைப் பார்ப்போம்.

வெளியில் இருந்து உடலில் ஏற்படும் காயங்கள் 600 வகைப்படும். அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நோய்கள் பற்றி அவர் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய காலம், ஒழுங்கு கருவிகள், விறைக்கச் செய்யும் வழிமுறைகளான வன்மவிதி, அறுவைக்கான சஸ்திர விதி, அறுவை சிகிச்சையின் பின் கவனிப்பு எல்லாம் அதில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

அறுவை சிகிச்சையின்போது மூலிகைகளையும் வன்மவிதியையும் பயன்படுத்தினார்கள். மனிதனுடைய ஒரு உறுப்பு சிதைந்தால் மற்றோர் உறுப்பை பதிய வைத்து பொருத்த முடியும் என்று முதன் முதலாக நிகழ்த்திக் காட்டியவர் அகத்தியர்.

## 3. அகத்தியர் சஸ்திராயுத விதி, பரராசசேகரம் 12000 நூல்கள்

அகத்தியர் சஸ்திராயுத விதி என்ற நூலில் அகத்தியர் கத்தி, கருவிகளை கையாளும் முறைபற்றி குறிப்பிடுகிறார்.

கி.பி.16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத் தில் ஆக்கப்பெற்ற பரராசசேகரம் என்னும் தமிழ் மருத்துவ நூலில் அகஸ்தியர் சஸ்திராயுத விதி என்னும் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் அறுவைச் சிகிச்சை பற்றிய நூலே மிகவும் பழமைவாய்ந்த நூலாகக் காணப்படுகின்றது.

*விரிந்த பூநறுத் தேனாகும்*
*வியன்வரி பாடுஞ்சோலை*
*பொருந்திய தென்றல் மேவும்*
*பொதியமால் வரையில் வைகும்*
*அருந்தவ முனிவன் தானும்*
*ஆயுரு வேதத்துள்ளே*
*தெரிந்து நற்சாத்திரத்தின்*
*விதிதனைத் தமிழாற் செய்தான்.*

அகத்தியர் சஸ்திராயுத விதியில் அறுவை சிகிச்சைக்குப் பயன்படும் 26 ஆயுதங்களின் பெயரும் விபரங்களும் தரப்பட்டுள்ளது. அதற்கான பாடல் வருமாறு:

*கத்தி சத்திரம் கவின் குறும்பி வாங்கியும்*
*முக்கவா தன்னுடன் முள்ளுவாங்கியும்-*
*ஆழிக்கோலு மடுத்த பிறையுடன்*
*கத்தரிக் கையுடன் பரகரை வாங்கியும்*
*முச்சலாகை யொடு முனிமொழி யோட்டும்*
*மட்டக்கோலும் மாறும் ஊசியும்*
*செப்புக்குழையும் சீரிய சலாகையும்*
*வட்டக்கை தன்னுடன் வளர்-பஞ்சமுகமும்*
*செப்புச் சிலாகையுங் கொம்புங் குடோரியும்*
*வெங்கலக் குழலும் ஈயச் சலாகையுங்*
*காயக் கோலுங் கண்தத்தி நண்டும்*
*இவையிவை யாயுத மிருபகபத்தாறும்*
*சிவனவ னருளால் திகழ் சத்ராயுதமே.*

மேற்படி அகத்தியர் சத்திராயுத முறையில் கூறப்பட்ட அறுவை சிகிச்சை கருவிகளின் வகைகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| *1. கத்தி* | *2. ஊசி* | *3. குறும்பி வாங்கி* |
| *4. முகவாதனன்* | *5. முள்ளுவாங்கி* | *6. ஆழிக்கோல்* |
| *7. பிறைக்கோல்* | *8. கத்தரிக்கோல்* | *9. பாகரை வாங்கி* |
| *10. முச்சிலாகை* | *11. முனிமொழி* | *12. ஒட்டுக்கோ* |
| *13. அட்டிக்கோல்* | *14. ஊசி* | *15. செப்புக்குழை* |
| *16. சலாகை* | *17. வட்டக்கை* | *18. பஞ்ச முகம்* |
| *19. செப்பு சிலாகை* | *20. கொம்பு* | *21. குடோரி* |
| *22. வெண்கல குழல்* | *23. ஈயச் சிலாகை* | *24. காயக்கோல்* |
| *25. தெண்டு சலாகை* | *26. நயனக் கத்தி* | |

வன்மவிதியில் நூறு செய்யுட்களும், சத்தக விதியில் (30) முப்பது விதிகளும், சிரை விதியில் நூற்றைம்பது செய்யுட்களும் சத்தக சிகிச்சைவிதி, கண் சத்தக விதி, சல்லிய விதி ஆகியவற்றில் ஏறக்குறை 500 பாக்களும் காணப்படுகின்றன. இவை ஒரு முழுமையான, நிறை வானவை அல்ல. கிடைக்கப் பெற்ற பாடல்கள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. பிறநாட்டவர் வருகையாலும், போர்களினாலும், இடப்பெயர்வுகளினாலும் இயற்கையின் சீற்றத்தினாலும் அவற்றில் சில அழிந்துபோயிருக்கலாம்.. ஆகவே, கையில் கிடைக்கப்பெற்றதை வைத்துக்கொண்டு இவைதான் பரராசசேகரம் கூறும் அறுவை மருத்துவம் என்று கருதுதல் தவறாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானால் வன்மகலை, சத்தக விதி அருளிச் செய்யப்பட்டதால்தான் தமிழன் முருகனுக்கு மட்டுமே செடில் குத்தி, அலகு பாய்ச்சி, தூண்டில் போடடு, வேல் குத்தி காவடி எடுத்து ஆடுகிறார்கள். முருகனுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

வன்ம வித்தையை அறிந்தவர்கள் இதை மிகவும் இரகசியமாகவே போற்றி வருகிறார்கள் என்பதை பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

*"முடுகுவது சண்டாள கோபத்தாலே*
*முன்பாரான் பின்பாரான் முறைகளை பாரான்*
*கடுகுவது ஆங்காரம் மனதில் கொண்டு*
*கற்ற வித்தை மனத்தினால் காலம் எண்ணி*
*நடுகுவது நல்லோரை பெரியோர் தம்மை*
*நானிலத்தில் ஏழைகளை நடுங்கச் செய்து*
*கொடுகவே ஈடு செய்து கொல்வானப்பா*
*கொடும்பாவம் அவனை வந்து குறுகுந்தானே"*

இங்கு ஈடு என்பது வன்மம்.

## 4. பரராசசேகரம் 12000 நூல்

இந் நூலில் ஆசுர மருத்துவத்தின் கீழ் காணப்படும் சிகிச்சை முறைகள் வருமாறு

*1. உறிஞ்சுதல்*

அ. மலவாசலூடாக குழாயைச் செலுத்தி வாயுவை உறிஞ்சி வாங்குதல். குழாய் வாயுவை உறிஞ்சத்தக்க தக்கை அமைப்புடன் வடிவமைக்கப்பட்டவை. மூங்கிற் குழாயினால் ஆனது.

ஆ. வயிற்றில் நீரூசி (குழாய் போன்ற ஊசி)யால் குத்தி நீர் வாங்குதல். இதுவும் குழாய் தக்கையைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெள்ளியினாலான கருவி.

*2. அறுவை*

கழலை, கட்டி முதலியவற்றை அரிந்து (வாளால் சத்தகத்தினால்) களைந்திடுதல்

*3. கோலாற் சுடுதல் - சுட்டிகை*

சுட்டிகைக் கோல் அவற்றின் வடிவத்தை பொறுத்து 9 வகைப்படும் அவையாவன.

சுட்டிகைகளின் வடிவங்கள்

| | | |
|---|---|---|
| *1. உடுக்கு* | *2. முக்கவர்* | *3. இருகவர்* |
| *4. பிறை* | *5. ஏர்க்கால்* | *6. சங்கிலிக்கால்* |
| *7. புள்ளடி* | *8. ஆழி* | *9. பொட்டு* |

சுட்டிகைகளின் செயற்பாடுகள் வருமாறு

அ. அரையாப்புக் கட்டிகள், பெருவலி, இடமணி பந்தம், இருகுதிநாடி, சிரசு ஆகிய இடங்களில் சூடுபோடடு வலியை நிறுத்துதல்.

ஆ. உண்ணாக்கு வளர்ச்சியில் அனாமிகாவிரலில், மூளை நரம்பினில் ஆண்களுக்கு வலப்பக்கமும் பெண்களுக்கு இடப்பக்கமும் சூடுபோடுதல்.

இ. கண்கரிப்பு, நீர் வடிதல் நோயில் புருவக்கடை நரம்பு, கபாலம் ஆகிய இடங்களில் சூடுபோடுதல்.

ஈ. பிறவீச்சு, வலி, சன்னி நோய்களில் உடலில் சூடுபோட்டுக் குணப்படுத்தும் முறை கையாளப்பட்டுள்ளதை பரராசசேகரம் தெரிவிக்கின்றது. உச்சியில் புள்ளடியாலும் பிடரியில் பிறைக்கால் கொண்டும், மற்ற இடங்களில் மற்ற சுட்டிகைகளைப் பயன்படுத்தியும் கை, கால், நடுமுதுகு, பரண்டையின் மேற்கணைக்கால், கண்ணிமை, நெற்றி, மேல் மார்பு, தொப்புள், பரண்டையின் மேல் உள்வளம், 4 விரல் மேலாக கதிர் வளர்த்து விளக்கினிலே காய்ச்சி 2" நீளமாக சுட்டு எருமைப்பால், சீரகம் சேர்த்து மத்தித்து பூசி குத்து மாறிவிடும்.

*"கலி என்னும் வலிதான் வந்து கடினமாய் வலிதுவங்கில்*
*நலியவே யெண்ணெய் சூடு நசியங்கள் செய்து பாரே"*

என பரராசசேகரம் வலிநோயில் சூடு சிகிச்சை செய்யுமாறு தெரிவித்துள்ளது.

*4. கண்ணுரித்தல்*

காசநீர் படலமாக படிந்து கண்பார்வையை மறைக்கும் போது கண்பாடு உரித்தல் என்னும் கண் உரித்தல் சிகிச்சையைச் செய்தனர். இதற்காக முப்பட்டையாக தயாரிக்கப்பட்ட ஊசியையும், முன்பகுதி தட்டையான சலாகைகளையும் பயன்படுத்தி வந்தனர்.

*5. இரத்தம் வாங்குதல்*

விலாவில், முன்கைவிரலில், நரம்பினில் ஆய்ந்து அதில் நீரூசியால் குத்தி நடுநரம்புக்குள் ஒரு எள்ளளவு உட்செலுத்தி இரத்தம் வாங்குதல். வயிற்றில் ஒரு அங்குலம் மிஞ்சினால் கடினமாகும். செய்முறை மாத்திரை அளவு தப்பினால் மரணம் ஏற்படலாம். திடமறிந்து மருத்துவம் செய்க. "சதை அறிந்து கத்தி நாடுக" சதை அளவுக்கு மீறி கத்தி போகக்கூடாது. போனால் உளளுறுப்புகள் வெட்டுப்பட்டுவிடும். வாதநீர் குத்திவாங்கல் - பாதம், முழந்தாள் கீழ்பறள், கெண்டை நரம்பினில் நீரூசியால் குத்தி நீரை வடியவிடுதல் அல்லது வாங்குதல்.

*6. கீறல்*

கீறல், அறுத்தல், வெட்டுதல், பிளத்தல், தைத்தல் முதலியன அவற்றிற்குரிய சத்தகம் எனப்படும். சிறிய தகடு போன்ற கத்திகளைக் கொண்டு இவற்றை செய்தனர். பின்னர் ஊசி நூல் கொண்டு தைத்துக்கட்டினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவை சிகிச்சையின்போது தைத்த பின்னர் கொதி உப்புநீரில் சுத்தமான பஞ்சினை அல்லது வெள்ளை பருத்தி துணியை நனைத்துப் பிழிந்து வைத்து கட்டினர்.

*7. தொக்கனம்*

தொக்கனம் என்பது உடலைப்பிடித்தல், தேய்த்தல், அமர்த்துதல், தட்டுதல், உருவுதல், நீவுதல், முறித்தல் முதலியவற்றைக் குறிக்கும். எண்ணெய் பூசியும் செய்வர் எண்ணெய் பூசாமலும் செய்வதுண்டு. வசையாத உடல் உறுப்புகளை வசைப்படுத்துவதற்கும், இயங்காத கை, கால்களை இயங்க வைப்பதற்கும் சூம்பிய அவயவங்களை பருக்கச் செய்வதற்கும் விறைப்பு, பிடிப்பு சோர்வு முதலியவற்றைப் போக்குவதற்கும் தொக்கனம் செய்யப்படுகிறது.

*8. சலாகையிடல்*

சலாகையிடல் என்ற பிற பொருட்களை உடலுள் தேடுவதற்கும் குழாய்களின் அடைப்பினை நீக்குவதற்கும் புரையோடிய புண்களை அளப்பதற்கும், காது, மூக்கு குழல் பகுதியில் உள்ள பிற பொருட்களை எடுப்பதற்கும் உதவுகின்ற சலாகையினைப் பயனப் டுத்துதல்.

*9. கொம்பு விடல்*

இரத்தம் வாங்குதல், கொம்புவிடல், முனை கடுகளவுக்கு கூராக்கப்பட்ட வளைந்த மிருகக் கொம்பினை அடிப்பகுதி மூன்று அங்குல அகலமுடையதாகவும் தோற்பையில் காற்று புகாதவாறு இறுக்கமாக கட்டப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். ஊசியால் குத்தப்பட்டோ, சத்தகத்தால் கீறப்பட்டோ உளள் இரத்தக்குழாயில் கொம்பின் முனையை வைத்து, தோற்பையை இழுக்க இரத்தம் உறிஞ்சி வாங்கும்.

*10. கலிக்கம்*

மயக்கநிலையில், சன்னியில் விடக்கடியின்போது சில சாறுகளை அல்லது மருந்துகளை சில துளிகள் கண்ணில் விடுதல், மயக்கம், விடம் தீர்ந்த பின் மாற்று மருந்துகள் கண்ணில் விடவேண்டும்.

*11. நசியம்*

சில சாறுகளை/சில மருந்துகளை சில சொட்டுகள் மூக்கில் விடுதல். தலை நோய்களில், சன்னியில், விடங்களில் நாசி சம்பந்தப்பட்ட நோய்களில் செய்யப்பட்டு வருகிறது.

*12. புகையுண்ணல்*

தணலில் சில மருந்துகளையிட்டு, புகைக்கச் செய்து அப்புகையை நேராக நோயுற்ற அவயங்களில் படச் செய்தல், சூலை, புற்று, தொய்வு, நீரேற்றல், நீர்ப்பாய்ச்சல், பவுநத்ரம், தொண்டை நோய்களில் புகையுண்ணல் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## 5. சிவஞான சித்தியார் நூல்

அறுவை மருத்துவர் பற்றி சிவஞான சித்தியார் பாடல்

*"மண்ணுளே சிலவியாதி மருத்துவனருத்தி யோடுந்
திண்ணமா யறுத்துர் கீறித் தீர்த்திடுஞ் சிலநோயெல்லாங்
கண்ணிய கட்டி பாலுங் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பான்
அண்ணலு மின்பதுன்ப மருத்தியே வினை யறுப்பான்."*

## 6. முறிவுசாலி நூல்

வன்மம் என்றால் என்ன என்பதை முறிவுசாலி என்ற நூலில் இடம்பெற்றுள்ள பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

*"கேளப்பா தடியடிகள் படுதலாலும்
கெடியான் எறிவிசைகள் கொள்ளலாலும்
வாளப்பா கட்டை குற்றி தட்டலாலும்
மாற்றானின் கைப்பிடிகள் படுதலாலும்
மேலப்பா ஆகாச மதிலே நின்று
மெய்மறந்து கைமறந்து விடுதலாலும்
தானப்பா பற்பலவாம் விதத்திலே
சங்கையில்லாகக் காலமது சாருந்தானே"*

காலம் என்பதுதான் வன்மம், நரம்புகளில் தட்டு வதால் உணர்விழப்பது, சில நரம்புகளில் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட நேரத்தில் தட்டப்படுவதால்தான் ஒருவன் உணர்விழப்பான். அவருக்கு வர்மம் கொண்டிருக்கிறது. வன்மத்தின் மறுபெயர்கள் இரகசியம், மர்மம், ஒடிவு, முறிவு, கருவி.

"வர்மக்கலையை சான்றோர்கள் எனப்படும் பண்டைய சமூகத்தினர் வழிவழியாக தங்கள் குடும்பத்தார்க்கு மட்டுமே சொல்லிக் கொடுத்துள்ளனர். "சான்றோர் குல இரகசியம்" என்ற ஓலைச்சுவடி சான்றோர்க்கல்லால் "மற்றவர்க்கு ஈயாரே" என்று தெரிவிக்கின்றது. பதிற்றுப்பத்து நூல் சான்றோர் மெய்மறை என வர்மக்கலையை எடுத்துரைக்கிறது. என்று பேராசிரியர் ம.இ.மரியஜோசப் (பாளையங் கோட்டை) குறிப்பிட்டுள்ளார்.

பரராசசேகரம் நூலில் 12000 பாடல்களில் தற்போது 7000 பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

செகராசசேகரம் 2000, செராசசேகரமாலை தட்சண கைலாச புராணம் என்னும் நூல்கள் செகராசசேகரன் என்ற மன்னனால் இயற்றப்பட்டவையாகும். இவை பெரும்பாலும் அறுவை மருத்துவம் பற்றியே பேசுகின்றன. செகராசசேகரன் சக்கரவர்த்தி சிறப்பு தேர்ச்சி பெற்ற அறுவை மருத்துவன் ஆவார். பெரும்பாலும் அறுவை மருத்துவம், அதன் சிறப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி தெரிவிக்கும் செகராசசேகரம் என்ற மருத்துவநூல் 2000 பாடல்களைக் கொண்டது. இந்நூலில் இன்று 200 பாடல்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளன.

## 7. செகராசசேகரம் 2000 நூல்

கி.பி.14ஆம் நூற்றாண்டில் சிங்கையாரியச் சக்கரவர்த்தி செயவீரன் இலங்கை முழுவதும் 20 ஆண்டுகள் ஆண்டான் என செகராசசேகரமாலை என்ற இவனியற்றிய சோதிட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மன்னனின் கோட்டைகாமம் கல்வெட்டு இவ் வெற்றிகளுக்கு பின் இவன் செகராசசேகரன் விருது பெற்றான். இம்மன்னன் இயற்றிய மருத்துவநூல்தான் செகராசசேகரம் 2000 ஆகும்.

சிங்கைநாட்டு மருத்துவர்கள் உடற்கூற்றியலை எவ்வாறு கற்றார்கள் என்ற விபரம் பின்வரும் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*இயம்பிய வடலுமுனு மென்பு நாடிகளு மற்றும்*
*செயம் மெனு சிங்கை நாடன் செகராச சேகரன்மா*
*லுயர்ந்த வாள் வடகக் ராக முருட்டிய களத்தின் மீதே*
*அயஞ்சிறி துளதீர வளந்தளஞ் தரித்த தாமே.*

இப்பாடலில் சிங்கை நாட்டின் செகராசசேகரன் எனும் அரசன் வாள், போர்க்களத்திலும் வெட்டி வீழ்த்திய வடக்கர்களின் உடலைக் கீறி உறுப்புகளை அளந்து ஆய்ந்து ஐயம் சிறிதுமின்றி கற்றார்கள் என்று செகராசசேரம் நூல் தெரிவிக்கின்றது.

## 8. அகத்தியர் நயனவிதி, நாகமுனி நயனவிதி நூல்கள்

அகத்தியர் நயனவிதி எனும் நூலில் கண்ணோடு தொடர்புடைய பிணிகளுக்கு பயன்படுத்தப்படும் இருபத்தியெட்டு அறுவைக் கருவிகள் காணப்படுகின்றது. கண்ணில் தோன்றும் காசநோய் பற்றியும் Cateract) அதனை அறுவை சிகிச்சை செய்து நீக்குவது பற்றியும் காணப்படுகிறது. கண் அறுவைச் சிகிச்சையில் தமிழர்கள் பெற்றிருந்த ஆற்றலையும் திறமையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

*அறுவை மருத்துவத்துடன் தொடர்பாக பதிவுகள்*

மகப்பேற்று அறுவை சிகிச்சை செய்வது பற்றியும் 7ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் மங்கலை அறுவைச் சிகிச்சை செய்தது பற்றியும் தெரிவித்துள்ளார்கள். மேனாட்டு விஞ்ஞானிகளால் தற்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கபால அறுவை சிகிச்சையும் அகத்தியர் செய்தார் என்று வரலாறு கூறுகிறது. காசி மன்னன் திலோதாசன் சிரசில் நோய் ஏற்பட்டபொழுது தலை எலும்புகளை அறுத்துத் திறந்து மூளையில் சிகிச்சை மிக நுணுக்கமாக மூளை பாதிக்கப்படாமலும் நிலைகுலையாமலும் மாசித்தர் அகத்தியர் அறுவை சிகிச்சையை நிகழ்த்தினார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மேனாட்டு அறுவை சிகிச்சை நிபுணர்கள் பலர் அகத்தியரை அறுவைச் சிகிச்சைக்கு ஐயராக வணங்கி வருகிறார்கள். கேலன் என்ற மன்னனின் மனைவி விஸ்பலா கணவன் போருக்குச் சென்றபோது கணவனுடன் தானும் சென்று எதிரிகளை எதிர்த்துப் போரிட்டாள். அப்பொழுது எதிரிகளின் ஆயுதங்களால் அவருடைய கால் ஒன்று ஒடிந்துபோனது. அகத்தியர் அவருக்கு இரும்பாலான காலை பொருத்தி இணையச் செய்தார் என்ற வரலாறு இருக்கு வேதத்தில் (118-08) காணப்படுகிறது. இதிலிருந்து இரும்பின் பயன்பாட்டை அகத்தியர் அறிந்திருந்தார் என்பது தெரியவருகின்றது. ஆனால் அகத்தியர் இருக்கு வேதகாலத்திற்கு முற்பட்டவர் என்று அறியப்படுகிறது.

மேற்கண்ட கூற்றின் மூலம் எமது முன்னோர்கள் நவீன விஞ்ஞான காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர்களுக்கு செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் முறையைக் கையாண்டிருந்தனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. தமிழர்களின் மருத்துவ விஞ்ஞானம் அக்காலத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை இதிலிருந்து அறியலாம். அமெரிக்க ஆங்கில டாக்டர்களால் செய்ய முடியாது என்று தெரிவிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்து புகழ்பெற்ற ஆசுரிகளாக சிங்கை மன்னர்கள் இருந்தார்கள் என வரலாறு கூறுகிறது.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இராசா குலசேகரம் உடலில் ஊசிகளைக் குத்தி ஆயுதம் பாவித்து குறுக்கே இருந்த பிள்ளையைப் பெறுவித்ததாக பேராசிரியர் வே.இராமகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1918இல் இராசா இராசசிம்மன் அறுவை சிகிச்சை செய்து குணமாக்கிய யாழ்ப்பாணம் மரக்காலை வேலுப்பிள்ளை யின் வெட்டப்பட்ட தாடையைப் பொருத்தி வெற்றி கண்டார் மானிப்பாய் ஆங்கில வைத்திய கல்லூரி அதிபரும், ஆங்கில வைத்திய சாலையின் தலைமை டாக்டருமாகிய கிறீன் கி.பி. 1865இல் பிள்ளை குறுக்கே இருந்த கர்ப்பிணிக்கு பெறுவிக்க எடுத்த முயற்சி பலன்தரவில்லை. அறுவை சிகிச்சை இன்றி குழந்தையை பெறுவிக்க முடியாது என தெரிவித்துவிட்டார். அறுவை சிகிச்சையை விரும்பாத கணவன் இராசா குலசேகரனிடம் (ஆறுமுகம்) மருத்துவம் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். இராசா குலசேகரம் கர்ப்பிணியின் உடலில் சில இடங்களில் ஊசிகளைக் குத்தி ஆயுதம் பாவித்து குழந்தையை வெற்றிகரமாக பெறுவித்தார். கி.பி. 1872இல் டாக்டர் கிறீன் பிரசவம் பார்த்த பெண்ணின் கர்ப்பப்பை பிறழ்ந்துவிட்டது. டாக்டர் கிறீன் கையினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிசெய்வதும் அது திரும்ப பிரண்டுவிடும். இது ஒரு கிழமையாக தொடர்ந்தது. கணவன் இராசா குலசேகரத்திடம் மருத்துவம் பார்க்க விரும்புவதாக மீண்டும் கூறினார். இரசா குலசேகரம் ஒரு சிறிய சீசாவை நோயாளியின் மூக்கில் வைத்து நன்றாக மூச்சை உள்ளிழுக்கச் சொன்னார். ஒருகணப் பொழுதில் கருப்பை தானாகவே தன்னிலைக்குச் சென்றது. ஒருகணப் பொழுதில் குணப்படுத்தியதைக் கண்டு டாக்டர் கிறீன் ஆச்சரியமடைந்தார். டாக்டர் கிறீன் இராசாகுலசேகரத்தை "The great Physician of Ceylon" என்று புகழ்ந்து பாராட்டினார். நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கு அலோபதி மருத்துவத்தைத் தமிழில் கற்பித்தார். ஒருவருடகாலம் கிறீன் டாக்டர் இராச குலசேகரத்திடம் தமிழ் மருத்துவம் கற்றார். இதனையே "பெரிய பரிகாரியார்" என மக்களும் மருத்துவர்களும் போற்றினர். இதனை பண்டிதரத்தினம் C.S. நவரத்தினம் இச்சம்பவத்தை "இலங்கைக்குப் புகழ் சேர்த்தவன் தமிழ் மருத்துவர் ஸ்ரீ ஆறுமுகம் சுழிபுரம் பெரியபாரிகாரியார்" என்று 26.01.1969 வீரகேசரியில் குறிப்பிட்டுள்ளார்.

20ஆம் நூற்றாண்டில் பண்ணாகத்தைச் சேர்ந்த டாக்டர் சீனிவாசகம் என்புமுறிவில் விசேடத்துவம் வாய்ந்தவராகவும் திறமையாகவும் என்பு முறிவுகளைக் கையாண்டார். பனை மரத்தில் கள் எடுப்பதற்கு தொழில் புரிபவர் பனையின் உயரத்தில் இருந்து தொழில் செய்யும்போது கீழே விழுந்து, எலும்பு உடைந்து சிறுசிறு துண்டாக வெளிவந்த நிலையில் அவற்றைச் சேகரித்து, சரியாகப் பொருத்தி மருந்து கட்டினார். குணமடைந்த பின் எந்தவித அமைப்பு மாறுபாடும் இல்லாமல் காணப்பட்டது. இவ்வாறு தொழில்நுட்ப வசதி எதுவுமின்றி திறமையாக செய்துள்ளமை வியக்கத் தக்கது. இவ்வாறாக கைதேர்ந்தவராக பலர் பல்வேறு துறைகளில் கடந்த நூற்றாண்டுகளில் வாழ்ந்து சேவையாற்றி உள்ளார்கள் என்பது கண்கூடு.

மேல்நாட்டில் கி.பி. 1543இல் தான் முதன் முதலாக உடலை வெட்டிப் படித்தார்கள் என டாக்டர் சிற்சபை தெரிவித்துள்ளார். கி.பி. 1843இல் ஈதர் விறைப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி. 1881இல்தான் குளோரபோம் மயக்க மருந்து பாவனைக்கு வந்தது. அதற்கு முன் நோயாளியை அமர்த்திப் பிடிச்சு அறுவை சிகிச்சை செய்வர். கி.பி.13ஆம் நூற்றாண்டில் சிங்கை அரசர்கள் அங்குசத்தினால் வன்மத்தில் குத்தி விறைக்கப்பண்ணி நோயாளிகளுக்கு வலியின்றி அறுவைச் சிகிச்சை செய்து வந்தனர் என்பதை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

குறிப்பு: பொதுவாக சித்தர்கள் நூல்களில் அதாவது சித்தர் இலக்கியங்களில் தனியே மருத்துவம் என்று கூறப்படவில்லை. அவற்றில் மாந்திரிகம், சைவசித்தாந்தம், இலக்கணம், சோதிடம் போன்ற எல்லா விடயங்களுமே கலந்து சொல்லப்பட்டிருக்கும். ஏனெனில் மீண்டும் பிறப்பு, இறப்பு இல்லாத நெறியை நாடி நின்றமையால் (ஞானநெறி) ஒவ்வொன்றையும் பிரித்து நூல்களை எழுதவில்லை.

## முடிவுரை

தமிழ் மருத்துவத்தில் அறுவை மருத்துவம் எவ்வாறு மேலோங்கி இருந்தது என்பதையும் அறுவை மருத்துவம், அறுவை மருத்துவ பிரிவுகள், அறுவை மருத்துவர் கருத்துகள் என்பன பற்றியும் சித்தர் இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது. மேலும் எந்தெந்த காலப்பகுதியில் என்ன வகையான அறுவை மருத்துவங்களை அப்போதைய காலப்பகுதியில் ஆட்சி செய்த அரசர்கள் கையாண்டார்கள் என்பதைப் பற்றிய தகவல்களையும் அறியக்கூடியதாக உள்ளது.

அந்த வகையில் திரேதாயுகத்தில் இராவணனால் இயற்றப்பட்ட அறுவை மருத்துவநூல், துவாபர யுகத்தில் முருகப்பெருமானால் இயற்றப்பட்ட முருகசாலம் என்ற அறுவை மருத்துவநூல், அகத்தியரால் இயற்றப்பட்ட பேரகத்தியம் 21000 அகத்தியர் நயனவிதி 500, அகத்தியரின் சத்திராயுத விதி, பரராசசேகரம் 12000, செகராசசேகரம் 2000 போன்றவற்றில் அறுவை மருத்துவம் சார்ந்த கருத்துகளை நோக்கினோம்.

அறுவை மருத்துவப் பிரிவுகளான கண் அறுவை சிகிச்சை, பொது சத்திர சிகிச்சை, அவயவங்கள் அறுவை சிகிச்சை, செயற்கை அவயவங்கள் பொருத்துதல் என்பவற்றில் சிறப்புற்று இருந்தமையை சித்தர் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அத்தோடு தமிழ் மருத்துவ அறுவை சிகிச்சை அடிப்படையே நவீன மருத்துவத்தில் அறிவியல் ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளது என்பதைதான் சுசுருதர் அறுவை மருத்துவ தந்தையாக போற்றப்படுவதைக் கொண்டு அறிய முடிகிறது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மருத்துவத்தின் அறுவை சிகிச்சை பிரிவானது மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வருகின்ற நிலைமையை அவதானிக்க முடிகிறது. எனவே சுதேச மருத்துவம் சார்ந்த கற்கைநெறியை முன்னெடுக்கும் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் அறுவை சிகிச்சைமானியில் சிறப்புப் பட்டத்தை (Master of Surgery) பட்டபின் கற்கை நெறியாக கொண்டுவருவதன் மூலம் அறுவை மருத்துவத்தை சமூக அந்தஸ்தினூடாக தேசிய அங்கீகாரத்தைப் பெறவழிவகுக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணத்தின் சாட்சியங்கள்

சிவ. இராஜேந்திரன்

மாவத்தகம நகரத்தில் இருக்கும் 'எரிபொருள் நிரப்பாத நிலையங்கள்' இரண்டிலும் டீசல் வரிசை இரண்டு கிலோ மீற்றர் தூரம் நீண்டிருந்தது. பெற்றோல் போலிங்குக்கும் குறைச்சல் இல்லை. ஏறத்தாழ அதே அளவு தான். லாம்பெண்ணெய் பற்றி பேசத் தேவையில்லை. காரணம் அப்படி ஒரு பொருள் இனிமேல் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை மக்கள், இந்நாட்டின் 'வரிசைப் பாடசாலைகளில்' அனுபவமாக கற்றிருந்தனர். நாடு முழுவதும் இதுதான் நிலை. பெற்றோல் 'செட்டுகளில்' சண்டை, அடிதடி, பொலிஸ் தாக்குதல், இராணுவத்தின் உதை, மயங்கி விழுதல், வாகனத்தில் இருந்தவாறே மரணித்தல், கீழே விழுந்து மரணித்தல், வீதிகளை மறைத்து போராடுதல், அநீதியான விநியோகத்தை எதிர்த்து குரலெழுப்புதல், பசி தூக்கம் மறந்து கியூ வரிசையில் காத்திருத்தல், பாதைகளில் படுத்து உறங்குதல், ஒன்றுமே கிடைக்காமல் விரக்தியுடன் வீடு செல்லுதல் என நீண்டு சென்றது எரிபொருள் கதை.

குருநாகல் பக்கமாக இருக்கும் இரண்டாவது பெற்றோல் செட்டில் நீண்டிருக்கும் டீசல் போலிங்கில் எழுபத்தைந்தாவதாக நிறத்தப் பட்டிருப்பது தான் ராமநாயக்கவின் லொரி யாகும்.

"அத டீசல் லெபெய்த (இன்று டீசல் கிடைக்குமா?)

ஒவ்வொருவரும் அடுத்த வாகன சாரதிகளிடம் கேட்கும் ஒரே கேள்வியே இது தான்.

இதற்குப் பதில் சொல்லக் கூடிய நிலை யாரிடம்தான் இருக்கின்றது. அமைச்சருக்கே தெரியாத விடயமல்லவா? ஆட்களுக்கு விளங்கவா போகின்றது?

"வரும்... ஆனால் வராது"

"வந்தாலும்... வரும்"

"இன்றைக்கு வராதாம்..."

"நாளைக்கு வருமாம்..."

இந்த நம்பிக்கையில்தான் சாரதிகள் கடந்த நான்கு ஐந்து நாட்களாக வரிசையில் தவம் கிடக்கின்றார்கள்.

ராமநாயக்க தம்புள்ள நகரத்திலுள்ள விற்பனை நிலையத்திலிருந்து மரக்கறி கொண்டு சென்று மாவத்தகம நகரத்தில் விற்பனை செய்யும் ஒரு சிறு வியாபாரிதான்.

தகரத்தினால் அமைக்கப்பட்ட மரக்கறி கடை யில் அவனது மனைவி சந்துனி வியாபாரத்தைக் கவனித்துக் கொள்வார். இடையிடையே ராமநாயக்கவும் உதவி செய்வார். இவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள் மூத்தவள் ஹிரன்யா அடுத்தவள் நிதாரா கடைசி மகிசா. மூவரும் பாடசாலை செல்லும் பிள்ளைகளாவர்.

லீசிங் வாகனம் மாதம் இருபதாயிரம் கட்ட வேண்டும். சந்துனியின் கழுத்தில் காதில் இருந்தவற்றையெல்லாம் விற்று வாங்கிய வாகனம். டீசலுக்கு, சேர்விஸூக்கு, டயருக்கு என பெருந்தொகை பணம் தேவை.

"வாகனத்தை விற்று விடுவோம்..."

"அதை வைத்துதான் வாழ்க்கையே ஓடுகிறது ... அதுவும் இல்லை என்றால் என்ன செய்வது..."

"வேறு தொழில் கிடைக்குமா?... ஏதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் செய்து பிழைப்பதென்றால்... நிலமும் இல்லை..."

"நிலமுள்ளவர்களுக்குப் பசளை இல்லை..."

அவர்களது இரவுகளை இந்த உரையாடல் தான் பிடித்து வைத்திருந்தது. மௌனமும், பெருமூச்சும், விடை தெரியா வினாக்களும் குடும்ப சண்டைகளைக் கூட உருவாக்கி இருந்தது.

ராமநாயக்க குடும்பத்துக்கு, கடை வாடகை, லைட் பில், தண்ணி பில் என ஒரு தொகை தேவை. 'நல்ல சாப்பாடு' சாப்பிட்டு ஆறு மாதங்களாகின்றன. நாசமாகப் போன திருடர்களின் ஆட்சியில் பாடசாலைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. பிள்ளைகளை டியூசன் கடைகளுக்குத்தான் அனுப்ப வேண்டும். அதற்காக ஆறாயிரம் ரூபா கட்ட வேண்டும். கொப்பிகள், பென்சில், பேனை போன்றவற்றில் விலை எல்லாம் ஐந்து மடங்கு கூடிவிட்டது. எழுதுவதற்கு பேப்பர் இல்லாத கீழ் நிலை.

"நாம் எப்படியோ வாழ்க்கையை ஓட்டி விட்டோம்... பிள்ளைகளின் எதிர்காலம் என்ன வாகும்... நினைக்கவே பயமாக இருக்கிறது... படிப்பும் இல்லை... வீட்டிலே சும்மா இருந்து போனை நோண்டிக் கொண்டு இருக்கிறார்கள்... என்ன செய்வது..." பலரது ஏக்கம் இதுதான். பணக்காரர்களுக்கு என்றால் இது ஒரு பிரச்சினையே இல்லை. அவர்களது பிள்ளைகள் உலகிலுள்ள பணம் புரளும் பாடசாலைகளில் சுகித்திருப்பார்கள். சொர்க்கம் காண்பார்கள்.

கடந்த ஐந்து இரவுகளாக ட்ரைவர்மார்கள் ஒன்று கூடி பல விடயங்களைப் பரிமாறிக் கொண்டனர். குடிநீர் விலையேற்றம் முதல் 'கோல்பேஸ் போராட்டம்' வரையுள்ள அனைத்து விடங்களும் அலசப்பட்டன.

விலை அதிகம் என்பதால் பல முறை விசாரித்து, சண்டை பிடித்து வாங்கிய உணவுகளைப் பறிமாறி சாப்பிட்டனர். அருகிலிருந்த வீடுகளில் உள்ளவர்களும் அவர்களோடு இணைந்து கொண்டனர். இரவு நேரங்களில் 'டோலக்' இசையுடன் பாடல்கள் கேட்டன. தாங்கள் படும் கஸ்டங்களை அதனால் உண்டான கோபங்களை அவை சத்தமாக வெளிப்படுத்தின.

"திருட்டுக் கூட்டம் அழியுமா? —அவர்

பருத்த உடம்பு சரியுமா?

நல்ல செய்தி கிட்டுமா?

நாளை டீசல் கிடைக்குமா? டக்கர... டக்கர... டக்கர... டக்கர.."

பாடல்களின் சத்தம் விடியும் வரை கேட்டன. ஒருவர் முடிக்குமிடத்தில் அடுத்தவர் தொடங்கி துயரங்களைப் பாடலாகப் பாடினர்.

தமது பிரச்சினையைத்தான் பாடுகிறார்கள் என தெரிந்துக் கொண்ட ஊர் மக்கள் அவர்களோடு இணைந்து 'கோரசாகப்' பாடினர். 'இனம் இனத்தைச் சேரும்' என்பது உண்மை தான்.

இது பணப் பேய்கள் வாழும் நாட்டில், கஸ்டப்படும் மக்களைக் கொண்ட இனம்.

இன்று ஆகஸ்ட் முதலாம் திகதி. எரிபொருள் வரிசையில் இருந்து மரணித்தவர்களின் எண்ணிக்கை இருபத்தாறாக பதிவானது. மக்களிடம் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு ஆள்பவர்களின் காதுகளுக்கு இந்த செய்தி சென்று சேர்ந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களுக்கு வேறு 'சோலிகள்'. ஆனால் துன்பப்படும் ஏழைகளுக்கு, வரிசையில் நாட் கணக்கில் காத்துக் கிடப்பவர்களுக்கு எச்சரிக்கை, மனக்குழப்பம், பிரஸர் ஏறுதல், பயம், நடுக்கம், கண்ணீர்... குடும்பத்தை நினைத்து வேதனைப்படுதல்... வழக்கமாகி விட்டது.

அடுத்த நாள் விடிந்து விட்டது.

"இன்று டீசல் வருமாம்..." காலை நேரத்து உறுதிப்படுத்தப்படாத செய்தி.

எல்லோரும் உசாராகி விட்டனர். ஒரே இரைச்சல்.

சில வாகனங்கள் ஸ்டார்ட் செய்யக் கூடிய நிலையில் ஏனையவை தள்ளு வண்டி தான். அவை ஐந்து நாட்களாக ஓடாமல் வீதியில் நின்றால் 'பெற்றரியும்' தூங்கிவிடும்தானே.

பெரிய லொறிகளைத் தள்ளுவது இலேசான காரியமா... கொஞ்சம் பிந்தினாலும் கள்ளத் தனமாக அடுத்த வாகனமொன்று வந்து சேர்ந்து விடும்.

இரண்டு வாகனங்களுக்கான இடைவெளி ஒன்று அல்லது இரண்டு அங்குலம் தான். இதை தொடர்ந்து பாதுகாக்க வேண்டும். அடுத்த வாகனத்தோடு மோதி விட்டால் அவ்வளவு தான்.

ராமநாயக்கவின் லொறிக்கும் ஸ்டார்ட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. டீசல் கடைசிக் 'கட்டையைத்' தாண்டிவிட்டது.

சரியாக ஏழு மணி.

அவனுக்கு தனது பிள்ளைகளின் நினைவு வந்தது. வழமையாக முத்தம் கொடுத்து ஸ்கூலுக்கு அனுப்பும் நேரம்.

தான் வைத்திருக்கும் சிறிய போனிலும் 'சார்ஜ்' குறைந்து விட்டது.

பிள்ளைகளோடு பேச வேண்டும். போனை எடுப்பதற்கும் வீட்டிலிருந்து கோல் வருவதற்கும் சரியாக இருந்தது.

"அப்பா... சூட்டி பேசுகிறேன்...." மகிசா தான்.

துவ... (மகளே)

"வேர்க் புக் வாங்கி விட்டீர்களா... ம்... புது சப்பாத்து... பேர்த்டேக்கு சட்டை... எல்லாம் வாங்கிக்கொண்டு வாங்க... பார்த்துக்கொண்டே இருப்பேன் மறக்க வேண்டாம்." கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள்.

"எல்லாமே வாங்கித் தருவேன்... தங்கமே..." பொய் சொல்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

அடுத்தவளும் பேசினாள்.

"தேத்தண்ணி குடித்தீர்களா...? சாப்பிட் டீர்களா...? டொய்லட் தண்ணி வசதி எல்லாம் இருக்குதா...? இன்று டீசல் கிடைக்குமா...? வந்து விடுவீர்களா...?" வளர்ந்த பிள்ளையின் கதை.

காலையில் பால் தேநீர் இல்லாமல் அப்பாவுக்கு நாள் விடியாது... காலை சாப்பாடு அதை விட அவசியம். வயிற்று வலி, கேஸ்ட்றிக் வயிற்றோட்டம், வாந்தி என அப்பா கஸ்டப்பட்ட நாட்களை அவள் மறக்கவே மாட்டாள். தேநீர் தருவதும் காலை உணவை நேரத்துக்கு சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்துவதும் நிதாரா தான்....

பெரிய மகளும் பேசினாள்.

"மருந்து குடித்தீர்களா....? இரவு தூங்கி னீர்களா....? டீசல் கிடைக்காவிட்டால் பரவா யில்லை வீட்டுக்கு வந்து விடுங்க அப்பா.." அக்கறையுடன் கவலையும் வெளிப்பட்டது.

"மூன்று பிள்ளைகளுக்கும் டியூசன் சல்லி கட்டி விட்டேன்... ஒன்றையும் யோசிக்க வேண்டாம்... கவலைப்படாமல்... இருங்க... கஸ்டமாக இருந்தால் வந்து விடுங்கள்... எப்படியாவது சமாளிப்போம்... கடையில் மரக்கறி எல்லாம் முடிந்து விட்டது..." மனைவி சந்துனிதான்.

"கரண்ட பில்... தண்ணி பில்... வந்ததா?.."

"ஆமாம்... இரண்டு மாதங்கள் கட்டாத படியால்... கரண்ட்டுக்கு 'ரெட் பில்' வந் துள்ளது... நான் எப்படியும் கட்டி விடுவேன்... ஒன்றுக்கும் யோசிக்காதீங்க...." ஆறுதலாக பதில் சொன்னாள்.

"ம்... ம்... சரி பிள்ளைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்..." வேறு என்ன சொல்வது.

அவளிடம் போதுமான பணம் இல்லை என்பது ராமநாயக்கவுக்கு நன்றாகத் தெரியும்.

நீண்ட பெரு மூச்சை விடுவதைத் தவிர வேறு ஒன்றையும் செய்ய முடியவில்லை.

ஓய்வில்லாத ஓட்டம், செலவுகளை சமாளிக்க முடியாமை... கடன் தொல்லை... லொரியின் லீசிங் பிரச்சினை, கடைச் சாப்பாடு போன்றன அவனுக்குப் பல நோய்களைக் கொண்டு வந்து விட்டிருந்தன.

"எதற்கும் கவலைப்படக் கூடாது... லேசான மன நிலையில் இருக்க வேண்டும். ரெஸ்ட் தேவை... பிரசர்... சுகர்.... கேஸ்ட்ரிக்... நரம்பு பிரச்சினை... மூட்டு வலி... எல்லாம் இருக்கிறது..." என்று டாக்டர் அடுக்கிக் கொண்டு போனதெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது.

கடந்த நான்கு மாதங்களாக கிளினிக்கும் போகவில்லை. அதற்கு முழு நாளையும் ஒதுக்க வேண்டும்... அதைவிட மருத்துவருக்கும் மருந்துக்கும் பத்தாயிரம் ரூபா பணமும் இருக்க வேண்டும். முக்கியமான மருந்துகள் கடையில் இல்லை என்பதை அவர் மட்டுமல்ல முழு நாடும் அறியும்.

"வியாபாரம் சரி வரும்... பிள்ளை கேட்டதை எல்லாம் வாங்கி தருகிறேன்..." என்ற கடந்த ஒரு வருடங்களாக அவர்களை ஏமாற்றி வந்த விடயங்கள் எல்லாம் ஏனோ ஞாபகத்துக்கு வந்தன.

அவர்கள் என்னதான் கேட்டார்கள். புது சட்டை, சப்பாத்து, படிப்பதற்கு புத்தகங்கள்... சொக்லேட்... இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பிரயிட் ரைஸ்... சந்துனிக்கு தொதல்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தகப்பன்களது மனதைக் குடைவது.... பொருளாதார கஸ்டம்... இயலாமைதான். இல்லாவிட்டால் பத்து லட்சம் பேர் கொழும்புக்கு அணி திரண்டு வந்திருப்பார்களா? திருடர் கோட்டைக்குள் புகுந்து இருப்பார்களா?

அடுத்த கோல் வந்தது.

"லிசிங் ஒழுங்காகக் கட்ட வேண்டும்... ஒரு மாதம் கழிந்து விட்டது... வாகனத்தை தூக்க வேண்டி வரும்... இன்றைக்கே கட்ட வேண்டும்... சரியா...."

"நான் டீசல் போலிங்கில் நிற்கிறேன்... வியாபாரமும் இல்லை..."

அதைப் பற்றி எங்களுக்குத் தெரியாது... பணத்தைக் கட்டுகிற வேலையைப் பாரு... டீசலுக்கு சல்லி இருக்கு... வாங்கித் தின்ன வசதி இருக்கு. லீசிங்கிற்கு சல்லி இல்லையோ..." டக் கென்று 'கோல்' கட்டாகி விட்டது.

ராமநாயக்கவுக்கு வியர்த்தது. சீட்டிலிருந்து கீழே இறங்கினார்.

வரிசையில் நின்ற ஏனைய ட்ரைவர்கள் கோபத்துடன் வேகமாக பெட்ரோல் செட் பக்கமாக சென்றார்கள்.

"வா மச்சான் இன்றைக்கு ரெண்டில் ஒன்று பார்க்க வேண்டும்..." டிப்பர் டரைவர் முகமட் தான்.

காலை வெயில் வெப்பத்தோடு கோப வெட்கையும் சேர்ந்து கொண்டது.

ஆயிரம் பேர் ஒன்றாகக் கூடி விட்டார்கள்.

"பெற்றோல்..."

"கொடு..."

"டீசல் ..."

"கொடு..."

"திருடர்களே..."

"நாட்டை விட்டு ஓடு..."

"அவர்களுக்குப் பண வயிறு..."

"எங்களுக்குப் பசி வயிறு..."

பல்வேறு கோசங்கள் வானைப் பிளந்தன. கோபமும் ஏக்கமும்... மனித சக்தியின் திரளால் பலம் கொண்டது.

பொலிஸ்காரர்களால் ஒன்றும் செய்ய முடியவிலை.

ராமநாயக்கவின் சத்தம் பலரையும் ஈர்த்தது. அவரது 'ஸ்பீக்கர்' தொண்டையிலிருந்து. கோபமும் வேதனைகளும் கோசங்களாக வெளிப் பட்டன. நெஞ்சு படபடத்தது. வியர்வை குளித்தது போல கால் வரை ஒழுகியது.

பொலிசாரும் உளவாளிகளும் அவரையும் முன்னணியிலிருந்த ஏனையோரையும் பட மெடுத்துக் கொண்டே இருந்தனர். அதைப் பற்றியெல்லாம் அவர்களுக்குக் கவலை இல்லை.

படடினியால் சாவதை விட போராடி சாகலாம் என்பதைத்தான் பலரும் கற்றுக் கொண்டுள்ளனர்.

ஊடகங்களுக்கும் கடுமையான கோபத்துடன் கருத்துகளைச் சொன்னார்கள்.

ஒன்பது மணிக்கு ஆரம்பமான போராட்டம் சுமார் பன்னிரெண்டு மணி வரை நீடித்தது. நேரம் செல்ல செல்ல போராடுவோரின் தொகையும் கூடியது. கோசங்களும் வானைப் பிளந்தன.

அதேவேளை இன்று டீசல் கிடைக்காது என்ற செய்தியும் பரவியது.

ஒரு வாரமாக போலிங்கில் காத்துக் கிடந்து ஒரு லீற்றர் டீசல் கூட கிடைக்காவிட்டல் என்ன செய்வது?

கோபம் அதிகரிப்பது போலவே கோசமும் அதிகமாகியது.

மூன்று ட்ரைவர்மார் மயங்கி விழுந்தனர். ஆம்பியுலன்ஸில் ஏற்றினார்கள். மயங்கிய நிலையிலும் கைகளை மெதுவாக அசைத்து போராடும்படி சைகை செய்தனர்.

ராமநாயக்கவுக்கு நெஞ்சுக்குள் ஏதோ அடைப்பது போல இருந்தது. தடுமாற்றம் கீழே விழப் போனவனை அருகில் நின்ற மொகமட் தாங்கிப்பிடித்தான்.

"மல்லி மம மகே லொரிக்காவ யண்ட ஒனே எக்கரகன அரங் யண்ட" (தம்பி நான் எனது லொரி இருக்குமிடத்துக்கு போக வேண்டும். கூட்டிக் கொண்டு போங்க..) மூச்சு வாங்கியது. முகம் வியர்வையால் நனைந்திருந்தது.

ஒரு நிமிடத்துக்குள் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். தானாகவே கதவைத் திறந்து ட்ரைவர் சீட்டில் அமர்ந்தார்.

தண்ணீரை முகத்தில் தெளித்து குடிக்கவும் கொடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெஹெத் ஏம் தியனவத அய்யே...?” (மருந்து ஏதும் இருக்குதா அண்ணன்...?

“பெஹெத் இவராய் மல்லி...” (மருந்து முடிந்து விட்டது தம்பி...)

வேறு ட்வைர்மார்களிடம் மருந்து இருக்கிறதா? என கேட்டுக் கொண்டே சிலர் சென்றார்கள்.

ராமநாயக்க சீட்டில் இருந்தவாறே முன்னாலுள்ள கண்ணாடியில் முகத்தைப் பார்த்தார். மூச்சு வாங்கியது. கண்கள் கலங்கின. குடும்ப உறுப்பினர் யாரும் அருகாமையில் இல்லையே. நீண்ட பெருமுச்சு. இரண்டு நிமிடங்கள் கடுமையான யோசனையில் இருந்தார்.

“மங் மெருனத் கமாக் நே... சட்டன் கரப்பாங்.... ரட்ட காப்பு ஹொருன்.... ஏலவாப்பங்...” (நான் செத்தால் பரவாயில்லை... நாட்டைத் தின்ற திருடர்களை விரட்டுங்கள்) சத்தமாக சொன்னார்.

“அபி இன்னவா... பயவெண்ட எப்பா... ஐயே. சட்டன் நத்தர கரன்ன நே..” (நாங்கள் இருக்கிறோம். பயப்பட வேண்டாம்.. போராட்டத்தை நிறுத்த மாட்டோம்..) இருவர் பலமாக சொல்வது அவருக்கு நன்றாகக் கேட்டது. முகத்தில் மலர்ச்சி.. ஒரு சிரிப்பு.

அவ்வளவு தான்.

ஸ்ரேரிங்கை பிடித்தவாறு அப்படியே சாய்ந்து விட்டார்.

“ஐயே... ராம்நாயக்க ஐயே....”

ரஞ்சன் டீ சேட்டைக் கழற்றி காற்று வீசினான். முதுகில் லேசாகத் தட்டிப் பார்த்தார்கள்.

“ம் ஹூம் ...”

எல்லாம் முடிந்தது.

போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரும் கூடி விட்டார்கள். கோபமும் வேதனையும் கோசங்களாக எழுந்தன. அவரை ஏற்கனவே அறிந்த, இந்த ஒரு வாரத்தில் மிகவும் நெருங்கிப் பழகிய அனைவரும் கதறி அழுதனர்.

வீட்டுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. “மாவத்தகமவில் டீசலுக்காகக் ஒரு வாரமாகக் காத்து நின்ற ஒருவர் மரணமடைந்தார். மூன்று பிள்ளைகளின் தந்தையான ராமநாயக்க என்ற நாற்பத்தைந்து வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானார்.” வானொலியிலும் தொலைக்காட்சியிலும் கடைசி செய்தியாக வாசிக்கப்பட்டது.

நாட்டில் அடுத்த ஜனாதிபதி யார்? யார் பிரதமர்? நாட்டை ஆளப்போவது யார்? என்பது தொடர்பான செய்திகளே பிரதான தலைப்புகளாக மக்களது காதுகளுக்கும், கண்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. பொது மக்கள் சொத்தைத் தின்றவர் எவரும் போலிங்கில் நிற்பதில்லையே.

## அஞ்சலி



கே. எஸ். சிவகுமாரன் 1966 முதல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக ஒலிபரப்பில் அறிவிப்பாளராக இணைந்தவர். தமிழில் மட்டுமன்றி ஆங்கில சேவையிலும் அறிவிப்பாளராகப் பணிபுரிந்த முதல் சாதனையாளர். சிறிது காலம் வானொலி நிலையத்தின் செய்திப் பிரிவிலும் ஒரு செய்தி ஆசிரியராகப் பங்களிப்பினை நல்கியவர். கல்வித் துறையில் ஒரு நல்லாசிரியராகவும், இலக்கியத்துறையில் பல படைப்புகளைத் தந்து, ஒரு சிறந்த திறனாய்வாளராகவும் முத்திரை பதித்து 2020ஆம் ஆண்டுக்கான 'சாஹித்ய ரத்ன' விருது பெற்ற பெருமைக்கும் உரியவர். இளைய தலைமுறையின் திறமைகளை அங்கீகரித்து, மனமாரப் பாராட்டுபவர். 30 தமிழ் நூல்களையும், 2 ஆங்கில நூல்களையும், இரண்டு ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்களையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

அண்மையில் மறைந்த அவரது இழப்பில் அவரது குடுபத்தவர், நண்பர்களுடன் இணைந்து தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகம் இதழும் துயர் பகிர்வதோடு இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் மகனோடு போகிறேன்

செ.சுதர்சன்

நான் மகனோடு போகிறேன்

என் கையை இறுக்கிப் பிடி மகனே!
'அப்பா இனியும் இறுக்கிப் பிடிக்காவிட்டால்....
எங்கள் வயல்களை
எங்கள் குளங்களை
எங்கள் வாழ்வுகளை
எரிப்பார்களா அப்பா..?

அவற்றை
உன் மாமன்தான் எரித்தான் மகனே!
அவன் இப்போ ஓடிப்போனானாம்!

'அப்பா
மாமா மன்ஜுக்கை கொடுக்கிறேன் என்றார்,
எப்படி மரணத்தை கொடுத்தார்?

மகனே..!
ஒரு சாம்ராஜ்யத்தை
கரித் துகளாய் யோசிக்கிறார்கள்.
நீ என்ன நினைக்கிறாய்?

'அப்பா..
அம்மா ஆச்சி அப்புவின் மூச்சுகளை,
எங்கப்பா புதைத்தீர்கள்?
ஒரு சாம்பல் துகள்
என்னை 'ராசா' என்று அழைக்கிறதே?

மகனே! போ...
நான் சொல்லும்படி
இந்தப் படிக்கட்டுகளின் மீது ஏறு...
இப்போது எட்டிப் பார்...!

'அப்பா..!
அதிகாரத்தின் கோவணம்
எப்படி
இவ்வளவு உயரத்தில் பறக்கிறது!
இது பழைய ராஜ்ஜியமா?
புதிய ராஜ்ஜியமா?

மகனே! இது பாழ்பட்டுப்போன ராஜ்ஜியம்!
இவர்களின் அரியாசனம்
குடும்ப அரக்கர்களால்
உனது அயலானின்
மூதாதையருக்குப் படையலானது!

'அக்காக்கள்
அண்ணாக்கள்
தம்பிகள்
இன்னும் எல்லோரையும் காண்கிறேன்,
எல்லா அறைகளிலும்...
அவர்கள் ஒவ்வொருவரும்
ஒரு சிரிப்பைப் பரிசளிக்கிறார்கள்!

அப்படியா மகனே!

'எங்கள் ராஜா எந்த
அறைகளிலும் இல்லையே அப்பா..!
அவர் சிரிக்கவும் இல்லை.
அவர் எங்கே அப்பா?

மகனே!
உனது புன்னகையை எரித்ததால்
அவருக்குப் பற்கள் இல்லாது போயிற்று!
உனது பால்மாவை மறுத்ததால்
அவருக்கு முகம் இல்லாது போயிற்று!
உனது இருப்பை மறுத்ததால்
அவருக்கு நெருப்பே பரிசாயிற்று!

மகனே!
ஒன்று சொல்கிறேன் மகிழ்ச்சியுறு!
பால்மா இல்லை என்று
நீ எறிந்த பந்தை
உன் மாமனார் அடித்தார்!
அவருக்கு
மைதானமே இல்லாமல் போயிற்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பா...!
ஒரு பாலின் தவிப்பில்
ஒரு ராஜ்ஜியமும்,
ஒரு மருந்தின் தவிப்பில்
ஒரு அரியணையும்
எப்படி எரிகின்றன?

மகனே...!
ஒரு காலத்தில் உனக்காக...
துவேசத்தின் முட்டைகள் நிரம்பிய
களஞ்சிய சாலைச் சாவிகளை
இடுப்பில் சொருகியிருந்தேன்!
அதனுள் பெருகிய பெருச்சாளிகள்
என்னையும் உன்னையும்
கொன்றதால்
எங்கள் ராஜாவும் எரிந்து போனார்!

'என்னப்பா சொல்கிறீர்கள்...
ராஜா இல்லாத நாடா?

மகனே...!
மயானத்தை அவர் பரிசளித்தார் உனக்கு!
யாப்பில்
நீ நாடாள்கிறாய் என்கிறார்கள்!
நானோ
நீ மயானத்தை ஆள்கிறாய் என்பேன்!

நீ ஆள்வது
நாடா மயானமா
என்பதை அறியேன் அன்பு மகனே!

ஆனால்....
நீயும் உன் மாமன் போல
ஒரு கோவணக் கொடியை
உனது வெற்றிக்கொடியாய்...
சிங்கள பௌத்தக்
கம்பத்திலேற்றி,
இன்னொரு காலத்தில்
கவிழ்ந்து நிற்பாய்!

என்னிடம் ஏதுமே இல்லை மகனே!
இதோ கழற்றித் தருகிறேன்,
பத்திரமாய் வைத்துக்கொள்
கொடியாய் பறக்க நீ ஏற்றும்
எனது கோவணத்தை...

10/07/2022

# எங்கள் மலையகம்

(சிறுவர் பாடல்)

எங்கள் மலையகம் எங்கள் மலையகம்
என்றே நாமும் பாடுவோம்
எழுக மலையகம் எழுக மலையகம்
என்றே நாமும் கூடுவோம்

சாதிகள் இல்லை பேதங்கள் இல்லை
சரி நிகர் சமனாய் வாழுவோம்
ஆணென்றும் பெண்ணென்றும் பிரிவுகள் இல்லை
அனைவரும் உயிர் என்று போற்றுவோம்
(எங்கள் மலையகம்)

ஒழுக்கம் என்பது உயிராகும் - அந்த
பழக்கம் இருந்தால் நலமாகும்
உண்மை நேர்மை சத்தியம் இவையே
நன்மைகள் தருகின்ற செயலாகும்
(எங்கள் மலையகம்)

கல்வியைக் கருத்துடன் கற்போம்
காலத்தை பொன்னெனப் போற்றுவோம்
சோம்பல் தூக்கம் ஆக்கத்தைக் கெடுக்கும்
கேடுகள் என்றே தூற்றுவோம்
(எங்கள் மலையகம்)

தேயிலை எங்கள் உயிராகும்; - அதை
தெளிவுற அறிந்தால் நலமாகும்
றப்பர் தென்னை நலம் தரும் மரங்கள்
காத்திடல் நமது கடனாகும்
(எங்கள் மலையகம்)

உயர்ந்த மலை போல் வீரமும்
ஓடிடும் நதி போல் வேகமும்
அறிவும் ஆற்றலும் சேர்ந்திட வாழ்ந்தால்
அகிலம் போற்றிடும் நாளும்
(எங்கள் மலையகம்)

ராசாத்தோட்டம் ராமஜெயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொதிக்கும் தார் எனக்குக் குளிர் நீர்'

விகடன் இதழிலிருந்து

"எனது முதலமைச்சர் நாற்காலியின் மூன்று கால்கள் எவற்றால் ஆனவை என்று எனக்குத் தெரியாது. ஆனால், நான்காவது கால் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்களால் ஆனது!" - 1982-ம் ஆண்டு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். வானொலிக்கு அளித்த பேட்டியின் போது, அவரது ஆழ்மனதில் இருந்து வந்த வார்த்தைகள் இவை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறந்து இரண்டு தலை முறைகள் கடந்துவிட்டன. ஆனால், இன்றளவும் காலத்தால் துருப்பிடிக்காத தெம்பும் திராணியும் கொண்டவை அவரது திரைப்பாடல்கள்.

இவற்றின் பின்னணியில் இருக்கும் வலி, வாழ்வு, வரலாற்றை 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், பாட்டாளி - படைப்பாளியான வரலாறு (1930-1959)' என்ற பெயரில் ஆவணப்படமாக்கி இருக்கிறார் பு.சாரோன்.

கல்யாணசுந்தரத்துக்குத் திருமணம் ஆகும் வரை, அவரோடு சென்னை ராயப்பேட்டை பொன்னுசாமித் தெரு 10-ம் நம்பர் வீட்டில் தங்கியிருந்த ஓவியர் கே.என். ராமசந்திரன் மற்றும் பட்டுக்கோட்டையாரின் நண்பர்கள் பலரைச் சந்தித்து அவரது நினைவுகளைப் பதிவுசெய்கிறது ஆவணப்படம்.

"இன்னைக்கும் மக்கள் மனசுல பாட்டுக் கோட்டையைக் கட்டி வாழும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத் துக்கு, நாடக நடிகர் ஆகணும்ங்கிறதுதான் லட்சியம்.



விவசாயியாக...



உழைப்பாளியாக...

ஆனா, பால்ய வயசுல அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. 'தஞ்சைப் பகுத்தறிவு சிங்கம்' அணைக்கரை டேவிஸ்தான் எழுதப் படிக்கக் கத்துக்கொடுத்தார். இவர் வீட்லதான் கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை அழகிரியைச் சந்திச்சார். அவரோட நடிப்பு ஆசையைத் தெரிஞ்சுக்கிட்ட அழகிரி, மதுரை சக்தி நாடக சபாவில் சேர சிபாரிசுக் கடிதம் கொடுத்து அனுப்பினார். தன் பாடல்களால் இன்னைக்கும் கதாநாயகனா வாழ்ற பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு, நாடகத்துல நடிக்கக் கிடைச்ச முதல் வாய்ப்பு வில்லன் ரோல். 'ராஜகுரு', 'கவியின் கனவு' நாடகங்களில் வில்லனாக நடிச்சார். இதுக்கு முன்னாடி இந்த வில்லன் ரோல்ல நடிச்சவர், பின்னாளில் பிரபல வில்லனான எம்.என்.நம்பியார் என்பது சுவாரஸ்ய முரண்.

1950-ம் வருஷம் நடிகர் டி.கே.பாலசந்தரோட மக்கள் நாடக மன்றம் சார்பா திண்டுக்கல் காந்தி மைதானத்தில் 'கண்ணின் மணிகள்' என்ற நாடகம் போட்டாங்க. நாடகத்தைப் பார்த்த கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் பேசும்போது, நாடகத்துக்காக கல்யாணசுந்தரம் எழுதின

'தேனாறு பாயுது
செங்கதிர் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது-

என்ற பாடல் வரியைச் சுட்டிக்காட்டி, மக்கள் கவிஞருக்குரிய தரம் இந்த வரிகளில் இருக்கிறது'னு பேசினார். அவர் வாக்கு, பின்னாளில் பலிச்சது.

கல்யாணசுந்தரம், சினிமா பாடல் வாய்ப்புத் தேடின காலகட்டத்தில் நடந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் பாடல்களாவே பதிஞ்சி வெச்சிருக்கார். உதாரணத்துக்கு சில...

ஒருநாள், கலைவாணர் என்.எஸ்.கே-யைப் பார்க்கப் போயிருக்கார் கல்யாணசுந்தரம். இவரது கஷ்டங்களைத் தெரிஞ்ச அவர், 'ஏன் தம்பி இப்படிச் சிரமப்படறீங்க? ஊருக்குப் போயிப் பொழைக்கிற வழியைப் பாருங்க'னு சொல்லி 100 ரூபாய் கொடுத்திருக்கார். அப்போ எழுதிய பாடல் இது...

'புழலேரி நீரிருக்க
போக வர காரிருக்க
பொன்னுசாமி சோறிருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவேனோ சென்னையை விட்டு
தங்கமே தங்கம்
நான் போவேனோ தங்கமே தங்கம்..!'

இந்தப் பாடலில் வரும் பொன்னுசாமி சோறு என்பது, இன்றைக்கும் சென்னை ராயப்பேட்டையில் இருக்கும் பொன்னுசாமி ஹோட்டல். அந்த ஹோட்டல் பக்கத்தில்தான் தங்கியிருந்தார். அங்கேதான் அவருக்கு சாப்பாடு.

சென்னை வாணிமஹால் பக்கமா நடந்து போகும்போது கல்யாணசுந்தரத்தோட செருப்பு அறுந்துபோச்சு. கையில் எடுத்துக்கிட்டுப் போயிருக்கார். எதிரே வந்த நண்பர் ஒருவர் 'என்ன கல்யாணசுந்தரம்... செருப்பு அறுந்து போச்சா?' என்று சிரித்திருக்கிறார். அப்போது அவருக்குப் பதில் சொல்றது போல எழுதின பாட்டு இது...

'உறுப்பறுந்து போனாலும் உள்ளம் கலங்கேன்
செருப்பறுந்து போனதற்கோ சிந்திப்பேன்
நெருப்பை எதிர்ப்பதற்கும் அஞ்சாத
எண்ணம் படைத்தாற்பின்
கொதிக்கும் தார்
எனக்குக் குளிர் நீர்.'

அப்போ மருதகாசி, கண்ணதாசன் எல்லாம் மார்டன் தியேட்டர்ஸுக்குப் பாடல் எழுதிக்கொண்டிருந்த நேரம். அந்த நிறுவன முதலாளி டி.ஆர்.சுந்தரம்தான் படம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் ஒப்புதல் செய்வார். அவரது அறையில் அவருக்கு மட்டும்தான் நாற்காலி இருக்கும். சந்திக்க வருபவர்கள் நின்றுதான் பேசணும். அவரிடம் கல்யாணசுந்தரத்தை அறிமுகப்படுத்தி, 'இவர்தான் புதுசாப் பாட்டு எழுத வந்த கவிஞர்'னு சொல்லியிருக்கார் எம்.எஸ்.வி. உடனே, 'பாட்டு எழுதுங்க பார்ப்போம்'னு டி.ஆர்.சுந்தரம் சொல்ல, கல்யாணசுந்தரம் பேப்பர் ஒன்றில் 'மரியாதை கொடுத்து மரியாதை வாங்கவும்'னு எழுதிக் கொடுத்திருக்கார். அதன் பிறகுதான் தன்னைச் சந்திக்க வருபவர்கள் உட்கார்ந்து பேச நாற்காலிகளைப் போடச் சொன்னாராம் சுந்தரம்.

கல்யாணசுந்தரம், ஒருபோதும் அடுத்தவர் வாய்ப்பைத் தட்டிப் பறித்தவர் அல்ல. அடுத்தவருக்குப் போகவேண்டிய பாடல் வாய்ப்பு தனக்கு வந்தபோதும் அதை மறுத்து ஒதுக்கிய பண்பாளர்.

அந்தக் காலத்தில் ஏவி.எம்-க்கு கண்ணதாசனும், ஜெமினி ஸ்டுடியோவுக்கு கொத்தமங்கலம் சுப்புவும் பாட்டு எழுதுவாங்க. 'ஜெமினி' தயாரிச்ச 'இரும்புத் திரை' படத்துக்குப் பாடல் எழுத கல்யாணசுந்தரத்துக்கு அழைப்பு வந்தப் போ, 'அங்க கொத்த மங்கலம் சுப்புனு ஒரு கவிஞர் இருக்கார். அவர் எழுதுறதுதான் நியாயம். நான் வரமாட்டேன்'னு சொல்லிட்டார். இதைக் கேள்விப்பட்ட கொத்தமங்கலம் சுப்பு, பட்டுக்கோட்டையாரை நேரில் சந்தித்து, 'நீங்க கட்டாயம் எழுதணும்'னு வற்புறுத்தவே...

'கையில வாங்குனேன்
பையில போடலை...
காசு போன இடம்
தெரியலை'

- ங்கிற பாட்டு எழுதினார்.




**பு.சாரோன்**

அந்தப் பாடல் ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசனுக்குப் பிடித்துப்போகவே 'இரும்புத் திரை' படத்திலேயே நாலு பாட்டு எழுதினார் கல்யாணசுந்தரம்.

இவரது பாடல் புனையும் திறனைப் பார்த்த எம்.ஜி.ஆர். தன்னுடைய படங்களுக்கு மட்டுமே பாடல் எழுத ஒப்பந்தம் போடலாம்னு சொல்லிருக்கார். ஆனாலும், எல்லா இசையமைப்பாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் பாட்டு எழுதுறவராத்தான் இருந்திருக்கார்.


1955-58 ஆண்டுகளில் 19 இசையமைப்பாளர்களுக்குப் பாடல் எழுதின ஒரே கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மட்டும்தான். திரைப்பாடல்கள் தொகுப்பாகி முதன்முதலாகப் புத்தகமாக வந்த பெருமை பட்டுக்கோட்டையாரின் பாடல்களுக்கு உண்டு. கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம்தான் கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் தொகுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை சென்னை பெரம்பூரில் நடந்த தொழிலாளர் கூட்ட மேடையில் பேசினார்.



பட்டுக்கோட்டையார் - கௌரவம்மாள் திருமணம்



பாடல் இசையமைப்பின்போது...



பாடல் பிறக்கிறது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய காலத்தில் திரையுலகில் பெரிய சாதனை செஞ்ச பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தோட கடைசி ஆசை, 10 நாள் காஷ்மீர்ல தங்கி இருந்து ஒரு புத்தகம் போடுற அளவுக்கு கவிதைகள் எழுதணும்ங்கிறதுதான். ஆனா, அது கடைசி வரை நிறைவேறலை. இந்தத் தகவலைச் சொல்லும்போது ஓவியர் கே.என்.ராமசந்திர னுக்குக் கண்ணு கலங்கிப்போச்சு.

'இந்த ஆவணப்படத்தை நாம் தியேட்டர்ல வெளியிடலாம். நான் அதுக்கு ஏற்பாடு பண்றேன். 'மானமுள்ள தமிழர்கள் இந்தப் படத்தைப் பார்க்கணும்'னு நாம விளம்பரம் பண்ணுவோம்'னு ஆவணப்படத்தை எடிட் பண்ணின லெனின் சார் சொன்னார். அவர் ஆசைப்பட்டது போல என்னால் இந்தப் படத்தைத் திரையரங்குகளில் வெளியிட முடியுமானு தெரியலை. அதனால் இந்த மாசமே வாணி மஹாலில் எம்.எஸ்.வி., இளையராஜா ரெண்டு பேரும் சேர்ந்து வெளியிட, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் மனைவி கௌரவம்மாள் ஆவணப்படத்தின் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார். 'மானமுள்ள தமிழர்கள்'னு இல்லை... ஒவ்வொரு தமிழர் வீட்லயும் இருக்கவேண்டிய ஆவணப்படம் இது. இந்த ஆவணப்படத்துக்குப் பிறகு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பற்றி முழுத் தகவல் அடங்கிய வலைத்தளம் ஒன்றை உருவாக்குவது என் அடுத்த இலக்கு. என் தேடல் தொடரும்'' என்று முத்தாய்ப்புடன் முடிக்கிறார் இயக்குநர் பு.சாரோன்.

ஞ

**கவிதை**

# யார் கொடுப்பார்



*போராடாமல் எதுவும் கிடைக்காது என்பது உண்மை*
*தாராளமனங் கொண்ட தாயும் தன்குழந்தை அழாமல்*
*பால்கொடுக்க மாட்டாள். பாரினில் வாழ்கின்ற மானிடர்*
*கால்கை அசைத்து உழைக்காமல் உண்ண முடியாது*

*கொடும்பாவி கட்டி அழுதால்தான் மழைபெய்கிறது*
*அடுத்துவரும் வெள்ளத்தை அணைகட்டித் தடுக்காவிடில்*
*ஊரைஅழித்துவிடும் குடிசைகள் மறைந்து விடும்*
*பாரைஆளும் மன்னனாக இருந்தாலும் நீதிதவறாத*
*நேரியவழியில் குடியானவர் மனங்களிக்க ஆட்சிதனை*
*சீரியமுறையில் சிந்தித்து ஆட்சி செலுத்தவேண்டும்*
*ஏழைஅழுத கண்ணீர் கூரியவாளை ஒக்கும்*
*நாளைய சந்ததி தட்டிக் கேட்கத் தொடங்கிவிட்டால்*
*சாதுமிரண்டால் காடுகொள்ளாது என்பது*
*பாதுகாக்கும் அரசுதொடக்கம் பாமரனும் அறிவானே*
*படுக்கப் பாயின்றி இருப்பவன் துயரம்*
*உடுக்கத் துணியின்றி உழல்பவன் துக்கம்*
*உண்ண உணவின்றி பசியில் மடிந்தவனும்*
*எண்ணிப் பார்த்து வழியறியா ஏதிலியும்*
*இந்நாட்டின் குடிமக்கள் என்பதனால்*
*சன்மார்க்க நெறியில் ஏழைகளைக் காக்க*
*பாரபட்சமற்ற பாங்கான ஆட்சிதனை*
*யார் கொடுப்பார் இந்த அவலநிலை மாறுதற்கு....?*

**வள்ளியம்மை சுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரசூசி



மாலாதேவி மதிவதனன்
அளவெட்டி

இறுதிப் பாடவேளை நிறைவடைந்ததை அடித்து ஓய்ந்த மின்சார அலாரம் நினைவூட்டியது. வழமையாக வெள்ளைச் சீருடையில் வீடு நோக்கிப் பறக்கும் மாணவர் போல் வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மாறாக ஒன்றுகூடல் மண்டபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். "என்ன மாலினி மிஸ் முகம் வாடிப்போய்க்கிடக்கு" என்று நலம் விசாரித்த சக ஆசிரியை நிமிர்ந்து நோக்கினார் மாலினி ரீச்சர்.

"ஓமடா இண்டைக்கு கந்தசட்டி பாறணை. வேளைக்கு எழும்பி சமைச்சுப் போட்டன். எண்டாலும் சாப்பிட நேரம் காணாது. அடிச்சுப் பிடிச்சு ஏழு மணிக்கு பஸ் ஏறிட்டன். வீட்டபோய் ஆறுதலாச் சப்பிடுவம் எண்டு இருந்தால் இந்த அதிபர் பள்ளிக்கூடம் விட்ட பிறகும் கூட்டம் எண்டு அறிவிச்சுப் போட்டார். அதுதான் பசிக் களை கன்ரீனும் இப்ப பூட்டிப் போடுவினம்" என்று சலித்துக் கொண்டார்.

"ஓம் மிஸ். நானும் மகனை ரியூசனுக்குக் கொண்டுபோய் விட வேணும். போக ஏலாது தானே. ஒட்டோக்கு போன் பண்ணிச் சொன்னனான். ஒருக்கால் கூட்டிக் கொண்டுபோய் விடச் சொல்லி" தன் மனக் கவலையையும் சேர்த்துச் சொன்னார். ரதி ரீச்சர் வீட்ட போனால் வில்லங்கம் என்பவர்கள் முகங்களில் மட்டும் சந்தோஷ பூக்கள் நிறைந்து கிடந்தது. குறித்த நேரத்தில் எல்லோரும் ஒன்று கூடவே அதிபர் எழுந்து கூட்டத்தை ஆரம்பித்தார்.

"எல்லோருக்கும் இனிய வணக்கம். எதிர்வரும் புதிய ஆண்டிற்கான பாட நேரசூசி தயாரிக்க வேண்டிய காலப்பகுதியில் நாம் இருக்கின்றோம். எதிர்வரும் வியாழக்கிழமை போயா விடுமுறை தினம் என்பதால் அன்றைய தினம் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்தப்பணியில் இணைந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றேன். இது தொடர்பாக தங்களது ஆக்கபூர்வமான கருத்துக் களை பகிர்ந்து கொள்ளலாம்" என வினயமாகக் கேட்டுக்கொண்டார்.

"ஏன் சேர் வழமைபோல நீங்களும் நாலைஞ்சு பேரும் சேர்ந்து போடுங்கோவன்" குரல் வந்தது. கூறியது யாரென இனங்காண முடியவில்லை.

"சேர் கன எலி சேர்ந்தால் புத்துக்கு மண் எடுக்கேலாது..."

"லீவு வாறதே கொஞ்சம் சேர். அண்டைக்கும் பள்ளிக்கூடம் வாறதெண்டால்..." யாரோ இழுத் தார்கள்.

சபை சிறிது நேரம் சலசலப்பாகி அடங்கியது. எல்லோரது அபிப்பிராயங்களையும் ஆழமாக செவிமடுத்த உப அதிபர் தனது இருக்கையில் இருந்து எழுந்தார். பாடசாலைக்கு அதிபர் தந்தை போல என்றால் உப அதிபர் தாயார் போல. தந்தை சற்றுக் கண்டிப்பாக நடந்து கொண்டாலும் தாயார் பலதும் பத்தும் யோசித்து கொஞ்சம் அன்பாக நடந்து கொள்வது வழமைதானே. உபதிபர் எழுந்ததும் அனைவரும் அமைதியா னார்கள்...

"அன்பான ஆசிரியர்களே. மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே நான் வழமைபோல் இல்லா மல் இம்முறை அதிபர் அவர்கள் எல்லோருமாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேர்ந்து இந்தப் பணியை முன்னெடுப்பது என முடிவு செய்துள்ளார். பாட வேளைகள் தீர்மானிக்கும் போதும், வகுப்பாசிரியர்களை நியமிக்கும் போதும் அனைவரது ஆலோசனைகளைப் பெற்றுச் சிறந்த முறையில் தூரநோக்குடன் நேரசூசியை அமைத்துக் கொள்வது எதிர்வரும் ஆண்டை எமது மாணவர்களுக்காக சிறந்த முறையில் எதிர்கொள்ள முடியும். அதேவேளை எல்லாத் துறைகளிலும் நல்ல பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள உறுதுணையாக அமையும். சிறந்த அடைவு மட்டத்தை அடையும் போது அதன் பெருமை அனைவரையும் சேரும். இப் பாடசாலையில் ஒருவராக இருப்பதனையிட்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். இதற்கு நல்ல உதாரணம் சென்ற வருடம் வலயமட்ட விளையாட்டுப் போட்டியில் பல பரிசில்களைப் பெற்று எமது கோட்டத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டோம். அதற்காக ஆசிரியர் தினத்தன்று கோட்டக் கல்வி அதிகாரியால் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பாராட்டப்பட்டோம்.

அந்த விளையாட்டுப் போட்டிக்கு அனைவரினதும் பூரண பங்களிப்பு இருந்தமை யாவரும் அறிந்ததே. வெறுமனே விளையாட்டுத் துறை ஆசிரியர் மட்டும் தனித்துச் செயற்பட்டு அந்த வெற்றியைப் பெற்றிருக்க முடியாது. மேலும் இவ்வருடம் தீபாவளிக்கு முதல் நாளும், நவராத்திரி வீட்டுப்பூசையன்றும் கௌரி நோன்பு இறுதி நாளன்றும் அதிபர் தனது தற்துணிவின் பேரில் ஒன்றரை மணி நேரம் முன்னதாக பாடசாலையை மூடி அனைவருக்கும் சலுகை வழகினார் என்று நான் கூறி நீங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. எனவே இந்த விடுமுறை தினத்தில் சில மணித்தியாலங்கள் நாம் பாடசாலையில் செலவிடுவதன் மூலம் எமது மாணவர்களை எதிர்காலத்தில் ஒரு சிறந்த பிரசைகளாக்க முன்திட்டமிடல் மேற்கொள்வோம் என்பது எனது தாழ்மையான கருத்து" என அவர் நிறைவு செய்ய ஒருமித்த பலத்த கரகோசம் அனைவரினதும் சம்மதத்தை வெளிப்படுத்தியது. உப அதிபர் தனது நன்றி கலந்த பார்வையால் விடைபெற்றுக்கொண்டார்.

போயா விடுமுறை தினத்தன்று பாடசாலை நாள் போல அனைத்து ஆசிரியர்களினதும் வருகை அதிபருக்கு மிகவும் மகிழ்வைத் தந்தது. இளைய தலைமுறையினரின் நல்ல சிந்தனையுடனான சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதில் இந்த சமூகத்தின் பங்கேற்பே இந்த முழுமையான வருகை என்பதையிட்டு அனைவரும் தம்முள் பெருமை கொண்டனர். பிரதி அதிபர் கலந்துரையாடலை ஆரம்பிக்கவும் உப அதிபர் ஏலவே தற்காலிகமாக தயாரிக்கப்பட்ட நேரசூசியின் போட்டோப்பிரதியை அனைவருக்கும் வழங்கினார்.

"பூரணமான நிரந்தர நேரசூசியை எல்லோருடனும் கலந்தாலோசித்து தயாரிப்பது கால தாமதத்தை ஏற்படுத்தும் என்பதால் தற்காலிக நேரசூசியை தயாரித்துள்ளோம். அதனை வைத்துக் கொண்டு உங்கள் பாடங்கள், பாட வேளைகள் போன்றவற்றை பரிசீலனை செய்து தங்களது கருத்துக்களை முன் வையுங்கள்" என அதிபர் கேட்டுக் கொள்ளவும் தமிழ் கந்தையா வாத்தியார் குரலை செருமிக் கொண்டு எழுந்தார்.

"தம்பியவை என்ர பாடம் தமிழ். உங்களுக்கு நல்லாத் தெரியும். அதைக் கொண்டுபோய் இந்தப் பெரிய பெடியங்களுக்கு பின்னடிக்கு போட்டுக் கிடக்கு. பசிக்களையில அவங்கள் பாடத்தைக் கவனிக்க மாட்டாங்கள். தமிழ் எங்கட தாய்மொழி பாருங்கோ, பசுமரத்தாணி போல பதிய வைக்க வேணும். அவங்கள் மேல் வகுப்பு படிக்க தமிழும் கட்டாய பாடமல்லோ, அப்ப அவங்கட பாடத்தை முன்னுக்காய் போட்டு விடுங்கோ. அவ்வளவும் காணும் சிறப்பு..." அமர்ந்து கொண்டார்.

"மதி சேர் தரம் ஒன்பது, பத்து தமிழ் பாடத்தை முன்னுக்கு போடுங்கோ" அதிபரின் அறிவுறுத்தலை உடனடியாக போட்டு மாற்றம் செய்தார் மதிசேர். கந்தையா வாத்தியாருக்கு வலு புழுகம்.

கந்தையா வாத்தியார் இன்னும் ஆறு மாதத்தில் பென்ஷன் எடுக்கப் போறார். அப்படி இருந்த போதும் அவர் மாணவர் மீதான அக்கறை அனைவரினதும் மனதைத் தொட வைத்தது. மூத்தவர்களும் இந்த சமூகத்தின் அங்கத்தவர்களே. அவர்களது அனுபவங்கள் போல சிறந்த வழிகாட்டி ஏதுமில்லை. இளைய தலைமுறையினரை வளர்த்தெடுப்பதில் அவர்கள் வகிபாகம் நிச்சயமாக காத்திரமானதாக இருக்கும். பாடசாலையில் எந் நிகழ்வாயினும் கந்தையா வாத்தியார்தான் எனும் அளவிற்கு தமிழில் சிறந்த சொற்பதங்களை கோர்வையாக்கி ஒவ்வொருவராக வரவேற்று மகிழ்வார். தமிழ் அவரது நாவில் கொஞ்சி விளையாடும். விருந்தினர்கள் அவர் தம்மை எவ்வாறு விழித்துக் கூறி வரவேற்பார் என ஆவலோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்துக் காத்து இருப்பார்கள். தமிழ்த்தின விழா கந்தையா வாத்தியார் என ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து இருப்பார்கள். தமிழ்த்தின விழா கந்தையா வாத்தியார் தலைமையிலேயே நடைபெறும். அக்காலப்பகுதியில் பாடசாலை தமிழால் அழகு பெறும். கலை, கலாசார பண்பாடு என தமிழின் பெருமையினை விதவிதமாக வெளிப்படுத்தி நிகழ்வை நெறிப் படுத்துவார்.

கந்தையா வாத்தியாரது நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த சபையை ரமணி ரீச்சரின் இனிமையான வெள்ளைக்காரன் இங்கிலீஷ் வார்த்தைகள் இழுத்து எழுப்பின. சேர் நான் இங்கிலிஷ் பட்டதாரி. என்னை ஏன் 'சீ' கிளாசிற்கு போட்டிருக்கு. எனக்கு 'ஏ' கிளாஸ் போட்டுத் தாங்கோ பிளீஸ்"

"ஓம் மிஸ் நீங்க சொல்றது சரி. 'ஏ' வகுப்பு பிள்ளையள் கொஞ்சம் கெட்டிக்காரர். அவங்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தாலும் சரி பிடிச்சிடுவாங்கள். ஆனால் 'சி' வகுப்பு பிள்ளையளுக்கு உங்களைப் போல ஆர்ட் ஓவ் ரீச்சிங் தெரிஞ்சவைதான் நல்லம். அப்பதான் மிஸ் 'எஸ்' ஆவது எடுத்து பாஸாவாங்கள். அதோட நீங்கள் மாலை நேர மேலதிக வகுப்புகளும் போட்டு எடுக்கிறனீங்கள்" என்று சொல்லவும் தனது மேலதிக வகுப்புகள் தொடர்பாக அதிபர் கவனித்து இருப்பதனை அறிந்த மகிழ்வில் ரமணி மிஸ் புன்முறுவலுடன் அமர்ந்து கொண்டார். அதிபர் சபையை கண்களால் ஆராய்ந்தார். "என்ன கலா ரீச்சர் முகம் நல்லா இல்லை" என அதிபர் துளாவவும் கலா ரீச்சர் எழுந்து கொண்டார். "ஒன்று மில்லை" என்றவளை "இல்ல மிஸ் ஏதோ இருக்கு சொல்லுங்கோ..."

"இல்ல இல்ல சேர், ஏன் சேர் என்னுடைய பாடவேளை மிகவும்குறைவாகபோட்டிருக்கிங்க, சமயபாடம் என்றா? இப்படி குறைஞ்ச பாடவேளை போட்டால் பரீட்சைக்கு மட்டுந் தான் படிப்பிக்க முடியும். சமய பாடத்தை வாழ்வியலோட இணைக்க வேணும். அப்பதான் எங்கட பிள்ளையள் ஆன்மீக சிந்தனையுடன் நெறிதவறாமல் ஒழுக்க சீலர்களாக வாழ முற்படுவார்கள். ஒழுக்கம் இல்லாத கல்வி பாழ். ஏனைய பாடங்களை விட குறைந்த பருமனான கொப்பிகளை மாணவர்கள் சமய பாடத்திற்கு வாங்குவார்கள். நீங்களும் பாடவேளைகளை குறைசுப்போடுவீங்கள்" என்று அழாக்குறையாக கேட்டுக்கொண்டார்.

"எனக்கு வாரத்துக்கு பத்து பாடவேளை ஒய்வு போட்டிருக்கு. முழுப்பாட வேளையையும் நிரப்பி விடுங்கோ சேர்" கலாரீச்சரின் ஆதங்கத்தை புரிந்து கொண்ட அதிபர் "சரி மிஸ். உங்களுக்கு வாரத்திற்கு ஒரு பாடவேளையாவது ஓய்வு தேவைதானே, மிகுதி ஐந்து பாடத்தையும் போட்டு நிரப்புவம்..."

"இல்லை சேர் எனக்கு ஓய்வு தேவையில்லை. சமய பாடத்திற்கு உடலுழைப்பு அதிகம் இல்லை. என்னால் இயலும். முழுப்பாட வேளையையும் நிறைவுபடுத்துங்கோ" கலா ரீச்சர் பிடிவாதமாக இருந்தார்.

"கல்விசார் நிர்வாக கொள்கை இருக்கு மிஸ். ஆசிரியர்களுக்கும் ஓய்வு தேவைதானே" என இழுத்த அதிபரின் தொனியை அதிரடியான கலாரீச்சரின் கருத்துகள் கலங்கடித்தன.

"ஓம் சேர். நிர்வாகம், கொள்கை, சுற்றுநிருபம் என்று எல்லாரும் சொல்லிக்கொண்டிருந்தால் யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுத்துவது யார்? நான் தயாராக இருக்கிறேன். எனது செயற்திறனை பயன்படுத்த முடியாத கொள்கை கள் எதுக்கு சேர். நாளைக்கே சமய பாடம் பாடசாலைக் கல்வியில் அவசியமில்லை என் னும் கொள்கை வகுக்கக் கூடும். விட்டுவிட முடியுமா? மைக் எடுக்கிறவன் எல்லாம் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகள் சமூகம் அழியுது. அழியுது என்று கத்த முடியுது. ஆனா அதற்கான காரணங்களை அறியவோ மாற்று வழியை தேடவோ யாரும் முன் வாறதில்லை. மேடைப் பேச்சோட எல்லாம் சரி. சமயத்தை பாடமாக இல்லாமல் நாளாந்த நடைமுறையோட சொல்லிக்கொடுக்க வேணும். சிலபஸ் முடிச்சால் போதும் என்று சமயம் படிப்பிக்க முடியாது. அதுக்கும் மேல புராண இதிகாச கதைகளை பிள்ளைகளுக்கு எடுத்து சொல்லிக் கொடுக்க வேணும் என்றால் பாடவேளைகள் கூட்டத்தான் வேணும் சேர்" கலா ரீச்சரின் வாதம் எல்லோருக்கும் நியாயமாகத் தென்படவே அவரது அனைத்துப் பாட வேளைகளும் நிரப்பப்பட்டது.

கலா ரீச்சர் அமரவும் காந்தன் சேர் மெதுவாக எழுந்து கொண்டார். தான் நெடுந்தீவில் இருந்து படகில் யாழ்ப்பாணம் வந்து வாறனான். பின்னேரம் கடைசி வள்ளத்தை பிடிப்பதற்காக சோட் லீவிலும் கால்டேயிலும் அனேகம் போறதால கடைசிப் பாட வேளைகள் எடுக்க முடிவதில்லை. அதால பிள்ளைகளுக்கு நஷ்டம்தான். அதனால் எனது ஒய்வுப்பாட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளை கடைசிப்பாடமாக போட்டால் பிள்ளைகள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படலாம் என்பது எனது தாழ்மையான கருத்து என்றார்.

"ஓமோம் உங்களுக்கு போக்குவரத்து சிக்கல் புரியுது சரி செய்றம். நீங்கள் கொஞ்சம் முன்ன தாகவே செல்வது பிள்ளைகளின் கல்விக்கு இடையூறாக இருப்பது அவதானிக்கப்பட்டது தான். அடுத்த வருடத்தில் அந்தச் சிக்கல் இருக்காது. நல்லது." என்றார் உப அதிபர். சிற்றுண்டியும் தேனீரும் பரிமாறப்பட்டது. மீண்டும் அனைவரும் புத்துணர்ச்சியுடன் நேரசூசி தயாரிப்பதில் இணைந்து கொண்டனர்.

நாடக ஆசிரியை மிக நளினமாக எழுந்து சுற்றும் முற்றும் இருந்த ஆசிரியர்களை ஒரு கணம் நோக்கி விட்டு "வந்து சேர் வந்து"... "சொல்லுங்கோ"... "பெரிய வகுப்புகளுக்கு என்னை போட்டிருக்கு. ரவி சேர் சின்ன வகுப்புகளுக்கு நாடகம் எடுக்கிறார். ஓ எல்லுக்கு நாடக செயன்முறைப் பரீட்சை இருப்பதால் பெரிய வகுப்பு பிள்ளையளுக்கு முன்னால் நான் நடித்துக் காட்ட அவங்கள் சிரிக்கிறாங்கள் சேர். அதால நான் நடித்துக் காட்டுவது குறைவு. நோட்ஸ்தான் கூட குடுக்கிறன். பிறகு சோதனைக்கு அவங்களால நல்ல முறையில செயன்முறை செய்ய முடியாமல் போய்விடும். ரவி சேரிட்ட பெரிய வகுப்பு நாடகப் பாடத்தை மாத்திக் குடுத்தால் நல்லம் எண்டு நினைக்கிறன். எனக்கு நோட்ஸ் கொடுப்பது பெரிய விடயமல்ல. அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது. அதுதான்..." "நான் மாறி எடுக்கிறன் சேர்" என ரவி எழுந்து சொல்லவும் விடயம் இலகுவாயிற்று.

"என்னுடைய விடயம் இல்லாவிட்டாலும் சொல்ல வேண்டியது எனது கடமை. மஞ்சுளா மிஸ் கன்சீவாக இருப்பதால் அடுத்த வருடம் ஓஎல் வகுப்பிற்கு அவங்களை போட்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. நாலுமாதம் லீவு எடுத்தால் அப்புறம் பதில் ஆசிரியரைப் போட்டு பிள்ளைகளை குழப்பாமல் இப்பவே நிரந்தரமாக ஆசிரியரைப் போடுவது நல்லம். அவ வெட்கத்தில பேசாமல் இருக்கிறா. என்ன மஞ்சு மிஸ். உண்மைதானே" என மூத்த ஆசிரியை போட்டு உடைக்கவும் மஞ்சுளாவின் மஞ்சள் முகம் சிவந்து செம்மஞ்சளானது.

"இதிலென்ன வெட்கம். சந்தோஷமான விடயந்தானே. திருமணமாகி நீண்ட நாட்களுக்குப் பின் மஞ்சு ரீச்சருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்திருப்பது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி தருகிறது. எல்லோர் சார்பிலும் வாழ்த்துக்கள். அத்தோட அவங்களோட பாட வேளைகளையும் குறைச்சு மாத்தி போடுங்க மதி சேர்" மஞ்சுளா மிஸ் தனது நன்றி கலந்த பார்வையால் அதிபருக்கு மரியாதை செய்தாள்.

ஒருவாறு அனைவரினதும் பாடங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு நேரசூசி முழுமை பெறும் தருணத்தில் நூலகத்திற்கு பொறுப்பான சாந்தி ரீச்சர் எழுந்தார். "சேர் ஒரு தாழ்மையான விண்ணப்பம்" என்று ஆரம்பித்தார். "சொல்லுங்கோ" என்ற அதிபரின் பதிலைத் தொடர்ந்தார் சாந்தி.

"எங்கட பிள்ளைகள் இப்ப நூலகத்தை உபயோகிக்கின்ற அளவு மிகவும் குறைவடைந்து விட்டது. ஆனால் நிறைய நல்ல விலைமதிப்பான புத்தகங்களை திணைக்களம் வருடாவருடம் அனுப்பிக்கொண்டிருக்கிறது. பல புத்தகங்கள் ஒரு தடவை கூட திறக்காமல் இருக்கின்றன. அதனால் கட்டாயமாக வாரம் ஒரு பாட வேளையாவது நூலகக் கல்விக்கு ஒதுக்க வேண்டும். பாடவேளை இல்லாதுவிடில் பாடசாலை நேரத்தின் பின் ஒரு மணித்தியாலம் நான் தங்கி நிற்கத்தயார். அவ் வேளைகளில் நூலகத்தை கட்டாயமாக பயன்படுத்த மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். 'நூல்கள் சிறந்த நண்பர்கள்' 'வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்' என்றெல்லாம் சுவரில் எழுதி வைத்துள்ளமை வீண். வாசிப்புநாள் அறிவுத் தேடலுக்கு நல்ல தீனி போடக்கூடியது. இதெல்லாம் நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை."

"ஓம் சாந்தி எனக்குப் புரியுது. மதி சேர் குறிச்சுக் கொள்ளுங்கோ" என்று அதிபர் கூறவும் அவரது செல்பேசி சிணுங்கியது. இது இன்றைக்கு இவ்வளவு நேரம் அமைதியாக இருந்ததே பெரிய விடயம் என்றபடி கையில் எடுத்தார். ஓ... டிப்பாட்மென்ற் நம்பர். லீவு நாளிலா... அவர்களும் வேலை செய்கிறார்கள் போல... ஹலோ ஓம் நான் அதிபர்தான் கதைக்கிறன்... ஓமோம் நவநீதன், தமிழினி எங்கட பிள்ளைதான். ஓ... அப்படியா மிக்க மகிழ்ச்சி தகவலுக்கு நன்றி. ஓ.கே, ஓ.கே முயற்சி திருவினையாக்கி இருக்கு. எங்கட கந்தையா மாஸ்ரர்தான் கோச் பண்ணினவர். நன்றி.. நன்றி..

எல்லோரும் ஆவலோடு அதிபர் என்ன சொல்லப் போகிறார் என எதிர்பார்க்கையில் அதிபர் எழுந்து வந்து கந்தையா வாத்தியாரைக் கட்டித் தழுவினார்.

"சேர் தமிழினிக்கு கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் கிடைச்சிருக்காம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் புகழும் உங்களுக்கே. என் கையில் ஆனந்தக் கண்ணீர் அவர் விழிகளில் இருந்து வீழ்ந்து கந்தையா வாத்தியாரின் கைகளை நனைத்துக் கொண்டன.

"ஒரு கிராமத்தின் மூலையில் இருக்கிற வசதிகள் குறைந்த பிள்ளைகள் அனேகம்பேரைக் கொண்ட பாடசாலைக்கு தேசியத்தில் முதலிடம். ஆசிரியர்கள் சிலர் சேர்ந்து கந்தையா வாத்தியாரை தோளில் தூக்கி சிறுவர்கள் போல குதூகலித்து மகிழ்ந்தனர். எதிர்வரும் ஆண்டிற்கான நேரசூசியை சிறப்பாக தயாரித்த மகிழ்வில் இதுவும் இணைந்து கொள்ள மகிழ்ச்சி இரட்டிப்பாகியது.

அதிபர் ஆனந்தப் பெருமிதத்துடன் "எனது அன்பான சகோதர ஆசிரியர்களே நாம் யாவரும் ஒன்றிணைந்து திட்டமிட்டால் எமது இளையவர்கள் நிச்சயம் நாளை சிறந்த பிரஜைகளாவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்றுபோல் என்றும் ஒன்றாக இணைந்து பயணிப்போம். அனைவருக்கும் நன்றிகள்" எனக் கூறி எல்லோரையும் வழியனுப்பினார். கந்தையா வாத்தியார் அதிபர் அருகில் வந்து தம்பி நான் எத்தனையோ பாடசாலைகளில் கடமையாற்றினான். ஆனால் இன்றைக்கு என்ர சேவைக்கு தேசிய அங்கீகாரம் கிடைச்சிருக்கு. நாங்கள் கஷ்ரப்பட்டு வழிகாட்டினால் முன்னுக்கு வர எங்கள் குழந்தைகள் தயாராக இருக்கினம். நாங்கள்தான் கடமைகளைத் தட்டிக் கழிக்கிறம். இந்த வெற்றி தொடரவேணும்." அவர் நாதளதளத்தது. "ஓம் சேர். இது உங்கட அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த பரிசு. நாங்கள் வழிகாட்டினால் எங்கட பிள்ளைகள் தடம் மாறாதுகள் சேர். இன்றைக்கு நாங்கள் போட்ட நேரசூசி போல திட்டமிட்டு வழிப்படுத்தினால் நாளைய தலைவர்களை நாமே உருவாக்கலாம். சரி சேர். நேரமாகுது. போய்வருவோம்" என விடை பெற்றுக் கொண்டார்.

மறுநாள் காலை பத்திரிகையில் வெளியான தமிழினியின் சாதனையும் அதனால் அப்பாடசாலை அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டதையும் அறிந்த மாணவர்களும் ஆசிரியர்களும் புதிய உற்சாகத்துடன் பாடசாலை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

கவிதை

# ஒரு கூடை கொழுந்து



*வெய்யிலும் மழையும் எங்களின் சொந்தம்*
*வியர்வையும் உழைப்பும் எங்களின் சொந்தம்*
*அட்டைக் கடியும் எங்களின் சொந்தம்*
*கொட்டும் குளவியும் எமக்கே சொந்தம் !*

*மண்ணின் சரிவும் எங்களின் சொந்தம்*
*மரங்களை முறிக்கும் புயல்களும் சொந்தம்*
*உடைந்த லயன்களும் எங்களின் சொந்தம்*
*உறங்கா விழிகளும் எமக்கே சொந்தம்.!*

*புள்ளடி போடுதல் எங்களின் சொந்தம்*
*புரட்சி செய்ததாய் மகிழ்வதும் சொந்தம்*
*கல்லடி படுவதும் எங்களின் சொந்தம்*
*கலங்கித் திரிவதும் எமக்கே சொந்தம் !*

*ஏந்திய கூடையின் பாரமும் சொந்தம்*
*எரிக்கும் பசியுடன் உறங்குதல் சொந்தம்*
*விமோசனம் தராத கோஷங்கள் சொந்தம்*
*விடுதலை இல்லா வாழ்க்கையே சொந்தம்.*

*வேண்டாச் சொந்தங்கள் அனைத்தையும் நீக்கி - நாம்*
*வேண்டும் வாழ்க்கையை எமக்கென ஆக்க*
*ஆக்கச் சக்தியாய் ஓரணி திரள்வோம் - நாளை*
*அகலும் துன்பம் மலர்ந்திடும் குறுஞ்சி..!*

ஷெல்லிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலெக்ஸ் பரந்தாமன் கவிதைகள்

## அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்

"வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...!"
இப்படியாக
வார்த்தைகளை வடிவமைத்தான்
அன்றொரு கவிஞன்.

அவர்கள்
போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்
நிதம் நிதமாய்...
விதம் விதமாய்...

வெயிலில் தினமும் நின்றபடி...
வியர்வையில் உடலும் காய்ந்தபடி...
பொழுது அந்தியாய் புதையும்வேளை
அன்றையதின வேதனத்துக்காய்
அவர்கள் போராடுகிறார்கள்.

சீதன சந்தையில் பிள்ளைகளுக்காய்
சிரித்தபடி...
வேண்டுதலாகுமொரு பெருந்தொகைக்காய்
பட்டுவிட்ட மிகுதுயர்களோடு
இனிப்பட இருக்கும்
பாடுகளை நினைத்தபடி...
பணம்தேட
அவர்கள் போராடுகிறார்கள்.

நெடுஞ் சுவர்கொண்ட ஆலைகளுள்
முப்பது நாள்களும் மூச்சுத் திணறியபடி...
மாத முடிவில்
'மூனா'வின் வீட்டு முன்றலின் முன்பே
முகத்தில் வழியும் ஏக்கங்களுடன்
மாத வருமதியைப் பெறுவதற்காய்
அவர்கள்
போராடுகிறார்கள்.

அன்றுழைத்து வயிறு நிரப்பும்
அவலவாழ்வில் இருந்தெழுந்து
ஒருநாளில் உழைப்பற்ற பொழுதாய்
உரித்து உறவுகளிடம் யாசிக்கும்
ஒருசுண்டு அரிசிக்காய்
அவர்கள் போராடுகிறார்கள்.

மனிதன் என்றதோர் இனத்தினுள்ளே
மாறுபாடான தொழில்களின் நிமித்தம்
குலம் பிரித்த கொடுமைகளுக்காக
அவர்கள்
போராடுகிறார்கள்.

தொடக்கம் தெரியாப் பயணத்தில்
அவர்களது தொடர்போராட்டம்
இன்னமும்
தொடர்ந்தபடியே போய்க்கொண்டிருக்கிறது
முகவரியற்ற முற்றுப்புள்ளியைநோக்கி...

## காத்திரு, காலத்திற்காய்

அவரவர்க்கென்றொரு காலம் உண்டு!
அதற்காகக் காத்திரு
தொடரும் உன் நீள்வழிப்பயணத்தில்.

அதிகாரப் பின்புலங்களில் நின்று
பொய்மைகள் உண்மைகளை மேவியபடி
புத்துணர்ச்சி பெறும் காலமிது.

மனிதத்துக்கு மதிப்பில்லா வாழ்வில்
புனிதம் குறித்துப் பேசும் பொய்வாய்களை
புறந்தள்ளிவிடு.
எதுவும் நிலையற்ற இவ்வுலகில்
பொய்மையும் நிலைப்பதில்லை நீண்ட தூரத்திற்கு.

வெளிக்கும் திசைக்காகக் காத்திருப்பது
மிகவும்
மனக்கனதியானதொரு வலி.
ஆயினும்,
உருவழியா உண்மைகள் பலவும்
உருக்கொள்ளும் ஒருநாளில்
மனக்கணக்குகளுக்குள் குந்திய
மாயக்கரும்பிம்பங்கள் அனைத்தும்
மழைநீரையுறிஞ்சிய நிலம்போன்று
உண்மைகள் அதனைத் தன்னுள்
உள்ளிழுத்துக் கொன்றுவிடும்.

தம்மால்
தூசித்துத் துப்பப்பட்ட வார்த்தைகளுக்காக
கழிவிரக்கப்படும் பொய்மைகளுக்குள்
தெளிவுநிலை திறந்தபின்
உளம் பலதை நெருங்கிவர முயலும்.

ஏற்றுக்கொள்!
அறியாமையின் பலன் அவைகளினுடையது.
அணைத்துக் கொள்வது
உன்வாழ்வின் அனுபவத்தினுடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆச்சியின் கொண்டையூசிகள்' அறிமுகம்

*கவிஞர்: சி.சிவசேகரம்*
*பக்கம்: viii+48*
*கலா லயம் பதிப்பகம் – 2020,ஜூன்*
*வெளியீடு இல: 04*
*ஓவியம்: ஆசை இராசையா*
*அட்டை: எஸ்.ரி. அனுஜன்*
*விலை: ரூபா 450/=*

சோ. தேவராஜா

1

'ஆச்சியின் கொண்டையூசிகள்' என்ற இக்கவிதை நூலின் ஆசிரியர் கவிஞர் சி. சிவசேகரம் 1974 முதல் 2022 வரை காலப்பகுதியில் எழுதிய முப்பது கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. இந்நூல் கலா லயம் பதிப்பகத்தின் 4வது வெளியீடாகும். கவிஞர் சி. சிவசேகரத்தின் 11வது கவிதை நூலாகும். இந்நூலிலுள்ள கவிதைகள் மூன்றைத் தவிர ஏனையவை 'சமூக இயல் பதிப்பகம்' சார்பில் எம்.பௌசர் தமிழகத்தில் வெளியிட்ட 'சிவசேகரம் கவிதைகள் 1973-2020' என்ற பெருந்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

'ஆச்சியின் கொண்டையூசிகள்' என்ற இந்நூல் 56 பக்கங்களைக் கொண்டுள்ளது. இதன் அட்டைப்படத்தை ஆசை இராசையாவின் ஓவியம் அலங்கரிக்க, எஸ்.ரி. அனுஜன் அட்டை வடிவமைப்பைச் செய்துள்ளார். இந்நூலின் விற்பனைப் பெறுமதி ரூபா 450/= ஆகும்.

கவிஞர் சி.சிவசேகரம் தனது முன்னுரையில் தனது 10வது கவிதைநூல் வெளிவந்த பின்னர் கடந்த 10 ஆண்டுகளில் வருடாந்தம் 2 கவிதைகளை பிறரின் வேண்டுதலுக்கமைய எழுதியதாகவும் இக்காலத்தில் தனது எழுத்துப்பணி அரசியல் கட்டுரைகளிலும், பிறமொழியிலிருந்து தமிழாக்கப் பணிகளிலும் செலவிட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

தமிழ் கவிதைத் துறையின் நீண்டகாலத் தேக்கத்தையுடைக்க தமிழாக்கத்தின் வருகை உதவுமெனக் குறிப்பிடுகிறார். அதுபற்றி கவிஞர் கருணாகரன் அடோனிசின் 'பாலை' என்ற கவிதை நூல் தனக்குப் பயன்பட்டதெனவும் தெரிவிக்கின்றார்.

'நீங்களும் எழுதலாம்' கவிதை நூல் ஆசிரியர் தனபாலசிங்கத்தின் ஊக்குவிப்பும் நண்பர் மீநிலங்கோவின் நூல் வெளியீடுபற்றிய அழுத்தமும் நண்பர் தேவராஜாவின் ஆர்வமும் 1980-ல் இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்த நண்பர் கந்தையாவின் மூலம் 'நதி' சஞ்சிகையில் வெளிவந்த ஐந்து கவிதைகளை ஞாபகமாக அனுப்பிவைத்த பெருந்தன்மையும் இக்கவிதைநூல் வெளிவருவதற்கு ஊக்குவிப்பை வழங்கின என்பார்.

'ஒரு முழுநிலா இரவில்' என்ற கவிதை இலங்கையில் தொடரும் முஸ்லிம் விரோதம் பற்றியது என்றும் 'அந்தோனியார்' கவிதை 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புப் பற்றியது எனவும், 'ஊரடங்கு' கவிதை துரிதமாகப் பரவும் ஒரு தடிமன் வைரஸைச் சாட்டி முழுச் சமூகத்தையும் இரண்டாண்டுகளாக மிரட்டி அடக்கி வைத்துள்ளமை பற்றியது எனவும் தனது முன்னுரையில் கவிஞர் சி. சிவசேகரம் குறிப்பிடுகிறார். மேலும் சி. சிவசேகரம் தனது முன்னுரையில் 'சர்வாதிகாரியின் சிலை' குறிப்பாக எச் சர்வாதிகாரியையும் பற்றியதல்ல எனவும், ஊதிப் பெருப்பித்த எப்படிமத்துக்கும் அது பொருந்தும் எனவும், 'நிமிர்வு' என்ற கவிதை கைலாசபதி நினைவு நிகழ்வுக்காகவும் 'கலாவின் நினைவாக' என்பது நினைவு மலருக்காவும், 'கலா எனும் ஆளுமை' தொகுப்புக்காக 'வாழ்வின் பெறுமதி 1-ம், கவிஞரின் மனைவி பிரேமளாவின் உறவினர் லலிதாம்பிகையின் நினைவு மலருக்காக 'வாழ்வின் பெறுமதி-2' என்ற கவிதையும் எழுதப்பட்டன எனவும் குறிப்பிடுகின்றார்.

இந்நூலில் உள்ள பிற கவிதைகள் தாயகம், புதியநீதி, ஜீவநதி, புதுவசந்தம் ஆகியவற்றில் வெளிவந்தனவாகும்.

இந்நூலின் பதிப்புரையில் "அன்றாட வாழ்வின் நெருக்கடியில் சிக்கிய மக்களின் நெருக்கீடுகளின் காரண காரியங்களின் காட்சிகளை கவிஞர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. சிவசேகரத்தின் கவிதைகளிற் கண்டு தெளிவுறலாம்' என்று கூறுவது கவனத்துக்குரியது.

இக்கவிதை நூல் இக்காலத்தில் வெளியிடப்படுவது காலத்தின் கட்டாயம்.

இந்நூலை மக்கள் அனைவரும் வாசிப்பதும், படிப்பதும், பரவலாக கலந்து பேசுவதும், விவாதிப்பதும் அவசியம். இதன்மூலம் புத்தகப் பண்பாடு மேலும் மலர்ந்து மணம் வீசும் என்பது எமது நம்பிக்கை.

மக்கள் ஒவ்வொருவரின் வீட்டு முற்றங்களிலும் இக் கவிதைகள் வாசிக்கப்படவேண்டும். பாடப்படவேண்டும். அரங்க ஆற்றுகையாக நிகழ்த்தப்படவேண்டும். மனந் திறந்து கலந்துரையாடி நாமனைவரும் மகிழ்வுறலாம் என்பதனால் நமது ஒன்றுபட்ட செயற்பாடு அவ்சியமானது.

2

உலகமயம், திறந்த பொருளாதாரம், நுகர்வுப் பண்பாடு, மூலதன ஆக்கிரமிப்பு என்பன உலகத்தை விழுங்குகின்றன. நச்சுக் கலை, இலக்கியங்களும், நுகர்வுப் பேராசையும், ஊடக மாபியாக்களும் மனிதர் களையும் அவர்தம் மனங்களையும் மனைகளையும் முற்றங்களையும் விழுங்குகின்றன.

இத்தகு பாதாளக் குழிகளில் அகப்பட்டுள்ள மக்கள் தம்மைத் தாமே மீட்பது எவ்வாறென சிந்திப்பதற்கு மக்கள் கவிஞர் சி. சிவசேகரம் 'ஆச்சியின் கொண்டையூசிகள்' என்ற கவியாக்கத்தை படைத்துள்ளார்.

யார் இந்தச் சிவசேகரம் எனக் கேட்பின், பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் சொல்வதை நாம் அவதானிக்கலாம்.

'சிவசேகரம் நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில் முக்கியமான ஆளுமைகளில் ஒருவர். சிறுகதை எழுத்தாளர், விமர்சகர், நாடக ஆசிரியர், முக்கியமான மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆற்றலுடையவர்.

தமிழின் நவீனத்துவப் பிரச்சினைகள் பற்றி அதிகம் எழுதியிருக்கிறார். இலங்கையின் இனத்துவ அரசியல் பற்றியும், சர்வதேச அரசியல் பற்றியும் அவர் அதிகம் எழுதியுள்ளார். படைப்பிலக்கியத் துறையில் அவரது பங்களிப்பும் முக்கியமானது.

இடதுசாரி மரபில் வலுவாகக் காலூன்றிய முக்கியமான கவிஞர், ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பிலும் அடக்குமுறைக்கு எதிராகவும் தன் கவிதையைப் பயன்படுத்துபவர். 1950களிலிருந்து தமிழில் இடதுசாரி மரபில் வந்த கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். சிவசேகரம் அவர்களுள் தனித்துவமானவர். அவரது கவிதைப்பாணி அவருக்கே உரிய தனித்துவமானது. தமிழில் மட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகளின் முற்போக்குக் கவிஞர்கள் மத்தியிலும் அவர் தனித்துத் துலங்கக் கூடியவர். தமிழில் அரசியல் கவிதைகள் பற்றிப் பேசுபவர்கள் சிவசேகரத்தை தவிர்த்துவிட்டுப் பேசமுடியாது.

3

இக்கவிதை நூலில் உள்ளடங்கிய விடயப் பரப்பு பல்வகை: கல்வியும் பிள்ளைகளும், சூழலியலும் சுற்றுலாவும், மலையக மக்களும் பெண்களும், மக்கள் வாழ்வும் மரணமும், அவர் தம் போராட்டங்களும், சுகாதாரமும் மதங்களும் அறிஞர்களும் பற்றிய கரிசனையுடைய கவிதையாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் மூலதன ஆக்கிரமிப்பில் விளைந்த முதலாளிய அரசியல் அரங்குகளான அரசாங்க ஆட்சிமுறைமையின் அவலங்களையும் அந்தரங்களையும் அடாவடித் தனங்களையும் இக்கவிதைகள் அலசுகின்றன.

மக்கள் வழிநடாத்த வேண்டிய அரசியல் மார்க்கம் பற்றியும் வரலாற்றில் தடம்பதித்து விடுதலைபெற்ற தேசங்கள், மாக்ஸீயம் பற்றியும், கட்சி ஸ்தாபனம் அதன் தவறுகள், ஒதுங்குதல், சிறு பிழைகள் பற்றிய சுட்டுதலும் உள்ள கவிதைகளும் எமது பார்வையில் படுகின்றன.

இக்கவிதைகளின் உள்ளடக்கம் தனி ஒரு மனிதர், மிருகம் முதல் உலகந்தழுவிய முழுமையான சித்திரத்தை எமக்கு வழங்குகின்றன எனலாம்.

இக்கவிதை நூலில் 'கொண்டையூசிகள்', சிறுபொறி, பழமரம், நிலவு, சிலை, குருவிச்சை, சதுரங்கப் பலகை, தெரு, கைப்பை ஆகிய பல அஃறிணைப் பொருட்களும் உயிர்பெற்று உயர்திணையாக உலாவுகின்றன.

மக்களின் அன்றாட வாழ்வு போராட்டமாக அமைவது சமகால வரலாறாகும். வாழ்வே போராட்டமாவதும் மக்கள் அதனுடனே அல்லாடுவதும் கவிதைகளில் முனைப்புப் பெறுகின்றன. காஸாவின் அபிமன்யு, நேரத்தைச் சேமித்தல், நிமிர்வு, புரட்சிப் பயணம், சிறுபொறி ஆகிய கவிதைகளையும் குறிப்பிடலாம். தனிப்பட்ட நபர்களின் வாழ்வும் அவர்களின் மரணங்கள் ஏற்படுத்திய தாக்கங்களும் பற்றிய மூன்று கவிதைகள் உள்ளன. 'கலாவின் நினைவாக', 'வாழ்வின் பெறுமதி-1, 2 ஆகியவையே அவை.

அறிஞர்கள் பற்றி, 'மக்கள் சாராத புத்திஜீவிகளே', 'மதிநுட்பர்' கவிதைகளில் காணலாம்.

'சிறுத்தை' என்ற கவிதை சூழலியலும் சுற்றுலாவும் பற்றிய முரண்பாடு பற்றிச் சித்திரிப்பது.

'பள்ளிக்குச் செல்லல்' என்ற கவிதை சமகாலப் பிரச்சினைகளால் இன்றைய கல்விக் கொள்கையில் சிக்குண்ட சிறுவர்கள் தமது பிள்ளைப் பருவத்தை இழக்கும் அவலத்தை வெளிப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒரு முழுநிலா இரவில்', 'அந்தோனியார்' ஆகிய கவிதைகள் மதங்களின் மதவெறியையும், முஸ்லீம்கள் மீதான விரோதத்தையும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டவும் மன்னிக்கும் மனப் பான்மையின் இயலாமையையும் விபரிக்கின்றன.

ஓர் ஸ்தாபனமாக மக்கள் இணைந்து செயற்படும் அமைப்பில் ஏற்படும் பழிகளையும், பிழைகளையும் 'பழியும் பழமரமும்', 'சிறுபிழைகள்', 'குருவிச்சை' ஆகிய கவிதைகளில் தரிசிக்கலாம்.

நிறைவாக, மூலதன விஸ்வரூபத்தின் அத்துமீறிய ஊடுருவலின் விளைவுகளையும் முதலாளிய அரசியலின் ஆபத்துக்களையும் பாராளுமன்ற ஜனநாயக அரசாங்கத் தின் கெடுபிடிகளையும் இயலாமைகளையும் பல கவிதைகள் விஸ்தாரமாக விலாவாரியாக விபரிக்கின்றன. 'ஆச்சியின் கொண்டையூசிகள்' சர்வாதிகாரியின் சிலை, சதுரங்கப் பலகை, ஆட்டமும் விதிகளும், றாங்கி பிடித்த தெரு, சுதந்திரம் வந்தது, நுகர்வுப் பொருளாதார சிந்தனை, பெட்டியில் முடங்காதை பெத்த திருநாடே ஆகிய கவிதைகள் பல படிமச் சிறப்புகளுடனும் கவித்துவ நயத்துடனும் படிப்போர் மனத்தை ஆட் கொள்வனவாகும்.

நிறைவாக, 'ஆச்சியின் கொண்டையூசிகள்' கவித்துவ இன்பத்தையும் அறிவின் பெருக்கத்தையும் ஆளுமைச் செழிப்பின் கருத்தியல் சிந்தனையில் பெரும் வீச்சையும் ஏற்படுத்தவல்ல வலிய கருவிகளாகத் துலங்குகின்றன எனலாம்.

### 4

சிவசேகரம் கவிதைகளில் கருத்தியல்- கவித்துவ நுட்பமும் மக்களின் அன்றாட வாழ்வும் அவர்கள் அன்றாடம் பாவிக்கும் பொருட்களினூடாக காணும் காட்சிகள் நிகழ்வுகளூடாக 'அரசியல்' பற்றிப் பேசுவதும் அதுபற்றிய புரிதலை பொதுமக்கள் இலகுவாகப் பற்றிக் கொள்ளத் துணை செய்வனவாய் விளங்குகின்றமையைக் காணலாம்.

இந்நூலின் தலைப்புக் கவிதையாகிய 'ஆச்சியின் கொண்டையூசிகள்' கவிதை, "எவ்வாறோ; அரசாங்கத்தை நினைக்கும்போது/ ஆச்சியின் கொண்டையூசிகளும்/ ஆச்சியின் கொண்டையூசிகளைக் காணும்போது/ அரசாங்கமும்/ மனதிற்கு வருகின்றன/" என நிறைவுறும். எங்கள் அரசாங்கத்தின் குறியீடாக ஆச்சியின் கொண்டையூசிகள் தெரிகின்றன. எனவே ஆச்சியின் கொண்டையூசிகள் பற்றிய எண்ணிக்கை, ஆச்சியின் கொண்டையின் அளவு, கொண்டையூசியின் பயன்பாடு, அவற்றின் உண்மையான செயற்பாடு, அதன் பெயரில் உள்ள அதன் விளக்கம் என்பன எவ்வாறு அரசாங்கத்துக்குப் பொருந்துவன என்ற கவிதைக் கள ஆய்வை வாசகர்கள் செய்கையில் புளகாங்கிதமடைவர்.

'சர்வாதிகாரியின் சிலை' என்ற 'கவிதை குறிப்பாக எச்சர்வாதிகாரியையும் பற்றியதல்ல. ஊதிப் பெருப்பித்த எப்படிமத்துக்கும் பொருந்தும்' என்பது கவனத்துக்குரியது. ஊடகங்களின் வாயில் சிறு செய்திகளும் உருமாற்றம் பெற்று உண்மைகளை திரித்து போலிப் புனைவில் புணர்வில் விளைந்த ஊதாரித்தனங்களின் அரங்காடு அம்பலமே இக்கவிதை.

அதிகாரத்தில் அமர்ந்தவர்கள் மக்களை அறியார். துப்பாக்கி முனையில் நெடுங்காலம் ஆளும் அவர்களை எவரும் நேசிக்கமாட்டாரெனிலும் சிலர் பூசித்தனர். அவர்களே விசுவாசிகள். அவர்களின் ஆர்வக் கோளாறு எத்தகைய அனர்த்தங்களை விளைக்க வல்லன என்பதை இக்கவிதை விலாவாரியாகப் புட்டுக் காட்டுகிறது.

சர்வாதிகாரியின் சிலையும், நினைவாலயமும் தகர்ந்த போது 'சர்வாதிகாரி சிரித்தான்-' அவர்கள் அழித்தவை என்னுடைய சிலைகளல்லவே' என/ அடையாளமழிந்த தனது புதைகுழிக்குள் அழுகியபடி" என இக்கவிதை நிறைவுறும்.

அதிகாரம் என்பது சிலைகளாலும், நினைவாலயங் களாலும் நிலைப்பதல்ல. அடையாளமேயிழந்த புதை குழிகளுக்குரியவையே அதிகாரம். மக்கள் பெறும் ஆளுமைத்திறனும் தன்னைத்தான் அறிவதும் 'பகுத் துண்டு பல்லுயிர் ஓம்புதலுமே' மக்கள் அதிகாரம் ஆகும். அன்பு சூழ் அகிலத்தை அமைப்பதிலேதான் 'வாழ்வு' துளிர்க்குமே தவிர சிலைகள் வைக்கும் சில்லெடுப்புக்களாலல்ல என்பது கவிதையின் கருப் பொருள் எனலாம்.

'சதுரங்கப் பலகை' கவிதை வர்க்க வேறுபாட்டைச் சுட்டும். மேலோர் யார்? கீழோர் யார்? விதிகளை வகுப்பவன் யார்? வினைகளை ஆற்றுபவர் யார். "நாளை ஆட்ட விதிகள் மாறலாம்/ நாளை ஆடும் பேர்களும் மாறலாம்... 'ஒவ்வொருவரும் தம் ஒவ்வொரு நகர்வும்/ வரையறைப் பட்டமை அறிகிலர்'... 'ஆட்டம் நிகழும் ஒவ்வொரு முறையும்/ தாம் தாமாக நகர்கிலர் என்னும்/ நினைவு துறந்து/ ஆட்டப் பலகையில்/ தமக்கென எவரோ வகுத்த விதிப்படி/ ஒவ்வொரு நகர்வையும் அவர் மேற்கொள்வர்!"

'என் கடன் பணி செய்து கிடப்பதே; கடமை செய் பலனை எதிர்பாராதே' எனக் கட்டமைத்த வர்க்க ஏற்றத்தாழ்வில் சிக்குண்ட மக்கள் 'செஸ்' விளையாட்டின் சதுரங்கக் காய்களே தவிர மன்னர்களுமல்ல. அமைச்சர் பெருமக்களுமல்ல. மேலோருக்காக உழைப்பையும், தம்வாழ்வையும் இழப்பவர்களாகவே தம் நகர்வில் திளைக்கின்றனர் என்பதை இக்கவிதை சுட்டிச் செல்லும். மக்கள் தம் வர்க்க நிலைப்பாட்டைத் தெரியாமல் இருப்பதே இக்கவிதை சொல்லும் செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆட்டமும் விதிகளும்' கவிதை தேர்தல் ஜனநாயகம் பற்றியது. தேர்தல் ஜனநாயகம் என்பது எவ்வளவு கேலிக்கூத்துத் திடலாகவுள்ளதென மிகத் தெளிவாகவும் துல்லியமாகவும் இக்கவிதை பேசும். 'வென்றவர் நாட்டை ஆள்வார் என்பர்' எனத் தொடங்கும் கவிதையில் அத்தகைய வெற்றிக்குச் செய்யவேண்டியவை என ஒரு நிரலையே சொல்வார். "கையிற் பசை தேவை அல்லது பசையுள்ள புரவலர் தேவை/ அல்லது வலிய நிறுவனமொன்றின் துணை தேவை"

'ஒப்புதலைப் பெற விதிகளும் கட்டுப்பாடுகளும் இருந்தாலும் மீறி அகப்படாதவரை அவற்றை மீறலாம்"

"வரையறையின்றி உறுதிமொழிகளை வழங்கலாம்?

'கூடியுள்ளோரை உசுப்பேற்றிக் கூறுபடுத்திப் பிற போட்டியாளர்களை ஓரங்கட்டலாம்'

'உதவிக்கு ஊடகங்களை விலைக்கு வாங்கலாம் இயன்றால் ஆடுவோரையும் விலைக்கு வாங்கலாம்'

'வீடோ காணியோ உத்தியோகமோ காசோ உணவோ உடையோ வேறு நுகர் பண்டமோ கஞ்சாவோ சாராயமோ தன்கையால் வழங்காமல் வேறு எவர் மூலமாகவேனும் கொடையாக வழங்கலாம்.

இவ்வாறாக, 'ஆட்டங் காணக் கூடுவோரில் அதிகமானோரின் ஒப்புதலைப் பெறுபவர் வென்றவராவார்..'

இவ்வெற்றியை பெறமுன் இத்தேர்தல், 'ஆட்டத்தின் போக்கில் விபத்துகளாற் சிலரோ சிலவேளை பலரோ காயப்படலாம் அல்லது சாகலாம்/ வீடுகளும் கடைகளும் பணிமனைகளும் தீப்பற்றலாம்? நாட்டின் அமைதி குலையலாம்."

இந்த ஒப்புதல் வழங்க உரித்துடையோரின் பட்டியலில் இல்லாதோரும்

உள்ளோரில் மரித்தோரும் ஒப்புதல் வழங்கலாம்'

தேர்தல் 'ஆட்டத்தில் பங்கேற்கும் அனைவரும் தோற்றாரென எல்லோரும் அறிவர்.

எனினும் எல்லோரும் ஆட்டத்திற் பங்கேற்பர்.'

ஏனெனில் வாக்காளர் அனைவருக்கும் அதிகாரம் உண்டு. அது என்னவெனில் "பென்சிலை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு/ தாளை ஒரு பெட்டியிற் போட்டுச் செல்ல அவர்கட்கு அதிகாரமுண்டு."

இவ்வாறாக, "ஆட்டமும் விதிகளும்' கவிதையில் போலி ஜனநாயகம் எனும் தேர்தல் தில்லுமுல்லுகளைக் கண்டு இரசிக்கலாம்.

மேலே சொல்லிய 'பென்சிலை எடுத்த இடத்தில் வைத்துவிட்டு/ தாளை ஒரு பெட்டியில் போட்டுச் செல்ல' அதிகாரமுள்ள வாக்காளப் பெருமக்களை 'பெட்டியிலை முடங்காதை பெத்த திருநாடே' என எச்சரிக்கின்றார் கவிஞர். ஏனென்றால் தமிழ்த் தலைமைகள் 'தமிழ்த் தேசியத்தின்' குறுந் நேசியக் குளறுபடிகளில் ஏகாதிபத்திய விசுவாசத்தையும் கையாலாகாத மாகாண சபையில் கைலாசக் காட்சியைக் கண்டுகளித்த கைங்கரியத்தையும் சுட்டும் 'மண்குதிரையில் அதிகாரம் தேடும்' அப்பாவித்தனத்தை யாழ்ப்பாணப் பேச்சோசைப் பாங்கில் பாடலாக வடித்துள்ளார் கவிஞர்.

மறுபக்கத்தில், பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் சிங்களத் தலைமைகள் தமது பேரினவாத வெறியினை ஊட்டிச் சன்னதமாடும் 'மொட்டுக்கு வோட்டளிச்சாப் பெத்த திருநாடே/ எங்கள் மனக்கவலை போய்விடுமாம் பெத்த திருநாடே' எனப் பெத்த திருநாட்டை தேர்தல் பெட்டியிலை முடங்கச் செய்யும் சூழ்ச்சியை கவிஞர் அம்பலப்படுத்துவார்.

'பாராளுமன்றத்துக்குப் பெத்த திருநாடே- போட்டுப்
பேய்க்காட்டிப் போனபின்னும் பெத்த திருநாடே
சீரான தேசமதில் பெத்ததிருநாடே- தேர்தல்
சீரழிவை நம்புவமோ பெத்த திருநாடே'

மேற்சொன்ன, பாராளுமன்ற போலி ஜனநாயகத்தைத் தோலுரித்துக் காட்டும் கவிஞர், பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகள், அந்தோனியாரின் மன்னிப்பு, நாங்கி பிடித்ததெரு, நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை, கைப்பைகள் பற்றிய ஒருசிந்தனை, நேரத்தை சேமித்தல், சிறுத்தை, ஊரடங்கு என சூழலியலும் சுகாதாரமும் பற்றிய முரண்படு நிலைகள் ஆகியன பற்றிய கவிதைகளும் பரந்த தளத்தில் கவிதைக் கட்டுக்குள் அடங்காதன பலவற்றையும் கவிதைக் கலசத்துக்குள் கையடக்கமாக வழங்கியுள்ளார்.

இக்கவிதை நூல் பரந்த தள வாசிப்புக்கும் கலந்துரையாடலுக்கும் விவாதங்களுக்கும் இடமளிப்பதுடன் தமிழில் அங்கதச் சுவையில் அன்றாட சம்பவங்களையும் காட்சிகளையும் "அழகுற அமைத்துச் 'சிந்தனை'த் தளத்தில் கவிதையின் இன்னொரு பரிமாணத்தை அழகியலுடன் அதற்கப்பாலான ஆய்வுப் புலத்துக்கும் கதவு திறந்துவிட்டுள்ளன எனலாம்.

மக்களின் அதிகாரம் எப்போது பெட்டியிலை முடங்கியது எனக் கேட்பின் 'சுதந்திரம் வந்தது' என்ற கவிதை பதில் சொல்லும். சுதந்திரம் இலங்கைக்கு கிடைத்த பின் நிகழ்ந்தவை என்ன, எவை எனக் கேட்பின் இக் கவிதை பதில் சொல்லும்.

சிங்கள கொடி ஏறி, தேசியகீதம் எழுந்து, ஆட்சி மொழி மாறி, அந்நியத்தனங்கள் நீங்கிய பின்னும் அந்நிய அதிகாரம் நீங்கியதா என்பது கேள்வி. நாடு குடியரசாகி, பெயர் மாறி, கொலனியத் தொப்புள் கொடி உறவு மாறி, தோட்டங்கள் அரசுடைமையாகிய பின்னும் அடிமைநிலை போனதா என்பது கேள்வி.

பதில் என்ன? சனங்களைக் கொன்றன அந்நிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதங்கள். நாட்டைத் தின்றன திறந்த பொருளாதாரம். உழைப்போர் விற்கப்பட்டனர் உலகச் சந்தையில். எதிர்காலத்தை விழுங்கின ஏறுங்கடன் சுமை.

'நாலரை நூற்றாண்டாய் மாறி மாறி/ சுதந்திரம் வந்தபின் எவனோ எசமான் ஒருவன்/ ஆண்டநிலை மீளாமற்/ கவனமாய் அந்நிய எசமானர் பலரிடை பகிருகின்றோம்.

இதுவே 'சுதந்திரம் வந்தது' சொல்லும் செய்தி.

சுதந்திரம் வந்த பின் 'தெருவுக்கு ஏன் றாங்கி பிடித்தது.' 'தெருப்பெயர்களை மாற்றுவது நமக்கு விளையாட்டு' ஆனது ஏன்? 'ஐரோப்பிய மொழி வாடையுள்ள பெயர்களில்/ மாற்றக்கூடிய, மாற்ற வேண்டாத பலதையும் மாற்றினோம்/ ஒரு பிரமுகரை நினைவுகூர, ஒருவரைப் பிரமுகராக்க, சிலை வைப்பதிலும் செலவு குறைவு' என்பதால் மக்களைக் கேட்டும் கேளாமலும் தெருப் பெயர்கள் மாற்றினாலும் தெருவைக் கேட்டுப் பெயர் மாற்றினது தெரியாது. தெருக்களுக்கும் உணர்விருக்கிறது. சில தெருக்கள் முரண்டுபிடித்தபின் பணிவன. 'சிலதின் றாங்கி எவர்க்கும் மலைப்பூட்டும்.'

'வூல்ஃபென்டால் வீதி' என்று இருந்த பெயரும் மாற்றப்பட்ட 'ஸ்ரீரத்ன ஜோதி சரவணமுத்து மாவத்த' என்ற பெயரும் விசாரித்தபோது தெரு மௌனஞ் சாதித்தது. தெரு முறைத்தது. 'ஆட்டுப்பட்டித் தெரு' என்று அலட்சியமாகப் பதில் வந்தது/ "அந்தத் தெருவை/ அடையாளமே தெரியாமல் மாற்றினாலும்/ அதன் றாங்கியை மாற்ற முடியாது/ அது என்றென்றைக்கும்/ ஆட்டுப்பட்டித்தெருதான்"

இக்கவிதையை 'பெண் ஒடுக்கல்' என்ற குறியீடாக வைத்து 'தெரு'வை ரசிப்பதும் சுவை பயப்பது.

இதுதான் 'றாங்கி பிடித்த தெருவின் செய்தி.

"சுதந்திரம் வந்தபின்' பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் வந்ததா? பிள்ளைகளுக்கு என்ன நடக்கிறது. 'பள்ளிக்குச் செல்லல்' கவிதை இவ்வாறு சொல்கிறது.

'சமூக வெளியிற் திசையின்றி அலைதற்காய்த்
துள்ளித் திரியும் பிள்ளைப் பருவத்தைப்
பள்ளியிலும் போதனை மண்டபத்து நெரிசலிலும்
பலி கொடுக்க வேண்டி எங்கள் சிறுபாலர்கள்
பெற்றோர் தமக்காகக் காணுகிற கனவுகளை
முதுகில் மிகச் சுமந்து பள்ளிக்குப் போவார்கள்'

நல்லாட்சி அரசாங்க காலத்தில் நிகழ்ந்த 2019 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புப்பற்றிய கவிதை 'அந்தோனியார்:. இக்கவிதை சொல்வது என்ன?

'கேட்டது கிடைத்ததோ இல்லையோ
எல்லாரும் மீள மீள அவரிடம் போவர்
அப்படி ஒரு பற்று...
முஷிர்க்குகளைக் கொன்று
சுவர்க்கம் போகலாமெனக் கணித்து
அவர்காக்கும் வீட்டில் குண்டைக் கொழுத்தியவனே
மனமுருகி
ஒரு மெழுகுதிரியைக் கொழுத்திக் கேட்டிருந்தால்
அதைவிட நிச்சயமாக அந்தோனியார்
உனக்கு மட்டுமல்ல
உன் கொலைகாரக் கூட்டாளிகட்கும்
சுவர்க்கத்தில் இடம் ஒதுக்கச் செய்திருப்பார்'

நுகர்வுப் பொருளாதாரம் எப்படி மனிதரைப் பாதித்துள்ளது என்பதற்கு 'நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை' என்ற கவிதை விடை பகரும்.

கூந்தல் அழகியும் பொய் பேசாத சிகையலங்கார நிபுணரும் நடாத்தும் உரையாடலாகவே இக்கவிதை அமைந்துள்ளது.

ஒருவர் தன்னைப்பற்றியும் தன் அந்தஸ்து அழகைப் பற்றியும் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதிலேயே தனது பொருளாதார அந்தஸ்த்தைக் கட்டமைப்பதற்காக அவர் சிந்திப்பதும் செயற்படமுனைதலுமே அவரின் வாழ்வின் குறிக்கோளாகிறது என்பவதை அங்கதச் சுவையுடன் 'நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனை' கவிதை அமைகிறது. 'பிறரிடன் காட்டிப் பெருமை பேசலாம்' என நிறைவுறுகிறது கவிதை. இதுவே நுகர்வுப் பொருளாதாரச் சிந்தனையின் ஆடம்பர இலக்கணமாகும்.

எளிமையான, அமைதியான, நேரத்தைச் சிக்கனமாக பாவிக்க விரும்பும் ஓர் சாதாரண மனிதனின் அபிலாஷை எவ்வாறு நிர்மூலமாகிறது என்பதை விளக்குவது 'நேரத்தைச் சேமித்தல்' கவிதை. 'நேரம் பொன்னானது போன பொழுது மீளாது' என எண்ணி நேரத்தைச் சேமிக்கும் முறையும் ஒருவர் சுருக்கமாக எழுத, விரைவாக நடக்க, பயனற்ற உரையாடல்களைத் தவிர்க்கப் பயின்றும் நேரத்தைச் சேமிக்க இயலவில்லை.

சேகரித்து வைக்க நேரம் திண்மமோ, திரவமோ, வாயுவோ அல்ல. நேரத்தை மெய்நிகர் நேரமாக்கித் திரட்டலாம் எனச் சொன்னார்கள். நேரக் கணக்கைப் பார்த்தபோது நேர நிலுவை பூச்சியத்துக்குக் கீழிருந்தது. கணக்கைக் கவனமாகப் பரிசோதித்தபோது பேரூந்து வருகைக்கும், மருத்துவரின் வருகைக்கும், நீதவானின் வருகைக்கும் அலுவலர்களின் வருகைக்கும் பிரதம விருந்தினர்களது வருகைக்கும் பரீட்சை முடிவுகட்கும் தேர்தல் முடிவுகட்கும் 'காத்திருந்து கழிந்த நேரங்கட்குச் செலவு வைத்தபின்/ நான் நேரக் கடனாளியாயுள்ளேன்' எனக் கவிதை முடிவுறும்.

'உன்னைத் திருத்து, உலகம் தானாய்த் திருந்தும்' என்பார்கள். திறந்த பொருளாதார, நுகர்வுப் பண்பாட்டு விஷச் சூழலில் தனிமனிதச் சுயமுயற்சி வெற்றானதும் வெறுமையானதும் விரக்தி தரக்கூடியதுமே என்பது கவிதையின் கருப்பொருள் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கைப்பைகள் பற்றி ஒரு சிந்தனை' என்ற கவிதை 'பண்டங்கள் பலவும் கையடக்கமாகின்றன/ நகரப் பெண்களின் கைப்பைகளைவிட/ கைப்பைகளின் நீள அகல ஆழங்களும் பாரமும்..." வேகமாக, கூடுவன பற்றிய புதிர்களைச் சொல்லி 'முன்பொருகால் காப்பரணில் மறித்துச் சோதனையிடும் பட்டாளத்தார் முன் 'விளக்கினுள் ஒளிந்த அலாவுதீனின் பூதம் போல்' மாறுவதுடன், "இப்போது/ தனக்கு வருமானமில்லாத எதையும்/ பொலீஸ் சோதியாது என்பதால்/களவாடிய ஒரு குழந்தையை/எளிதாகக் கைப்பைக்குட் கடத்தலாம்/..." "இதெல்லாம் அதிசயமல்ல... வீட்டு வேலை முடிந்தபின்/ எங்கள் ஆச்சி ஒரு பகல் உலாத்துப் போவார்/ மீளும் போது/ தன் கையளவு கொட்டைப் பெட்டியுள்/ முழு ஊரையும் கொண்டுவருவார்/" எனக் கவிதை முடிவுறுகிறது.

இக்கவிதை சொல்லும் செய்தி என்ன? கைப்பை என்ற குறியீடும் ஆச்சியின் கொட்டைப் பெட்டியும் பற்றிய விளக்கம் என்ன? முன்பொரு கால், கைப்பைகள் எப்படி இருந்தன, ஏன் அப்படி இருந்தன? இப்போது கடத்தல் பற்றிய காட்சி ஏன் வந்தது. இதிலென்ன அதிசயம் நிகழ்ந்தது? ஆச்சியின் கொட்டைப் பெட்டியுள் எவ்வாறு முழு ஊரையுங் கொண்டுவரமுடிந்தது? இக் கேள்விகளுக்கான பதிலை ஆராய்வதே 'கைப்பையின் சிந்தனை'யாக விருத்தியடைகிறது.

'சிறுத்தை' பற்றிய கவிதையில், சிறுத்தை வாழும் காட்டைக் கூட நிம்மதியாக இருக்கவிடவில்லை. சர்வமும் உலகமயமாகி, வியாபாரமாகி, 'சுற்றுலாத்துறை விளம்பரஞ் சொன்னது' உண்மையென நம்பி ஏமாந்த சுற்றுலாப் பயணிகளின் சோகமும் பயணிகள் பார்க்கச் சென்ற சிறுத்தை ஊருக்குள் சென்று தொல்லை விளைத்ததால் ஊரார் அடித்துக் கொன்ற சோகமும் 'சிறுத்தை' பற்றியும் 'சுற்றுலா' பற்றியும் சிந்திக்கத் தூண்டுவன.

"வரண்ட காலமொன்றில் காலைக்கடன் கழிக்கச் சென்ற வேதியர் மூவரின் கதையைக் கூறி "சிறுத்தையைக் கண்ட எவரதுங் கண்களைக் கண்டு சிறுத்தையைத் தரிசித்த மனநிறைவுடன் நாம் எல்லோரும் விலகி நிற்போமாயின் நமக்கும் நிம்மதி. சிறுத்தைக்கும் நிம்மதி' எனக் கவிதை முடிவுறும்.

வனங்களையும், வனவிலங்குகளைக் காப்பதும் நமது சூழலியற் கடமையல்லவா என்ற சிந்தனையை நமக்கு இக்கவிதை ஊட்டுகிறது.

"ஊரடங்கு" கவிதை மறுபக்கச் சிந்தனையைத் தூவுகிறது. "உங்கள் நன்மைக்காகவே யாதையுஞ் செய்வதாக/ ஒவ்வொரு அரசாங்கமுஞ் சொல்கிறது..." எனத் தொடங்கும் கவிதை 'அந்நியர் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள், ஆர்ப்பாட்டக்காரரிடமிருந்தும் உம்மைக் காக்கவும்/ அரசாங்கம் ஊரடங்கைப் பிறப்பிக்கிறது.

'இம்முறை/ உம்மிடமிருந்து உம்மைக் காக்க/ அரசாங்கம் ஊரடங்கைப் பிறப்பித்தது" என ஊரடங்க நன்மையைப் பேசுகிறது.

"வைரஸ் தொற்று நாட்டை நீங்கினும் வைரஸ் அச்சம் நீங்காமல்/ செய்தியேடுகளும் வானொலியும் தொலைக் காட்சியும்/ இணையத் தளங்களும் சேர்ந்து கவனிப்பன"

வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம், சாலை மறியல், சத்தியாக்கிரகத்தை நிறுத்த 'இனித் துப்பாக்கி தேவை யில்லை. வைரஸும் தேவையில்லை/ வைரஸ் அச்சம் போதும்..."

சுற்றாடல், அரசியல் உரிமை, குறைந்த ஊதியம், விலைவாசி, வாழ்க்கைச் செலவும் பற்றி "நீவிர் உரத்துப் பேசின்/ இவ்வைரஸினுங் கொடிய இன்னொன்று வரலாம்/ அது வைரஸாக இருக்கத் தேவையில்லை/ எனவே/ மோனங் காப்பீராயின் உம்மைத் தற்காத்தோர்/ ஆவீர்/ ஊரடங்கு சாதித்தது ஏதெனக் கேளாதீர்/ அதன் நன்மையை அனுபவித்தோர் அதை விரும்பார்" எனக் கவிதை நிறைவுறும்.

சுகாதாரம் என்பது தனிமனிதர்களின் சுகாதாரத் துறையினரின் அக்கறைக்கு அப்பால் 'அரசின் அக்கறை' போல் விரிந்து இராணுவம், ஊரடங்கு, மருந்து, வியாபாரம் என்று சர்வமும் உலகமயம் என்ற சர்வலோக நிவாரணியாக 'ஊரடங்கு' இயல்பாகிய துன்பியலை விளக்குவது இக்கவிதை எனலாம்.

கவிஞர் சி. சிவசேகரம் மாக்சீயமே சமூக மாற்றத்துக்கான வழிகாட்டும் தத்துவம் என்பதையும் சோவியத் சீனப் புரட்சியையும் வரவேற்பதுடன் மாஓவைப் பெருந்தலைவர் என்பதையும் சமூக ஏற்றத் தாழ்வுக்கு வர்க்கச் சமூகத்தில் அமைதி காத்தல் சாத்திய முமல்ல என்பதால் போராட்டம் தவிர்க்க முடியாதென்றும் சிறுபொறியாகவேனும் மூட்டி கட்சி, ஸ்தாபனம் முக்கியம் என்பதும் அதன் வெற்றிக்கு உழைப்பதும் எல்லோரும் விலகி ஒதுங்காமல், பழிக்காமல், அதனுடன் இணைந்து இயங்குதல் அவசியம் என்பது அவரின் அரசியலாகும்.

'போராட்டம்' என்ற கவிதையில் "வான் கடலில் விழுமெல்லை/ தாண்டிச் சிறுதோணி /... இயற்கைக்கு எதிராக மனிதன் துணிகின்றான்/ வாழ்வுக்காய்ப் போராட்டம்.../ சமுதாயம் மாறுகுது/ வரலாறு வளர்க்கிறது" என மாறும் சமுதாயத்துக்கு கட்டியம் கூறுவார்.

"வடவியற்நாமிற் குண்டுவீச்சு" கவிதையில் "மலை யின் உச்சி நிமிர்ந்து நோக்க நீலவானம் சிரித்து நிற்கிறது" என இயற்கையின் நிகழ்வும் போராட்ட வெற்றியும் உறுதியானதும் இயல்பானதுமென மலையையும் நீல வானத்தையும் படிமமாக்கினார் கவிஞர்.

'சிறுபொறி' கவிதையிலே "மாக்சியம் லெனினியம் காட்டிய வழியில்/ மாஓ என்னும் மாபெருந்தலைவனின்/ ஆணையேற்ற/ சீன மக்களின் செங்கொடி இயக்கம்... /


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஓ மூட்டிய சிறுபொறி சிதறி/ உலகின் மூலை முடுக்கெலாம் மேவிப்/ புரட்சிக் கனலாய்த்/ தேசிய விடுதலைப் போரின் வடிவில்/ மக்கள் பகைவரைப் பொசுக்குவதற்கு/ வியற்னாம் லாஓஸ் காம்போஜத்தின்/ விடுதலைப் போர்களின் வெற்றியோர் சாட்சி" எனத் தேசிய விடுதலையிலும் புரட்சியிலும் நம்பிக்கையைத் தெளிவுபடுத்துவார்.

'மலைப்பாதை' என்ற கவிதையில் "மலைநாட்டின் நெடும்பாதை/ வளைந்தும் நெளிந்தும் விழுந்தும் எழுந்தும்/ மேனோக்கித் தவள்கிறது..." அது போன்றே வரலாறும் புரட்சிப்பாதையும் நேர்கோட்டில் செல்வதில்லை என்றும் கடுமையான சுற்றுப்பாதையை சுட்டிக்காட்டுவார். முருகையன் "சுற்றி ஏறிடும் பாதை யாயினும் தூக்கி நம்மை உயர்த்திடுமே அது" என பாடியது போல் இயற்கையில் மலைப்பாதை போன்றதே மாக்ஸீயப் பாதையும் பயணமும் ஆகும் என்பதே கவிப் பொருளாகும்.

'பழியும் பழமரமும்' என்ற கவிதையில் ஸ்தாபனம் ஒன்றினை 'பழமரம்' என்ற படிமத்தில் படைத்துள்ளார்.

சமுதாய மாற்றத்துக்கு ஸ்தாபனம் ஒன்றின் அவசியம் முக்கியமானது. அந்த ஸ்தாபனத்தில் ஐக்கியமும் போராட்டமும், சுயவிமர்சனமும் விமர்சனமும், ஐக்கி யத்துக்கான அவாவிலிருந்து விமர்சனங்களையும் போராட்டத்தையும் நடாத்துதல், ஜனநாயக மத்தியத்துவம் போன்றவற்றைப் பாதுகாத்து நிதானமாக முன்னெடுத்தல் அவசியமானது.

இதற்குமப்பால் 'நான்' என்ற தன் முனைப்பைத் தவிர்த்து 'ஒன்றுபட்டுச் செயல்' புரிவதில் சுயநலமின்றி பொதுநலவுணர்வுடன் செயற்படல் அவசியம். ஆனால் பெரிய வேலைகளில் பங்கேற்காமல் 'எதனிலுமே ஒட்டாமல்/ தாமரையின் இலைமேலே நீர்த்துளி போல் நின்றீர்' என்பது பழமரத்தைப் பழித்துரைக்கும் ஒருவர் பற்றிய கவிதை 'பழமரம் தழைக்கவில்லை, காய்க்கவில்லை, செழிக்கவில்லை என்பதற்காய் மரத்தைக் குறைகூறாதீர்' 'நீரென்ன செய்தீர்?...' மண்ணில் உரம் இட்டீரோ, குனிந்து களை எடுத்தீரோ?" என்று அவர் மீது கேள்விகளை எழுப்புகிறார் கவிஞர்.

'சிறுபிழைகள்' என்ற கவிதை இயக்கம் ஒன்றில் கவனயீனமாக அங்கீகரிக்கும் சிறு பிழைகள் எவ்வளவு ஆபத்தானவை என்பதை விளக்கும்.

தவறான தலைவர்கள் ஆலமரம் போன்று விழுது பரப்பி நிற்பர். இயக்கத்தில் செயற்படுவோரின் சிறு பிழைகள்;

"ஆலின் விதை / கடுகின் நுனிதாய்...

....ஆலின் விழுது நூலின் மெலிதாய்..." இருந்தாலும் மரம் வளர்ந்து ஆலில் கிளை பரப்பி/ விரிந்து பரவி நிழல் வீசி நிற்கும்"

நாம் அத் தலைவர்களைத் தெரிவு செய்தபோது எமது சிறு பிழைகள் 'கடுகை' விடச்சிறிதாக இருக்கலாம். 'நூலின் மெலிதாய்' இருக்கலாம். அதன் விளைவு தவறான தலைமை.

'ஆலின் நிழலிற் பயிரெதுவும் உயிர்ப்பதில்லை

உயிர்த்த எதுவும் தொடர்ந்து நிலைப்பதில்லை'

தவறான தலைமையின் கீழுள்ள இயக்கமானது அடுத்த தலைமுறைக்கு தலைமையை உருவாக்காது. அத்துடன் ஆளுமையுள்ள இயக்கத் தொண்டர்களும் உருவாகச் சந்தர்ப்பம் எழாது.

இயக்கத்தை வழிநடாத்துவோர் 'கடுகின் நுனிதாய்' 'நூலின் மெலிதாய்' சிறுபிழைகள் விட்டாலும் அவை ஆலின் விதையும் விழுதும் போல- இயக்கத்தையே அழித்துவிடுவதுடன் இருள் மூடி நிழல் வீசி நிற்கலாம். பயனிருக்காது என்பதை கவிதையின் இறுதி அடிகள் விளக்குவன.

"தவறானதும் தீயதும்

நம்கண்கள் காணாது நம் மண்ணில் வேரூன்றி

நம்மையும் மூடி நிழல் வீசி நிற்கலாம்"

ஒரு மரத்தை அதே மரம் செடி போன்று 'குருவிச்சை' போலத் தலைமைகளின் நடத்தையால் ஒரு பேரியக்கமாக விளங்கிய 'கட்சி, இயக்கம், அரசாங்கம், நாடு, தேசம்' என்ற ஸ்தாபனங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்திவிட்டு அதில் தனது பங்கைப் பற்றிப் பேசாது 'மௌனம் காத்துவிட்டு அதன் பின் தானே கட்சியென்றும் இயக்கம் என்றும் அரசாங்கம் என்றும் பாசாங்கு செய்யும் தலைமை பற்றிய கவிதை 'குருவிச்சை'

'பழுதுபட்ட மரமொன்றிற் படர்ந்திருந்த குருவிச்சை

மரத்தின் பழுதுக்குத் தன்பங்கைப் பேசாது

மரம் கெட்டுப் போனதற்பின்

தானே மரமென்று பாசாங்கு செய்கிறது'

'மக்களைச் சாராத புத்திஜீவிகள்' கவிதையில் சமூகத்தில் அறிஞர்கள் எனப்பலர் ஆற்றலும் பல்வகைத் திறன்களும் உடையவர்களாய் இருப்பினும் அவர்கள் மக்களுக்கு அருகில் இல்லாவிடின் அதனால் எப்பயனும் விளையாது எனப் பேசுகிறது.

'மின்மினி போல் தோணி விளக்கொளி போல்

வானப் பெருவெளியில் புவியின் வெகுதொலைவில்

கோடி பலகோடி தொகை தாரகைகள் மூழ்கியெழும்'

அவை 'பரிதியினும் ஒவ்வொன்றும் பன்மடங்கு ஒளியுடையன' எனினும் 'நிலவின் இரவல் ஒளியினொரு/ சிறு அளவை உலகினுக்குத் தருவதற்கு முடிவதில்லை"

"மக்களுக்கு அருகிலிலா அறிவும் அறிஞர்களும்

தொலைவில் ஒளிர்கின்ற தாரகைகள் போன்றனவே'

எனக் கவிதை முடிவுறும்.

ஆய்வாளர், தீர்க்கதரசி, என பல்வேறு பெயர்களில் உலாவருவோர் பற்றிய போலி விளையாட்டை 'மதிநுட்பர்' நாலடிக் கவிதையில் கவிஞர் காட்டுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அரசியல் மதிநுட்ப நிபுணராய் உலாவருவோர்
தொடர் தொடராய் தத்தமது சோதிடங்கள் பொய்த்தாலும்
தமக்கு விளங்காத தேச நிகழ்வுகளை
எதிர்வுரைப்பதாய்ச் சொல்லி சோகிகளை உருட்டுகிறார்"

மரணமும் வாழ்வும்பற்றி இந்நூலில் 4 கவிதைகள் இடம்பெறுகின்றன. முதலாவது 'காஸாவின் அபிமன்யு'

"உயிர்வாழ்ந்தவாறே இறந்து கிடப்போரிடை
மரித்தும் வாழ்பவனை/ மரணத்துடன் வாழ்பவனை
மரணத்தால் வாழ்பவனை/ எவ்வாறு அழைக்கலாம்"
காஸா, பலஸ்தீனம்

அவன் போரை விரும்பியவனுமல்ல./ அவனாகவே போரினுட் புகுந்தவனுமல்ல./ ஆனால் எப்போதுமே அவனைப் போர் சூழ்ந்திருந்தது./ அவன் பிறந்த இடமும் வளர்ந்த இடமும் ஒரு போர்க்களமே"

பிறப்பிலேயே போரைச் சந்திப்பவர்களும், வாழ்க்கையே போர்க்களமாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்களும், பிறருக்காகவே தமது வாழ்வை அர்ப்பணிப்பவர்களும் ஆகியோரை....

"இனி அவர்களை யார் எப்படிக் கொன்றாலும்
அவர்கள் சாகப் போவதில்லை."

"எனவே மரித்தும் வாழ்பவனை... அவனுடைய பேரால் அழைக்கலாம். அவர்களை யார் எப்படிக் கொன்றாலும் அவர்கள் சாகப் போவதில்லை./" எனவே மரித்தும் வாழ்பவனை... அவனுடைய பேரால் அழைக்கலாம். அவர்களில் எவரது பேரும் பழக்கமில்லை என்றால் அபிமன்யு என்றும் அழைக்கலாம்" ...வாழும் உயிரை விட மரணத்தின் பின் வாழ்பவனே உயர்ந்த மனிதன்.

மரணம் பற்றிய மற்றக் கவிதை 'கலாவின் நினைவாக' என்பது. 'இழப்புகள் துயர் தருவன..." எனத் தொடங்கிய கவிதை.

"இறங்க மறுக்கும் நினைவுச் சுமைகள்
தனித்த பொழுதில் மனதை நசுக்கும்"....
... இன்னல் நடுவிலும் வாழ்க்கை இனிது...
இடையிடை நிகழும் முரண்களும் இனியன...
"மறைவு கொடிது
மறைவினும் கொடியன
இனிய நினைவுகள்.
கசப்பும் இனிப்பும் வாழ்க்கையல்ல
வாழ்வின் விலக்க இயலாப் பகுதிகள்
ஒன்றாய் இருவரும்
தமக்காய்ப் பிறர்க்காய்
ஆர்வத்தோடு ஆற்றவிருந்த
பணிகள் பலவும் நினைவிடை மீள்கையில்
மனவலுக் கொண்டு துணிவுடன் எழுக
பிரிவிற் கசந்த இனிமையை மீட்க
உயிர்ப்புடன் எழுக செயல்களில் உயர்க
மானுடம் உய்யும் பணிகளிற் தொடர்க'

என்பது கவிஞரின் கட்டளை. அதன் விளைவே கலா லயம் பதிப்பகத்தின் 'ஆச்சியின் கொண்டையூசிகள்' 4வது நூலாகும்.

"வாழ்வின் பெறுமதி-1 (கலாவுக்கு) என்பது மற்றுமொரு மரணம் பற்றிய கவிதையாகும்.

"பிறந்தோர் யாவரும் இறப்போமாதலால்
இறப்பு பிறப்பினும் உறுதியானது.
எனவே
உறுதியான ஒரு நிகழ்வையிட்டு அஞ்ச எதுவுமில்லை"
... வாழ்வதை விட வாழ்க்கைக்குப் பொருள் ஏதுமில்லை...
எனவே/ வாழ்தல் வாழ்வின் பொருளைத் தீர்மானிக்கிறது.
வாழ்வின் பயனும் பெறுமதியும் அதன் நீளத்திலில்லை
தேடும் பொருளிலோ பெறும் புகழிலோ
அறிவிலோ ஆற்றலிலோ அதிகாரத்திலோ இல்லை...
நம்மிடம் உள்ள எதன் பெறுமதியும்
அது விளைக்கும் பயனில் முடிவாகிறது
அவ்வாறு
நமது வாழ்வின் பெறுமதியை நாமே ஆக்குகிறோம்
நமது உலகம் நம்மைவிட எவ்வளவு விரியுமோ
அவ்வளவுக்கு அதன் பயனும் நன்றாயோ
தீதாயோ விரியும்"

இதுவே கவிஞர் சி. சி. மரணம் பற்றி விளக்கும் தெளிவான இலக்கணம்.

"வாழ்வின் பெறுமதி-2 (லலிக்கு) என்ற கவிதையும் மரணம் பற்றிய நினைவுப் பகிர்வே.

"பகிர்ந்தும் ஈந்தும் உறவாடியும் பரிமாறும்
அறிவும் ஆற்றலும் பொருளும்
அன்பான பணிகளும் அக்கறையான பங்களிப்புகளும்
குறையாது பெருகுவன..."

ஈற்றில் யாரும் அறியாமல்
எங்கோ போகையில்
தனது என்றவை சேர்ந்து செல்லா
ஈந்தும் பகிர்ந்தும் பரிமாறியன
இனிய நினைவுகளாயும் பேசாப் பொருட்களாயும்
பணிகளின் பயன்களாயும்
போன பின்னும் தொடரும்

லலியை அறிந்தோர் பேசுவற்றினும்
பேசாதன என்றும் பெரியன

மரணத்தால் வாழும் லலிக்கு கவிஞர் சி.சி. தனது கவிதையில் முத்திரை பதித்துள்ளார் என்பேன்.

மதங்கள் பற்றி கவிதைகளில் 'ஒரு முழுநிலா இரவில்' என்ற கவிதையில் ஓர் இஸ்லாமியர் புத்த பெருமானுடன் உரையாடுவதாக கவிதை அமைந்துள்ளது.

"புத்த பிரானே
நான் என் மார்க்கத்தின் வழிநடப்பவன்
நான் சிலைகளை வழிபடுவோனல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும்
உமது தியான நிலையின் கம்பீரம்
எப்போதும் என்னைக் கவர்ந்துள்ளது..."

.... எனத் தொடங்கிய கவிதையில் தொடர்ந்து-

... சிலர் இந்தநாடு உமது மண் என்கிறார்கள்
உமது மண் எனின்
அது அமைதி வழியில் நடந்தாக வேண்டும்
எனினும்...
...உமது பெயரைத் தியானிக்கும்
காவியுடைத் தேரர்களின் வழிநடத்தலில்
நாம் தொழும் பள்ளிவாசல்கள் இடிபடுகின்றன...
....உமது அமைதியான தோற்றம் என்னை அச்சுறுத்துகிறது
உமது மௌனம் என்னை நிலை குலைக்கிறது....
....ஒவ்வொரு விகாரையும் பன்சாலையும் மட்டுமன்றி
ஒவ்வொரு கோவிலும் தேவாலயமும் மட்டுமன்றி
ஒவ்வொரு பள்ளிவாசலுங்கூட என்னைக்
கலங்கி அழவைத்து அச்சுறுத்தி நிலைகுலைத்து நடுநடுக்குகிறது"

என தனிமனிதருக்கு மதங்கள் எவ்வாறு அச்சமூட்டு கின்றன என்பார் கவிஞர். 'அந்தோனியார்' கவிதையும் கவனிக்கத்தக்கது.

"எல்லா மதங்களும் ஒன்றையே சொல்வன" என பெண்ணடிமைத்தனத்துக்கே வழி சமைப்பனவாயமை கின்றன என்பது கவிஞரது வாதம்.

"என்றாலும் ஒரு விடயத்தில் மட்டும்
எல்லா மதங்களும் ஒன்றையே கூறுகின்றன
எல்லா மதங்களுமே
பெண் ஆணுக்காய் படைக்கப்பட்டவள் என்றும்
பெண் ஆணுக்குக் கீழானவள் எனவும்
பெண் ஆணுக்குப் பணி செய்யவும்
பணிந்து நடக்கவும் வேண்டியவளெனவும்
வெவ்வேறு வகைகளில் வெவ்வேறு சொற்களில்
வெவ்வேறு நடைமுறைகளினூடாகவும்
அறநூல்களினூடாகவும் போதனைகளினூடாகவும்
பெண் ஆணுக்கு அடிமை
என்ற ஒன்றையே கூறுகின்றன" என மதங்களின் போக்கில் ஆணாதிக்கப் பெண்ணொடுக்குமுறைப் பக்கச் சார்பை பட்டவர்த்தனமாக இக்கவிதைகளில் தெளிவுபடுத்துகின்றார்.

சிவசேகரம் ஏற்றத்தாழ்வான வர்க்க சமுதாயத்தில் 'சிறுபொறி'யை கவிதை மூலம் தோற்றுவித்து- போராடுவதைத் தவிர மக்களுக்கு மாற்று வழி ஏதுமில்லையென்று- எங்கும் எப்போதும் எவரிடமும் காணும் ஒடுக்கலின் அதிகார முகத்தை கண்டு காட்டி மக்கள் யுக மாற்றத்துக்கு தூண்டுதலாய் விளக்க முயல்கின்றார்.

கவிதை உள்ளடக்கம், உருவம், அணிகள், படிமம் என சிறந்துவிளங்கும் இக் கவிதைகள் வாசகர் மத்தியில் தெளிவூட்டி வழிகாட்டும், வாழ்வை மாற்றும் வல்லமை படைத்தவை எனலாம்.



# அரசன் ஓலமிடுகின்றான்

*அன்பான இளைஞர்களே*
*ஆயுதங்களை கையிலெடுங்கள்*
*நாட்டை பாதுகாக்க*
*ஆடவர் ஆளுமைகளே*
*பீரங்கிகளை தயார்செய்யுங்கள்*
*எம் குழந்தைகளை கொல்லாதிருக்க*
*மதிப்பின்*
*திருமதிகளே*
*தியாகத்தை சூடிக்கொள்ளுங்கள்*
*எல்லை வேலிகளை அடைக்க*
*மதிப்பிற்குரியவர்களே*
*தோட்டாக்கள் எவர் குருதியையும் தெளிக்கக்கூடும்...*
*காதலின் கழுத்தை கொஞ்சம் நெரித்துவையுங்கள்*
*அன்பூற்று பயணப்பட்டால்*
*தேசம்- எல்லை- உயிர்- அதிகாரம் முக்கியம்...*



**செம்மலர் மோகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவிப்பு

அநாதரட்சகன்

வீட்டில் சில நாட்களாக கலையாத மௌனம் குடிகொண்டிருந்தது. யார் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. அவனும் திக்பிரமை பிடித்தவனாக மனம் இறுகிக் கனத்துப் போயிருந்தான்.

மனைவிகூட மனம் விட்டுப்பேசுவதில்லை. மகளிடம் இருந்த கலகலப்பு தொலைந்து போயிருந்தது. எல்லோரதும் முகங்களிலும் ஒருவித சோகம் இறுகிக் கிடந்தது.

இது புதியவொரு பிரச்சினை. பூதமாக வந்து எல்லோரையும் கிலேசமடைய வைத்துவிட்டது.

மகள் ஒன்லைனில் படிப்பதற்கு 'ஸ்மாட் போன்' ஒன்று வேணுமாம். இதுவரையிலும் அந்தக் குடும்பத்துக்கு கையில் எட்டாத பொருள் அது. யாரும் அதனைப் பாவித்ததில்லை. எல்லோரையும் போல சாதாரண போன் உள்ளதுதான். இன்று குடும்பமிருக்கின்ற நிலைமையில் சற்று ஆடம்பரம் தான். ஏற்றத்தாழ்வுகளை வெளிக்காட்டும் இது போன்ற பல பொருட்கள் அவனது நினைவில் வந்துபோயின.

கொரனா பெருந்தொற்றாகப் பரவி உயிர்களைப் பலியெடுக்கிற இந்தக் காலத்தில் பிள்ளையளின்ரை கல்வியையும் முடக்கிப் போட்டுது. அதுக்கு தரமான செல்போன் வேணுமாம். ஆக்களுக்கு இதெல்லாம் சரிப்பட்டு வருமா? ஏன் அரசாங்கம் இந்த வசதிகளைச் செய்து கொடுத்தா லென்ன?

கடைத்தெருவில் விசாரித்ததில் கிட்டமுட்ட எப்படியும் நாற்பதாயிரம் வேண்டுமாம். இதை வந்து மகள் சொன்னதிலிருந்து மனம் பேதலித்துப் போயிருந்தான்.

உடனடியாகப் பணம் தேவை. அதுவும் பெருந்தொகைப்பணம். பலரிடமும் வாய்விட்டுக் கேட்டாயிற்று. இயன்றளவில் எல்லா முயற்சிகளும் எடுத்தாயிற்று. அவனிருக்கும் நிலையில் யார்தான் அவனை நம்புவார்கள். கடைசியில் பலரிடமும் அவமானப்பட்டதுதான் மிச்சம்.

சில நாட்களாக நல்ல தூக்கமில்லை. பணத்துக்காக அலைந்து வெறுங்கையோடு திரும்புவது தான் வழக்கமாகிவிட்டது.

ஒருபுறம் மனைவியின் நச்சரிப்பு. மகளின் வேண்டுதல் இன்னொரு புறம்.

***

குடும்பத்தில் ஒரே மகள் சாந்தி. கிளிநொச்சி மத்திய கல்லூரியில் படிப்பவள். சாதாரண தரத்திலும் விசேட சித்திகள் பெற்றவள். படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டுபவள். வகுப்பிலும் கெட்டிக்காரியென பெயரெடுத்தவள்.

பாழாய்ப்போன கொரனா வந்து எல்லா வற்றையும் முடக்கிவிட்டது. பல வருடமாகக் கல்வி இழப்பு. அதை ஈடு செய்யத்தான் ஒன்லைனிலை சூம் வகுப்புகள் நடக்குதாம். ஐயாயிரம் என்று செலவு வருமாம். ஏதோ புதிய படிப்பு முறையாம். ஏதோவெல்லாம் புதிசு புதிசா சொல்லுகிறாள். அதெல்லாம் விளங்குவதில்லை அவனுக்கு.

அவனுக்கு மட்டும் இது பற்றி கரிசனையில்லையா...? குடும்பத்தில் இருக்கும் ஒரே பிள்ளை அவள்தானே. மகளின் கல்விக்கு கேடு நிகழ்ந்துவிடக் கூடாது என்ற எண்ணம் அவனுக்கில்லையா... அயலிலுள்ள பிள்ளைகளெல்லாம் கையில் ஸ்மாட்போனும் படிப்புமாக இருக்க இவள் மட்டும் ஏக்கத்துடன் இருக்கிறாள்.

இதை நினைக்க நினைக்க அவன் நெஞ்சில் வேதனை கிளம்பியது. துக்கம் தொண்டையை அடைத்தது.

சில நாட்களாக அலைந்துதிரிந்து விட்டு வந்தால், மனைவியின் கேள்விகளுக்கெல்லாம் அவனிடத்தில் பதிவில்லை. மௌனம்தான் பதில். சிலவேளை மௌனம் கலைந்து அவன் உதிர்க்கும் வார்த்தைகளும் அவளை ஆறுதல் படுத்த போதுமானதல்ல.

அக்கம்பக்கத்தில் வீட்டுக்கொருவராவது வெளி நாடுகளில் இருக்கிறார்கள். உறவுகள் அனுப்புகிற பணத்தில் வாழ்வும் செழித்துக் கிடக்கிறது. அந்த வாழ்க்கைக்காக அவள் ஏங்குவதில் என்ன தவறு. ஆசைகளுக்கு விலங்கிட்டு விரதமிருந்து பழக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட அவனையே அந்த எண்ணம். தருணங்களில் தடுமாற வைக்கிறதென்றால், பாவம் அவள் என்ன செய்வாள்.

நேற்றும் இப்படித்தான். அவனில் ஏதோ குற்றம் கண்டவள்போல கேட்டுவிட்டாள்.

"ஏன்... உங்கடையாக்களெல்லாம் வெளிநாடு களிலை இருக்கினம்தானே. உங்கடை மச்சான் நந்தன் வெளிநாடு போகேக்கை நாங்கள் உதவி செய்தனாங்கள்தானே. கேட்டுப் பார்த்தால் என்ன...? பிள்ளை படிக்கிறதுக்குத்தானே கேக்கிறம். அதுவும் ஒரு சின்ன உதவி."

அவன் அக்கறையற்றிருப்பது போல, குற்றம் சுமத்திவிட்டு, முகத்தை திருப்பிக்கொண்டு போனாள்.

அவளுக்கு தனது உறவில் யாரும் வெளி நாட்டில் இல்லாதது பெருங்குறை.

இதை அடிக்கடி கூறி அலுத்துக்கொள்வது வழமையாகிவிட்டது. கேட்டுக் கேட்டு அவனும் சலித்துப்போனான்.

எதிர்பாராமல் நேர்ந்துவிட்ட இடர்களால் அவனது விவசாய முயற்சிகளும் தடைப்பட்டுப் போய்விட்டது. குடும்பத்தில் வறுமையும், போதாமையும் குடிகொண்டு அதிகப்படியான தண்டனையையல்லவா கொடுத்துவிட்டது.

நேற்றுவரை அவனுடன் நெருங்கிப்பழகிய வர்கள் கூட கண்டும் காணாதவர்கள் போல தலையைத் திருப்பி கடந்துபோகிறார்கள்.

சில நாட்களாக வீட்டில் யாரையும் முகங்கொள்ள முடியவில்லை. அவர்களை எப்படித் தேற்றுவது என அவன் மனம் தவித்தது. காலையில் சாப்பிடாதது நினைவுக்குவர பானையில் இருந்த தண்ணீரைப் பருகிவிட்டு, சாய்மனைக் கதிரையில் சாய்ந்தான்.

"அப்பா... யாழ்ப்பாணத்திலை இருக்கிற நியூ சயன்ஸ் கோலிலைதானாம் நல்ல சேர்மார் இருக்கினம். முதல்மாதம் ஐயாயிரத்து நானூறு கட்டவேணும். பிறகு, ஒவ்வொரு பாடத்துக்கும் ஆயிரத்து நானூறு ரூபாபடி நாலாயிரத்து இருநூறு கட்டவேணும்."

ஆதங்கப்பட்டுக்கொண்டாள் மகள் சாந்தி. அவளது பார்வையில் ஏக்கம் படிந்து போயிருந்தது. முகமும் வாடிப்போயிருந்தது.

அவளை மறுத்துப்பேச மனம் ஒப்பவில்லை. தகப்பனின் மௌனித்த பார்வை அவனது இய லாமையை உணர்த்தியிருக்கவேண்டும். அவள் கண்களில் ஈரம் கசிந்தது.

சூழலில் சில கணங்கள் நிசப்தம் நிலவ அதனை அவன் மனைவி உடைத்தாள்.

"அப்பா... உங்கடை மச்சான் நந்தன். வெளி நாட்டிலையிருந்து வந்து நிக்கிறாராம். இஞ்சை வந்து ஒரு மாதத்துக்கு மேலையாம். ஏன் உங்களுக்கு தெரியாதே. எங்களோடை எப்பிடிப் பழகினதுகள். ஒருக்கா அவனைப் போய் சந்தியுங்கள். கண்டிப்பா உதவி செய்வான். அதுவும் சாந்தியின்ரை படிப்புக்கெண்டால்...'

மனைவி அங்கலாய்த்துக்கொண்டாள். அவ ளைப் பார்த்ததும் உடனேயே நந்தனிடம் புறப்படவேண்டும் போல இருந்தது அவனுக்கு. மனதிலும் சிறு நம்பிக்கை துளிர்த்தது. நாயாய் அலைந்து திரிந்ததற்கு ஒரு வழி பிறந்துவிட்ட தான ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டது.

***

நேரம் மதியத்தை நெருங்கியது. அதிகநேரம் அங்கிருப்பதைத் தவிர்த்து உடன் யாழ்ப்பாணம் புறப்பட ஆயத்தமானான்.

வழக்கம்போல தூரப்பயணங்களில் காலில் போடும் செருப்பு ஞாபகத்துக்கு வர அதனை மாட்டப்போனான். அதிலொன்று அறுந்து போய்க் கிடந்தது.

அவசரம் அவனை விரட்ட வெறுங்காலுடன் புறப்பட்டான்.

"அப்பா... சூசையண்ணையிட்டை ஒருக்கா சொல்லுங்கோ. நல்ல மீனாய் கொண்டுவந்து தரச் சொல்லி. நீங்கள் வந்தாப்பிறகு காசு குடுக் கலாம். மீன் விலையேறினதாலை சாப்பிட்டும் கனநாளாப் போச்சுது."

மனைவி ஆதங்கப்பட்டுக் கூறிவிட்டு, சமைய லறைக்குள் சென்றாள்.

கரடிப்போக்குச் சந்திக்கு சீக்கிரமாய்ப் போனால், வருகிற எந்த பஸ்சிலும் போய்ச் சேரலாம். நந்தனையும் கண்டு, பின்னேர பஸ்சில் திரும்பி விடலாம் என எண்ணிக்கொண்டான். புறப்பட ஆயத்தமானபோது மனைவி கமலா கையில் நேநீருடன் முன்வந்து நின்றாள். நம்பிக்கையில் முகம் மலர்ந்திருந்தது.

"அப்பா... பஸ்சுக்குக் காசிருக்கா...?"

அவன் கேட்டதைக் காதில போட அவகாச மின்றி, தலையாட்டிவிட்டு பஸ்சைப் பிடிக்க எட்டி நடந்தான்.

பஸ்சைப் பிடித்து பயணிக்கையில் உறவுக் காரனான நந்தனுக்கு பல வழிகளில் உதவியது மனதில் கோலமிட்டது.

இடப்பெயர்வில் அந்தரித்து நின்றபோது, தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்தது. அவனது குடும்பத்தின் அன்றாடத் தேவைகளை யறிந்து அவ்வப்போது உதவியது. நந்தன் வேலையற்று இருந்தவேளை அவனுக்கு இடம் தேடிக் கொடுத்தது. அவனது பிள்ளைகள் படிக்க அனுசரணையாக இருந்தது. போர் முடிவில் வவுனியா, செட்டிக்குள முகாமில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக இருந்து சுக துக்கங்களைப் பகிர்ந்து கொண்டது என கடந்துபோன நினைவுகளை மீட்டிப் பார்த்தான்.

நந்தன் வெளிநாட்டுக்குப் போய் நீண்ட காலமாகிவிட்டது. முதல் தடவையாக வந்திருக்கிறான். நான் கேட்கிற உதவியை மறுக்கவா போகிறான். மனம் நெகிழ்ந்துபோக அவனிடம் நம்பிக்கை துளிர்த்தது.

***

கண்டி றோட்டில் மாம்பழம் சந்தி வந்ததும் பஸ்சிலிருந்து இறங்கினான். வெயில் தகிப்பு தணிந்திருந்தது. சோழகக் காற்றின் குளிர்மை உடலை வருடியது.

சந்தியில் தெற்கே நீண்ட பாதையில் நடந்து ரயில் பாதையில் ஏறி ஐநூறு மீற்றர் நடக்க நந்தனின் வீடு தெரிந்தது.

போர்முடிந்து மீளக்குடியேறியபோது, ஒரு முறை நந்தனிடம் வந்துபோனதில் இடம் பரிச்சயப்பட்டுப் போயிருந்தது.

வீடு வந்ததும் கேற்றைத் திறந்து உள்ளே காலடி வைத்தான்.

"சிங்கமண்ணை உள்ளை வாங்கோ..." கண்டதும் வரவேற்று நின்றாள் அமுதா. அவளது உபசரிப்பில் மனம் சிறிது ஆசுவாசப்பட்டது. அவள் பரிமாறிய உயர்ரக குளிர்பானம் தென்பளித்தது.

வீட்டைப் பார்த்ததில் ஆடம்பரத்தில் அது மாறிப்போயிருந்தது.

குஷன் செற்றிகளும், கண்ணாடி ரீப்போவும், விதவிதமான அலங்காரப் பொருட்களும் ஹோலை நிறைத்திருந்தன. எல்லாமே பளிச்செனமின்னிக் கொண்டன.

செற்றியில் உட்கார அவன் மனம் பின்னடித்தது. பக்கத்திலிருந்த கதிரையில் ஒருக்களித்து இருந்தான்.

அமுதா தங்களது சுகதுக்கங்களைப் பற்றிக் கேட்பாள், அதுவும் மனைவி, பிள்ளையின் சுகசெய்தி பற்றி ஆதூரப்பட்டுக் கேட்பாள் என எதிர்பார்த்தான். அவள் எவ்வித கரிசனையுமின்றி தானும் தன் வேலையுமாக ஓடிக் கொண்டிருந்தாள்.

சில காலம் வன்னியில் அன்னியோன்யமாகக் களித்திருந்த உறவு தொடருமா என்ற கேள்வி அவனிடம் கனத்து நின்றது.

நேரம் கடந்துகொண்டிருந்தது. பொறுமையிழந்து நந்தன் பற்றி அமுதாவிடம் கேட்டான். அவள் பதிலளிக்க முற்பட நந்தன் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினான்.

பத்து வருட வெளிநாட்டு வாசம், அவனது உடலில் செழிப்பு தெரிந்தது. கண்டதும் அவனை இனங்கண்டு கொண்டு,

"எட மச்சான் சிங்கம்... எப்ப வந்தனி. கனநேரமோ...?"

குரலில் மாற்றம் தெரிந்தது.

"இல்லை... இப்பத்தான்.."

"மச்சான் உன்னட்டை வரேல்லையெண்டு கோவிக்கக்கூடாது. வந்ததிலையிருந்து ஒரே வேலை. எங்கடை கோயில் வேலையாத்தான் ஓடித்திரியிறன். கும்பாபிஷேகம் வாறமாதம் வருகுது. அதுக்கிடையிலை இராசகோபுரம் கட்டிமுடிக்க வேணும். அது எங்கடை குடும்பம் சார்பாக கட்டிக் குடுக்கிறம். எப்படியும் ஒரு கோடியைத் தாண்டும்."

...

"கமலாக்காவும், சாந்தியும் எப்படியிருக்கினம்..?"

"சாந்தி நல்லாப்படிப்பாளே. இப்ப என்ன படிக்கிறாள்"

"வருகிற ஆவணியிலை ஏயெல் சோதினை எடுக்கிறாள்"

"என்ன பயோதானே. எப்பிடியும் மெடிசினுக்கு எடுபடுவாளடா, பிறகு உனக்கென்ன மச்சான்"

சம்பிரதாயத்துக்கு நந்தன் கேள்விகளைக் கேட்டு வைத்தான். அவனுடைய மௌனத்தின் ஆழம் நந்தனுக்குப் புரியவில்லை.

பாடசாலைகள் மூடி ஒன்லைனில் வகுப்புக்கள் நடப்பது பற்றிக் கூற நினைத்தான். பல கோடிகளுக்கு அதிபதியாக இருப்பவனிடத்தில் சிறு உதவி நாடி வந்திருப்பது குறித்து எப்படிக் கேட்பது என்கிற மனப்போராட்டம் அவனுக்குள்.

"மச்சான்... என்ன பேசாமல் இருக்கிறாய்..?, இவ்வளவு நாளும் உன்னட்டை வரேல்லையெண்ட கோவமோ..?"

"சீச்சீ... அப்படியொண்டுமில்லை."

"அதுதானே. உனக்கென்ன...? நீ பெரிய விவசாயி. வன்னி மண்ணில நல்ல நிலபுலத்தோடை வாழுறனி. வயல் விளைச்சலெல்லாம் எப்படி...?"

நிமிர்ந்து பார்த்துவிட்டு, பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

"இப்ப அங்கை விவசாயமெல்லாம் படுத்திட்டுது. பெரும் நட்டமாப்போச்சுது. கோத்தாவின்ரை அரசாங்கம் உரத்துக்கும், மருந்துக்கும் தடைபோட்டதாலை விளைச்சலில்லை, கடனுக்கு மேலை கடன்பட்டு நட்டப்பட்டுப் போனன். கடனை அடைக்கேலாமல் வயல் தோட்டம் எல்லாம் வித்துப்போட்டன், நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னேரம் கொட்டில் போட்டிருந்த கண்டா வளைக் காணியும் அறுதியாப் போச்சுது. இப்ப சும்மாதான் வீட்டிலை இருக்கிறன். ஏதோ வாழ்க்கை ஓடுது."

- அவன் மௌனம் கலைத்தான்.

"அந்தளவுக்கு வந்திட்டியா...?"

"ஓமடா... நிமிர முடியாத நிலமைதான்"

நந்தனின் முகத்திலிருந்த களிப்பெல்லாம் அடங்கி ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான்.

அருகில் அமுதாவும் நின்றிருந்தாள். சிறிது நேரம் யாரும் எதுவும் பேசவில்லை.

"அப்ப மச்சான் வந்தது...?"

நந்தனின் குரலில் முன்பிருந்த கலகலப்பு தணிந்து போயிருந்தது.

தான் வந்ததன் நோக்கத்தை மறைத்து சும்மா வந்ததாகக் கூற மனம் ஏவியது.

மனதில் மகளின் முகம் தலைகாட்டியது. தான் நந்தனிடம் உதவி நாடி வந்ததை தயக்கத்துடன் வெளிப்படுத்தினான்.

"மகள் படிக்கிறதுக்கு ஸ்மாட்போன் ஒன்று வாங்க வேணும். அதுக்கு காசு ஐம்பதினாயிரம் வேணும். அதுதான் உன்னட்டை கேக்கலா மெண்டு வந்தனான்"

"மச்சான் நானொண்டு சொல்லுறன். இந்த நிலைமையிலை அவளைப் படிப்பிக்க நினைக் காதை. அவள் நல்ல வடிவான பெட்டைதானே. சுவிசிலயிருக்கிற என்ரை மூத்தக்கா மகனுக்குப் பொம்பிளை பார்க்கிறா. முறையும் சரியா இருக்கு. வெளிநாட்டு மாப்பிளை. பொடியனும் நல்லா உழைக்கிறான். நீ விரும்பினாச் சொல்லு. செய்து வைக்கிறன். பிள்ளையும் நல்லாயிருக்கும். உன்ரை சோலியும் முடிஞ்சிடும். இதைப்பற்றி கமலாக்கா வோடையும் யோசி"

என்ன விலை கொடுத்தாவது மகளைப் படிக்க வைக்கவேண்டுமென்ற அவனது எண்ணத்தில் மண் விழுந்தது போலிருந்தது. நந்தனது வார்த் தைகள். அதைக் கேட்ட அதிர்ச்சியில் ஒரு கணம் தளர்ந்து போயிருந்தான்.

"கையிலிருந்த காசுக்கு கோபுரத்துக்கு அத்தி வாரம் போட கல்லுப் பறிச்சுப் போட்டன். அதுவும் டிப்பருக்கு கிட்டமுட்ட ஒரு லட்சம் போட்டுது. இப்பதான் குடுத்திட்டு வாறன்"

நந்தன் தனது நியாயத்தைக் கூறி முடிந்ததும், அமுதா சமையலறைப்பக்கம் போனாள்.

அவன் மனதை வெறுமை ஆட்கொண்டது. புறப்படுவதற்கு ஆயத்தமாக எழுந்தான்.

"மச்சான் சாப்பிட்டுவிட்டுப்போ..." "இப்ப தான் ரிங்ஸ் குடிச்சனான். பசி அடங்கிப்போச்சு. இரண்டு மணிக்கு பஸ்சிருக்கு. நான் வாறன்"

சொல்லிக்கொண்டு வெளியே இறங்கினான்.

***

கரடிப்போக்குச் சந்தியில் இறங்கி நின்றான்.

பொழுது அடைகிற நேரம். தெரு அடங்கிப் போய் வெறிச்சோடிக்கிடந்தது. நடையில் தளர்வு தெரிந்தது.

வீட்டை அண்மிக்க, அண்மிக்க அவனிடம் பதட்டம் அதிகரித்தது. மனைவி தன் இயலாமை குறித்து கடிந்துகொள்வாளோ, வெறுப்புடன் பார்ப்பாளோ, எப்படி ஆறுதல்படுத்துவது என்ற தயக்கத்துடன் வீடு வந்து சேர்ந்தான்.

கேற்றைத் திறந்து உள்ளே பார்க்கையில், மனைவி முகம் மலர்த்தி வரவேற்றாள். அருகில் சாந்தியும் மகிழ்ச்சியில் திளைத்து நின்றாள். இருவரது கண்களிலும் மலர்ச்சி தெரிந்தது.

"அப்பா... காளிமுத்து மாமா காசு தந்திட்டுப் போறார்..."

முந்திக்கொண்டு சாந்தி கூறினாள். குரலில் உற்சாகம் வெளிப்பட்டது.

ஏதுமறியாதவனாக மனைவியைப் பார்த்தான்.

"அவர்தான் உங்கடை தோழர் காளிமுத்து. ஐம்பதாயிரம் ரூபா தந்திட்டுப்போறார். நாங்கள் காசுக்கு தட்டுப்பட்டதை ஆரோ சொல்லியிருக் கினம்போலை.இப்பதான் தந்துவிட்டுப்போறார். நாளைக்கு உங்களை வந்து சந்திக்கிறாராம்."

காளிமுத்து எண்பத்திமூன்றுக் கலவரத்தில் மலையகத்திலிருந்து குடும்பமாக வந்து தருமபுரத் தில் குடியேறியவர். படித்த வாலிபர் திட்டத்தில் விசுவமடுவில் காணி கிடைத்தது. மிளகாய் செய்கையில் ஈடுபட்ட காலத்திலிருந்தே விவசாய சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்களில் இன்றுவரை தொடர்ந்து உழைப்பவர். நான் சற்று ஒதுங்கி இருந்தாலும் அவருடன் உறவைப் பேணி வந்தேன். அந்த உறவுகளின் கூட்டு உதவியாக அவர் மூலம் மிக நெருக்கடியான நேரத்தில் இந்தப் பணம் கிடைத்துள்ளது என எண்ணும் போது நான் என்னையே ஒருமுறை திரும்பிப் பார்த்து எனது நம்பிக்கைகளை கேள்விக்குட்படுத்திக் கொள்கிறேன்.

"எவ்வளவுதான் இனசனம் உறவுகளெண்டு இருந்தென்ன...? கடைசியிலை உதவினது எங்கடை தோழர்தானே"

நந்தனிடம் போய் வந்திருப்பதைப் பற்றி எதுவும் கேளாது, நெகிழ்ந்து போய்க் கூறிக் கொண்டாள். மனைவியின் வார்த்தைகள் எனக்குள் எழுந்த கேள்விகளை மேலும் ஆழப்படுத்தின.

ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ ஞானப்பயிற்சியும, மகிழ்ச்சியான வாழ்க்கையும் – ஒரு நோக்கு

பி. முத்துலிங்கம்

இவ்வுலகில் பிறந்த அனைத்து மனிதர்களும் அறிந்தும், அறியாமலும் ஞானத்தையும், நிறைவான மகிழ்ச்சியையும் நோக்கியே பயணம் செய்கின்றார்கள். உலக வரலாற்றில் சில மனிதர்கள் ஞானத்தைப் பற்றியும், அதனை அடைவதற்கான மார்க்கங்கள் பற்றியும் போதித்தும், வாழ்ந்தும் காட்டியிருக்கின்றார்கள். அவையே பின்னாளில் தத்துவங்கள், சமயங்கள் என மக்களால் பின்பற்றப்படுகின்றன. பண்டைய கிரேக்க காலத்திலிருந்தே பொருள்முதல்வாதம், கருத்துமுதல் வாதம் என இரு சிந்தனை முறைகள் நிலவுகின்றன. பொருள் முதல்வாதம் எனும் போது இப்பிரபஞ்சம் பருப் பொருள்களால், அணுக்களால் ஆக்கப்பட்டது எனவும், பருப்பொருளே மூலம் எனவும், அதிலிருந்தே மனிதன் பல ஆண்டு காலம் சிந்தித்து கருத்தைப் படைக்கின்றான் எனவும் போதிக்கின்றது. கருத்து முதல் வாதம், இப்பிரபஞ்சம் கருத்துக்களால் ஆக்கப்பட்டது எனவும் கருத்தே மூலம் எனவும் அதிலிருந்தே பொருள்கள் தொடக்கம் ஏனைய அனைத்தும் தோற்றம் பெறுகின்றது எனவும் போதிக்கின்றது.

இவ்விரு தத்துவப் போக்குகளுக்கும் இடையே மேலும் பல தத்துவ ஞான முறைகள் உள்ளன. பொருள் முதல்வாதம் நிறுவனமயப்பட்ட தத்துவமல்ல. சமயங்கள் யாவும் கருத்து முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டன. கடவுள் என்னும் உயர்ந்த கருத்திலிருந்தே சடப்பொருள்கள், உயிர்கள் யாவும் தோற்றம் பெற்று பரிணாம வளர்ச்சி பெற்றன என சமயங்கள் விளக்குகின்றன. ஒவ்வொரு சமயமும் தமக்கேயுரிய மூல நூல்களைக் கொண்டிருக்கின்றன. இந்து சமயம், பகவத் கீதையையும், பௌத்த சமயம் தர்மபதத்தையும்; கிறிஸ்தவம் வேதாகமத்தையும்; இஸ்லாம், திருகுர்ஆனையும் தமது மூல தத்துவ நூலாகக் கொண்டுள்ளன. இவ்வாறு ஏனைய மதங்களும் மதப் பிரிவுகளும் மூல நூல்களைக் கொண்டுள்ளன. இருந்தும் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு மதங்களிலும் தோன்றும் தத்துவ வாதிகள், சிந்தனையாளர்கள் கடவுள், வாழ்க்கைமுறை, மனித ஒழுக்கம், அனுஷ்டானங்கள் தொடர்பாக புதிய கருத்துக்களை, வியாக்கியானங்களை மக்களுக்குக் கூறிச் சென்றுள்ளார்கள். இந்து சமயத்தில் நாம் எல்லோரும் அறிந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் தத்துவஞானக் உணர்வை ஏற்படுத்தி மக்களைச் சிந்திக்க வைத்தார்கள். சுவாமி விவேகானந்தர் தனது போதனைகள், செயற்பாடுகள் மூலம் ஏழை மக்களின் வறுமையைத் துடைத்து, அவர்களின் மகிழ்ச்சியில் இறைவனைக் கண்டார். கிறிஸ்தவ சமயத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக அதன் துறவியர்கள் மேற்கத்தைய தத்துவத்தையும் சேர்த்து கவர்ச்சியாகப் பயன் படுத்தினார்கள். பௌத்த மதத்தைப் பொறுத்தவரை, அது ஒரு தத்துவமாகவே தோற்றம் பெற்றது. அத்தத்துவம் துக்கம் மாற்றியும், அதிலிருந்து விடுதலை அடைவதற்கான எட்டு செயல்கள் பற்றியும், இறுதியாக பரிநிர்வாணம் என்னும் முழுமையான மகிழ்ச்சி தொடர்பாகவும் கூறுகின்றது. பௌத்தர்கள் புத்தம். சங்கம், தர்மபதம் எனும் மூன்று விடயங்களையும் நம்புகின்றார்கள். இலங்கையில் பௌத்தம் அரச மதமாக, அரசியல் மயமாக்கப்பட்ட மதமாகவே உள்ளது. தேசிய கொள்கை உருவாக்கத்தில் பௌத்த பீடங்கள், சங்கங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இவை ஏனைய இனம், மதம் சார்ந்த மக்களைப் பாதிப்பதாகவேயுள்ளது. பௌத்த தத்துவம் கூறும் சமாதானம், மகிழ்ச்சிக்கு பதிலாக நாட்டில் வாழும் ஒவ்வொரு சமூகத்தினதும், தனிமனிதனதும் துக்கத்திற்கும், அவல வாழ்வுக்குமே உட்படுகின்றன.

18-ம், 19-ம் நூற்றாண்டுகளில் வற்புறுத்தப்பட்ட கைத்தொழில் புரட்சி இயங்கியல் பொருள்முதல்வாத எழுச்சிக்கு வித்திட்டது. அதனை அடியொற்றி 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 1917இல் ஏற்பட்ட ரஷ்ய ஒக்டோபர் புரட்சி சமூக விடுதலை, பொருளாதார சமத்துவம், நவீன அறிவியல் வளர்ச்சி என்பவற்றிற்கு அடித்தளமிட்டது. இவ் எழுச்சி ஏனைய ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் பரவியதோடு சமூக விடுதலையும், தத்துவார்த்த மாற்றங்களும் ஏற்பட்டன. இவை மனித சிந்தனையில், செயற்பாட்டில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. கார்ல் மார்க்ஸ் தத்துவஞானம் பற்றிக் குறிப்பிடுகையில் "தத்துவஞானம், தொழிலாளர்களின் பொருள்முதல் வாதத்தை உள்வாங்க வேண்டும். தொழிலாளர்கள் அல்லது பாட்டாளிகள் தத்துவஞானத்தை கற்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேண்டும்" என்றார். இதனால் 20-ம் நூற்றாண்டில் கம்யூனிஸ நாடுகளில் சிறப்பாகவும், ஏனைய நாடுகளில் பொதுவாகவும் சாதாரண மக்கள் பலரும் பொதுவுடைமைத் தத்துவத்தையும், ஏனைய தத்துவங்களையும் கற்று தத்துவ ஞானப் பயிற்சியைப் பெற்றார்கள்.

1990களில் சோவியத் யூனியனின் உடைவின் பின்னர் உலகில் அரசியல் சமநிலை குழம்பியதோடு, சித்தாந்த சமநிலையும் குழம்பியது எனலாம். இதன் பின்னால் கிறிஸ்தவ, யூத, இஸ்லாமிய, இந்து, பௌத்த அடிப்படைவாதங்களும் வரலாற்று ரீதியாக தோற்றம் பெற்றன. பின்னர் காலத்திற்கு காலம் சீர்திருத்தங்கள், தத்துவார்த்த மாற்றங்கள் ஏற்பட்டே வந்தன. ஆனால் கால, சமூக மாற்றத்தில் குறிக்கப்பட்ட மதத்தைப் பின்பற்றும் சமூகம் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் போது ஒரு குழுவினர் ஆரம்ப நிலைக்கு சென்று மூலப்பிரதியை தமக்கு ஏற்றவாறு உரைபெயர்ப்பு செய்து அதன் மேல் நூறு வீதம் நம்பிக்கை வைக்கும்போது அவர்கள் தீவிரவாதிகளாக பயங்கரவாதிகளாக செயற்படுகின்றார்கள். இச்சிறிய குழுவினரின் பயங்கர நடவடிக்கைகளால் முழு மக்களுமே பாதிக்கப்பட்டு துக்க சாகரத்தில் மூழ்குகின்றார்கள்.

மதவெறியும் அபினைப் போன்றே மனித மூளையை மரத்துப்போக வைத்து ஒற்றைச் சிந்தனைக்குள் உள்நுழைக்கிறது. தங்கள் மதத்தின் நலன்கள் தொடர்பாக பிழையானவரால் ஊட்டப்படும் கருத்துக்களை நம்பி, அவற்றில் சிலவற்றை உள்வாங்கிக் கொண்டு அவற்றுக்குள்ளே நின்று வேறு எதையும் பற்றிச் சிந்திக்காது பின்பற்ற வைக்கிறது மதவெறி. இதுவே முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் நிரந்தரமாக மக்களிடையே நிலைபெறக்கூடிய கசப்புணர்வுகளுக்கும், மானிடச் சிதைவுகளுக்கும் காரணமாகின்றது. இவற்றிலிருந்து மக்கள் விடுதலை அடைய தத்துவஞானத் தெளிவுடன் கூடிய அணுகு முறையே சிறந்த மார்க்கமாகும்.



# 'காத்து' இரு

*காட்டேரிகளின் கலியுகத்தில்*
*மூடிய கல்லறையினுள்*
*மூச்சு முட்ட மூலவர்கள் முனகினர்*

*'கடவுளை காத்திட*
*மதத்தை காக்கவேண்டும்*
*மதத்தை காக்க*
*இனத்தை காக்க வேண்டும்*
*இனத்தை காக்க*
*நலிந்தவன் நரம்புகள் நறுக்கி*
*வலிந்தவன் வானெழ வேண்டும்'*

*சிதையின் சிகரம் ஏறி*
*சீறி சினந்து சூளுரைத்தவன்*
*வானவில்லை மறைத்து தலைவனானான்*

*தூறல் நின்று வானவில் மறைவதற்குள்*
*மடியில் மறைத்துவைத்த*
*இறுதிப்பிடி அரிசியும் களவாடப் பட்டிருந்தது*

*கண் கவிழ்ந்து*
*வாய் கோணிற்று*
*பசி உடலை தின்று செரிக்க*
*வறுமை வாழ்வை வத்தல் போடும்*

*கடவுளை கூவி அழைத்தனர்*
*காக்கவில்லை,*
*மதத்தை தொழுதனர்*
*பலனில்லை,*
*இனத்தை வேண்டினர்*
*எழுந்திருக்கவில்லை,*
*தலைவனை இறைஞ்சினர்*
*காணவில்லை*

*தன்னை காக்க*
*இன்னொருவன் வருவானென்று*
*கடவுள் துகில் கொள்ள சென்றார்*

**தம்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின்
# நேற்றைய மனிதர்கள்
## சிறுகதைத் தொகுதியின் விமர்சனம்

இதயராசன்

கிழக்கிலங்கையின் ஒரு குக்கிராமத்தில் பிறந்து, அன்றைய காலகட்டத்தில் பெண்களின் கல்வி வாய்ப்புகள் அரிதான போதிலும் பல சவால்களைத்தாண்டி, சமூகத்தின் வரம்புகளைக் கடந்து, யாழ்ப்பாணத்தில் மருத்துவ சேவையுடன் எழுத்துலகில் பிரவேசித்தவர். முற்போக்கு இலக்கியத்தின்பால் ஈர்ப்புற்று பெண்ணுரிமை பற்றி அதிகமாக எழுதியவர். பின்னர் புலம்பெயர்ந்து ஐரோப்பிய வாழ்வியல் அனுபவத்துடன் தனது எழுத்தனுபவத்தை விரிந்த தளத்தில் முன்னெடுத்து வருபவர். இவரது 'லண்டன் 1995' என்னும் சிறுகதைத் தொகுதியிலுள்ள ஒரு சிறுகதையை வாசித்த கையோடு, அடுத்த கதையை என்னால் வாசிக்க முடியவில்லை. காரணம் அக்கதை ஏற்படுத்திய அதிர்வலையிலிருந்து மீண்டுவர சில மணித்துளிகள் தேவைப்பட்டன. அந்த அனுபவத்துடன் 'நேற்றைய மனிதர்கள்' சிறுகதைத் தொகுதியிலுள்ள சிறுகதைகளை வாசிக்கும் பொழுது, இன்னொரு அனுபவம் ஏற்பட்டது. பெரும்பாலான கதைகள் அவை நிகழ்கின்ற இடத்துக்கு அழைத்துச் சென்று, அந்த மண்ணும் மணமும், அதன் இதமும், வலியும் உணரவைத்தன.

இத்தொகுப்பிலுள்ள 'பெரும்பாலான கதைகள் ஒரு நாவலுக்கான களத்தினைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பில் கதைகள் எழுதப்பட்டாலும் அவை யாவும் கிழக்கிலங்கையான தனது பிரதேசத்தின் இரத்தமும் சதையுமாக இருக்கின்றன. உள்நாட்டு யுத்தத்துக்கு முன்னரும் பின்னருமான வாழ்வியல் தடங்களைப் பேசுவனவாகவே இருக்கின்றன. இனி கதைத் தொகுப்பிலுள்ள பன்னிரு கதைகள் பற்றிப் பார்ப்போம்.




கிராமத்து வாழ்க்கை சிறு வட்டத்துள் சிறைப்பட்டது. ஆனால் அவர்கள் வெள்ளந்தியானவர்கள். மனதில் படுவதை எவ்விதமான பூச்சுக்களும் இன்றி நேரடியாகவே போட்டு உடைத்து விடுவார்கள். அதற்குப் பின்னால் எந்த உள்நோக்கமும் இருக்காது. அப்போதைய அவர்களது அறிவையும் அனுபவத்தையும் வைத்துக்கொண்டே தமது நடத்தையை வெளிப்படுத்துவர். அதனால் இன்னொருவர் கஷ்டப்படுவார், அவமானப்படுவார், தன்நம்பிக்கையை இழப்பார் என்ற புரிதல் அவர்களிடம் கிடையாது. அவ்வாறான புரிதல்கள் அனுபவமாக அவர்களிடம் சேரும்போது, தம்மைப் பண்படுத்திக் கொள்வர். பண்படாதோரின் கிராமத்து நையாண்டிகளை தன்நம்பிக்கையுடன் எதிர்கொள்பவர்கள், வாழ்வில் உச்சத்தைத் தொடுவர்.

மேற்குறித்த கருத்துக்களுக்கு இணக்கமாகவே 'காங்கிறீட்' என்னும் சிறுகதை எழுதப்பட்டுள்ளது. இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர், ஒரு குக்கிராமத்தில் கல்விபயிலும் மாணவர்கள், ஆண், பெண் பால் வேறுபாட்டின் புரிதலை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள் என்பதை மைதிலி, சிதம்பரம் என்ற பாத்திரங்களூடே மிகவும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

தன்னோடொத்த நண்பிகள் பருவமடைந்தபோதிலும் தான் பருவமடையாத கவலையில் வாடும் தருணத்தில், அவளது உடல்சார்ந்த கிண்டல்கள் எவ்வளவுதூரம் அவளது மனதைப் புண்படுத்தும் என்பதை, 'ஏய் காங்கிறீட்' என்ற வார்த்தை, கூனிக் குறுகிப்போக வைத்தாலும் அதனையும் சவாலாக எடுத்து, வீறுநடை போட்ட மைதிலி நல்ல உதாரணமாகும். 'காங்கிறீட்' என்பது தனது உடல் சார்ந்த இழிவுபடுத்தலாக இருந்ததைப் பின்னர் தனது அனுபவ முதிர்ச்சியினால், கட்டிடங்களுக்கு அத்தியாவசியமான மூலப்பொருள் என்பதையும், அதனைவைத்து பிரமிக்கத்தக்க சாதனைகள் செய்யலாம் என்பதன் மூலம் எதிர்மறையான கருத்தை நேர்முகமாக மாற்றும் திறனை இக்கதையில் காணமுடிகின்றது.

பாடசாலையில் அவமானப்படுத்திய ஒருசாலை மாணவன் தனது வாழ்வில் பட்ட கஷ்டங்களுடன் முதிர்ச்சியடைவதையும், தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்கு ஒளியேற்றிய கணவன் படித்தவர், விரிந்த உலகப் பார்வை உடையவர், பண்பானவர், கண்ணியமானவர் என்று ஆராதித்தமை எல்லாவற்றையும் ஒற்றை வார்த்தையில் போட்டு உடைத்துவிட்டு, மைதிலியின் பார்வையில் வெறும் 'காங்கிறீட்' ஆகக் கிடப்பதோடு கதை முடிவது, கதையின் சிறந்த உத்தியாகக் கொள்ளலாம்.

மகிழ்ச்சியான குடும்பத்தில் சந்தேகம் என்னும் கல்லெறி விழுந்தால், தேன்கூடு போன்ற குடும்பம் கலைந்துவிடும் என்பதை சுசீலா - தியாகராஜா வாழ்வில் ஏற்படும் சம்பவத்தை மையமாக வைத்து விபரிக்கின்ற கதை 'உடலொன்றே உடமையாக'.

ஒரு கணவன் மனைவியிலும், ஒரு மனைவி கணவனிலும் அவநம்பிக்கை கொள்வது, அவர்களின் வாழ்வைச் சீரழித்துவிடும் என்பதை உளவியல், சமூகவியல் சார்ந்து சுருக்கமாகவும் தெளிவாகவும் சொன்ன கதை எனலாம். தான் சம்பாதித்த பொருள் போலவே தனது இணையையும் கருதுவது தவறானது, அங்கு உயிரும் சதையும் மட்டுமல்ல உணர்ச்சியும் ஆசாபாசங்களும் நிறைந்திருக்கின்றன என்ற உண்மையை உறைக்கச் சொல்கின்றது.

காதலித்துத் திருமணம் செய்த, முற்போக்கான எண்ணம் கொண்ட பெற்றோர்களாக இருந்தாலும், யாரும் இலகுவில் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டுவதில்லை என்பதுவே யதார்த்தம். தன்னடக்கம் இல்லாத பணத்திமிருடன் ஊர்த்துழாவாரம் பேசுகின்ற பெண், சண்டியனான தனது தம்பியையும் துணையாகக் கொண்டவள், தனது மகள் ஒண்டுக்கும் வழியில்லாதவனோடு ஓடிப்போனால் எப்படிப் பொறுத்துக் கொள்வாள். அதுவும் ஊர்வம்பு பேசும் கிராமத்தில் என்பதை மனக்கண்ணில் படம்பார்ப்பது போல அழகுற நகைச்சுவை ததும்ப சித்தரிக்கும் கதை 'காதலுக்கு ஒரு பேர்'.

சமூகத்தை நேசிக்காத, எதையும் தனது உடைமையாகக் கொள்ள வேண்டும் என்ற பேரவா கொண்டோர் இறுதியில் மண்கவ்வுவது உறுதி என்பதை 'ஹிட்லரின் காதலி' என்னும் புனைவுக் கதையூடே அழகாகச் சொல்கின்றார். இறுதியில் ஹிட்லர் நம்பிய பெரும்பாலான தளபதிகள் தலைமறைவாக, அவனது நாயும், காதலியுமே மிஞ்சுகின்றனர். அப்போதும் அவன், அவர்களில் அன்பு செலுத்தவில்லை. தனது உடைமைகள் எதுவும் எதிரிகளின் கைகளில் கிடைக்கக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் நஞ்சூட்டிக் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்கின்றான். நடத்தைப் பிறழ்வானவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் ஏற்படும் ஆபத்தினை, சொல்ல வேண்டிய காலத்தின் கட்டாயம் இருக்கவேண்டும் என்பதுவே, இக்கதையை ஆசிரியர் எழுதத்தூண்டியது என்பது நிச்சயம்.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது இனம், மதம், மொழி, பண்பாடு என்பவற்றினையும் கையோடு எடுத்துச் சென்று, அங்கு ஒரு தனி உலகை சிருஷ்டித்து வாழ்கின்றார்கள். தமது பரம்பரை தொடர வேண்டும் என்பதே அவர்களது இலட்சியமாகும். மாறிவரும் பல கலாசாரமுடைய நாட்டில் வாழ்ந்தும் அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை உள்வாங்கவும், தம்மிடமுள்ள பிற்போக்குத்தனங்களைக் கைவிடவும் தயாராக இல்லாத நிலைமறுப்பு வாதிகளாகவே வாழ்கின்றனர். அவர்களது பிள்ளைகள் புதிய கலாசாரத்திற்கும் சிந்தனை முறைக்கும் உட்பட்டு, தமது வாழ்வை அமைத்துக் கொள்ள முற்படும்போது, கட்டுப்பெட்டியாக வாழும் பெற்றோர் தடைக்கற்களாக இருந்து அவர்களது வாழ்வையும் தமது வாழ்வையும் சீரழிக்கின்ற யதார்த்தச் சூழ்நிலை 'நேற்றைய மனிதர்கள்' என்ற கதையில், பாத்திரங்களின் உரையாடல், சித்தரிப்புகளூடே வாசகர்களுக்குப் புரிய வைத்துள்ளார்.

மேலை நாட்டவரின் குடும்ப வாழ்வையும், விருப்புடன் கணவன் மனைவி பிரிந்து போகின்ற யதார்த்தமும், பாலின மாற்றத்தை மேலைத்தேயத்தவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் நிலையில், அந்தரித்த வாழ்வில் நிலைதடுமாறும் பிள்ளைகளையும் இக்கதை சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

வேலுப்போடி என்னும் பூசாரி தனது மந்திர சக்தியால் ஊரையே கட்டிப்போடுகின்றான். அவனுக்கும் அவனது செய்வினை சூனியத்திற்கும் பயந்து, ஊரார் அவனை ஏனென்று கேட்கவில்லை. சந்திரவதனா என்ற பெண்ணில் காமமுற்று, அவளது குடும்பத்தை நிர்க்கதியாக்கித் தனது மனைவியாக்கித் தனது இச்சை தீர்ந்தபின் துன்புறுத்துகின்றான். வேறு வழியின்றி, குடும்ச்சிறையின் இறுதி நம்பிக்கையான தனது மகளது காதலுக்கும் அவன் உலை வைப்பதனைப் பொறுத்துக் கொள்ளா நிலையில், சந்திரவதனா அவனது தம்பி காசிப்போடியின் உதவியுடன் எதிர்த்தெழுந்து வேலுப்போடியை மண்கவ்வச் செய்யும். கதைதான் 'மேதகு வேலுப்போடி'.

இந்தக் கதை நேரடியாக ஒரு பூசாரியின் அட்டூழியங்களைச் சொல்வதற்காக எழுதப்படவில்லை. செய்வினை, சூனியம், மந்திரம், சக்திவாய்ந்த அம்மன் சிலை என்பவை யாவும் குறியீடாகவே சொல்லப்படுகிறது என்பதையும், மேதகு வேலுப்போடி கடற்கரையில் கேட்பாரின்றிக் கிடப்பதாக 2006 இல் எழுதப்பட்ட இக்கதை, வேறொன்றை ஞாபகப்படுத்துவதையும் மறுக்க முடியவில்லை.

வயதான தனது மனைவியை, தோட்டவேலை செய்யவந்த ஆங்கிலேயன் 'டார்லிங்' என்று அன்புடன் அழைத்தது, வயதான கணவனுக்குப் பிடிக்கவில்லை. அந்த அப்பாவி உழைப்பாளியின் வேலைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்புவைக்கும் முயற்சியாக வயோதிபரைப் புண் படுத்தியதாக முறைப்பாடு செய்தமைக்குப் பின்னாலுள்ள உளவியலை விபரிக்கும் கதை, இப்படியும் நடக்குமா என்று வியக்கும் வகையில் அந்த மூதாட்டிக்கு இளமைக்காலத்தில் அநீதி இழைக்கப்பட்டது. என்னதான் பண்பாடு பற்றி ஆண்கள் பேசினாலும் கொடூரமான ஆணாதிக்க வக்கிரத்தை வெளிக்கொணரும் கதை 'டார்லிங்'.

'சாதி' என்ற பண்பாட்டை உயிர் மூச்சாகக் கொண்ட சமூகத்தில் காதல் என்பது வரையறைக்கு உட்பட்டதே. அதனை மீறுகின்ற போது, 'பாசம்' என்ற கயிற்றால் கட்டிச் சாதிக் குழிக்குள் அமிழ்த்துகின்ற அவலம், புலம் பெயர்ந்த நாட்டிலும் தொடர்வதைச் சொல்கின்ற கதைதான் 'தொலைந்துவிட்ட உறவு'.

காதலித்த பெண்ணைத் திருமணம் செய்ய முடியாமல் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து, புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்தாலும் இறுதிவரை தனது காதலியை மறக்கமுடியாமல் திரிசங்கு சொர்க்கத்தில் தொங்குகின்ற வாழ்வே வரமாகப் பெற்றோரின் கதை 'அப்பாவின் இந்துமதி'. நிறைவேறாத காதலின் வலியை சொல்கின்ற கதை என்று மட்டும் ஒதுக்கிவிட முடியவில்லை. கிழக்கிலங்கையின் யுத்தகால வாழ்வியலின் இன்னலைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. இதுபோன்ற ஒரு அவலத்தில் இரட்டை வாழ்க்கை வாழ்வதைப் படம்பிடித்துக் காட்டுவதே 'முகநூலும் அகவாழ்வும்'.

சைவச்சீமான் என்ற தடிப்புடன் புலம்பெயர்ந்து வாழும் ஒரு தந்தை, தனது பாசத்துக்குரிய மகள், அந்திம சேவை நிறுவனம் வைத்திருக்கும் ஆங்கிலே யனைத் திருமணம் செய்வதாகச் சொன்னபோது நிலை குலைந்து போகின்றார். சுற்றம், சமூகம், அந்தஸ்த்து என்று குழம்பி, உளவியல் சார்ந்த சிக்கலில், சிக்கித் திணறுவதை யதார்த்தமாகச் சித்தரிக்கும் கதை 'மக்டோனால்டின் மகன்'.

வறுமை, நட்பு, காதல் தோல்வி, தந்திரம், அமானுஷம் என்பவற்றைக் கலந்து புனைந்த கதைதான் 'பேயும் இரங்கும்'. தன்னிடம் இருந்தால் தேவைப்படுவோர்க்குக் கொடுத்து உதவும் மாதவன். பணம் தேவைபடும்போது கடன்வாங்கிய மைத்துனரும் ஏமாற்றிய கவலையுடன் நள்ளிரவில் வீடு திரும்பும்போது, சுடலையை அண் மிக்கும் தருணத்தில் ஏற்படும் பேய்கள் பற்றிய பயத்தின் பிரதிபலிப்பை வாசகர்களும் அனுபவித்துணரும் வகையில், பதிவு செய்துள்ளார்.

மருத்துவர் ஒருவர் வைத்தியம் பற்றிய உரையாடலில் தன்னை மறந்து எப்படி ஒன்றித்துப் போவாரோ, அவ்விதமே மந்திரம், செய்வினை, சூனியம், பேயாட்டம், கோவில் திருவிழா போன்ற கிராமியச் சடங்கு பற்றிய எழுத்துக்களில் ஒன்றித்து, அவற்றின் நுண்ணிய தகவல்களைத் தத்ரூபமாகச் சிருஷ்டிப்பதற்கு இவரது ஊரின் பின்புலமும் காரணமாக இருக்கலாம். நிறைவாக இத்தொகுப்பில் உள்ள பன்னிரு கதைகளும் வேறு வேறு தளங்களில், வாழ்வின் வெற்றியையும், தோல்வியையும், துரோகத்தினையும், வெறுமையினையும் பேசிய பொழுதிலும் அவை யாவற்றிலும் ஊடு பொருளாக, ஆண்களின் பார்வையில் பெண்கள், அவர்களது உடைமைப் பொருளாகவே இருக்கின்றனர் என்ற உண்மையை உரத்துச் சொல்கின்றார். பெண்கள் உயிரும் உணர்வும் உள்ள, மனித இனத்தின் மூலம் என்பது, ஆணாதிக்க மூளையில் இன்னமும் பதியவில்லை என்ற உண்மையை 'நேற்றைய மனிதர்கள்' முரசறைகின்றது.

ஸ்ரீ

## கிடைக்கப்பெற்றோம்




நூல்: பொறுப்பது உன் விதியோ?

விடயம்: தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற நாடகங்கள் ஐந்தும் போட்டியில் பங்குபற்றிய நாடகங்கள் மூன்றும் அடங்கிய மேடை நாடகங்களின் தொகுப்பு.

நூலாசிரியர்: புண்ணியமூர்த்தி. கணேசராசா

வெளியீடு: மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு.

கிடைக்குமிடம்: வெண்பா- யாழ்ப்பாணம், புக்லாப் - திரு நெல்வேலி, புத்தக பண்பாட்டு பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.



விலை : ரூபா 500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடும் நிலமும் விளையும் பொழுது

குறிப்பு
நேற்றோடு கரைந்த என்னிடம் நாளையைப் பற்றிப் பேச ஒன்றுமில்லை

யாரோ கழுத்தை நெரிப்பது போன்ற உணர்வு
எனக்கு மட்டுமா அல்லது உங்களுக்குமா?

இருளில் கைவீசி நடக்கிறேன்
கவிதையைத் தேடி
மனதில் பேச்சொழிந்து
உள்ளம் திறந்து நடக்கிறேன்

பகலெல்லாம்
காஸ் வாங்கவும் பால்மா வாங்கவும்
லைனில் நின்றதால்
காலும் முதுகும் வலிஎடுத்துக் கிடக்க
ஒற்றைக் கைவிளக்கோடு விடாது நடக்கிறேன்
கவிதை தேடி

உனக்கேன் கவிதை
நாளையிலிருந்து மின்சாரம் ஒரு மணிநேரம் இல்லையாம்
உன் கவிதை வெளிச்சம் தருமா மோனே
என்கிறது காற்று காதுக்கு கிட்ட வந்து
காற்றுக்கே பேச்சு சுதந்திரம் இல்லாத பொழுதுகள்
நாளை என் மகளுக்காய் நான் கண்ட கனவு
அவளுக்கும் கனவாகிப் போய்விடுமோ!
பதை பதைக்கிறது மனது

விடாது நடக்கிறேன்
இருள் இன்னும் இன்னும்
என்னைச் சூழ்ந்து கொள்கிறது
போகிற வீதியெல்லாம் பள்ளம்
விழுந்து எழுந்து போகிறேன்
கவிதைக்காய் போகிறேன்
கண்டுபிடித்தே தீருவேன்

அன்றொரு நாளில் பகலை இரவென்று நம்ப வைக்க
கதைகள் பின்னப்பட்டன
இருளைக் கடந்து வெளிச்ச தேசம் காட்ட
மீட்பன் என ஒருவன் வந்தான்
அறுபத்தொன்பது குதிரைகள் பூட்டிய ரதத்தில்
ஒய்யாரமாய் வந்தான்
ஓராயிரம் பழங் கதைகள்
வெற்றிக் கதைகள்
ஒழுக்கக் கதைகள்- என
எல்லாம் பேசி



த. வி. ரிஷாங்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பனின் வருகையை கொண்டாடி எல்லோரும்
கவிதைகளை பாடித் தீர்த்தனர்
நான் போகிற வழியெல்லாம் அந்த கவிதைகள்
காலில் சிக்கி
தொந்தரவாய் கிடந்தன
சில இடங்களில் பள்ளங்களை நிரப்ப
இன்னும் சிலவற்றில் குப்பைகளை அள்ள என
அக் கவிதைக் கடதாசிகள் பயன்பட்டன
அக் கவிதைகளை குப்பை என்பதா அல்லது
குப்பைகளை கவிதை என்பதா
எனக்கேன் உந்த வம்பு
நான் தேடுவது என் கவிதையை
நாளையைப் பற்றிய கவிதையை அல்ல
என் நேற்றையைப் பற்றிய கவிதையை

நேற்று என் நாள்

நிலமிருந்தது என்னிடம்
கிணறிருந்தது என்னிடம்
வளவிருந்தது என்னிடம்
வயல் இருந்தது என்னிடம்
எல்லாம் செழித்தும் இருந்தன

ஒருநாள்
சொல்லிக் கொள்ளாமல்
போதிமரத்தடியில் பூகம்பம் வந்தது
வந்த பூகம்பம் போதி மரத்தை மட்டும் விட்டு
ஊரை விழுங்கிக்கொண்டது
விழுங்கப்பட்ட ஊரின் நிலமெல்லாம்
உடலங்கள் விளைந்து நின்றன
வீடுகளின் சுவரெல்லாம் சன்னங்கள்
கோலம் போட்டிருந்தன
கிணறுகள் நீரோ கிணற்று மீனோ இல்லாமல்
காய்ந்து கிடந்தன
வளவெல்லாம் இரத்தம் காய்ந்து
கொடிய நெடி வீசிக்கொண்டு இருந்தது
காற்றில் நறும் மலர்களின்
வாசம் கண்டு நாளாச்சு
கந்தக வாசமே நிறைந்திருந்தது

நேற்றைய நாளிலிருந்து
எதிர்கால
நம்பிக்கையெல்லாம் கொட்டி எழுதித் தள்ளிய
மகிழ்வான கவிதையைத் தேடிப் போன
எனக்கோ அது இளகிப் போன காகிதத்தில்
சிதைந்து கிடந்தது கடற்கரையோரமாய்
எட்டாத் தூரத்தில் பறந்த சோகப் பறவை
என்முகத்தில் வந்து இறங்கியது

கவிதையைத் தேடி என் பயணம்
அடர்ந்த காட்டில் திக்குத் தெரியாத
இடத்தில் சிறு திட்டில் வந்து நிற்கிறது
சிறு திட்டும் எனக்குச் சொந்தமில்லை
அது அந்நிய நிலம்

துணைபிரிந்த குயிலின்
சோக ஒலியாய் என் கவிதை எங்கிருந்தோ
குரல் எழுப்புகிறது
இருளில் எங்கு தேடுவேன்
என் கவிதையை

நேரங்கடக்கையில்
கவிதையின் குரல் வர வர ஓலமாய்
கேட்கிறது
காற்றோடு கோவித்து நாணலும்
அசைய மறுத்து நிற்கிறது
அச்சம் மெல்ல மெல்ல என் கால்களை
இறுக்கிக் கொள்கிறது

இனிவரும் நாளில் வீடும் நிலமும் விளையாது காண்பீர்
ஒரு மாவலி கண்ட நிலமும்
அதன் சனமும்
கூனிக் குறுகி
பார்வை மங்கிக் கிடக்க காண்கிறேன்
கைவிளக்கை நம்பி இருட்டில் பயணம் போய்
அடித்த கொடும் காற்றில் தேடி வந்த கவிதையும் போய்
விளக்கும் அணைந்து நிற்கிறேன்

கால் சறுக்குகிறது
போட்ட கணக்கெல்லாம்
பொய்யாகிப் போச்சு
அடித்த கொடும் மழை
வெள்ளக் காடாக்கி எல்லாத்தையும்
மூழ்கடித்து போகிறது
என் கவிதை தேடிய பயணமும் வெள்ளத்தோடு
கரைந்து போகிறது

ஸ்ரீ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் ஒன்றியத்தின் முடிவின் 30 ஆண்டுகள் – 3

## மிகைல் கொர்பச்சொவ்: துன்பியலின் கடைசி அத்தியாயம்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

*கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 26ம் திகதி சோவியத் யூனியன் உத்தியோகபூர்வமாகக் கலைக்கப்பட்டு முப்பது ஆண்டுகள் நிறைவடைந்தன. இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து சோவியத் யூனியன் ஒருபுறமும் அமெரிக்கா மறுபுறமுமாக இருந்து நடைபெற்ற கெடுபிடிப்பேரின் முடிவை 1989 நவெம்பர் 9ம் திகதி நிகழ்ந்த பெர்லின் சுவரின் தகர்ப்பு அடையாள பூர்வமாக உணர்த்தி நின்றது. சோவியத் ஒன்றியத்தின் முடிவு சோசலிசத்தின் தோல்வி மார்க்ஸியத்தின் முடிவு, கம்யூனிசத்திற்குக் கல்லறை எனப் பலவாறு பேசப்பட்டது. இனிவரும் நூற்றாண்டு தாராண்மைவாத ஜனநாயகத்தின் நூற்றாண்டு என்று சொல்லப்பட்டது. இன்று மூன்று தசாப்தங்களின் பின்னர் உலகம் எவ்வாறு இருக்கிறது என்பதைத் தத்துவார்த்த ரீதியில் வரலாற்றுவழிநின்று மீள்பார்வை செய்யும் முயற்சியே இந்தத் தொடரின் இரண்டாவது கட்டுரை.*

### தொடக்கக் குறிப்புகள்

சோவியத் யூனியனின் இறுதித் தலைவராக இருந்த மிகைல் கொர்பச்சொவ் அண்மையில் மரணமடைந்தார். கொர்பச்சொவ்வின் மரணமானது சோசலிச எதிர்ப்பைக் கொண்டோரிடத்தும் கெடுபிடிப்போர் காலத்தில் மேற்குலகில் பதவிகளில் இருந்தோரிடத்தும் அஞ்சலி மழையைத் தூண்டியது. அவர்கள் கொர்பச்சொவ்வின் பார்வை, தைரியம் மற்றும் நேர்மையைப் பாராட்டினர். அமெரிக்காவின் முன்னாள் அயலுறவுச் செயலர் ஹென்றி கிஸிஞ்சர் மற்றும் பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஆகிய இருவராலும் ஒரு வாழ்க்கை பாராட்டப்படுகின்றதென்றால் நிச்சயம் கோளாறு இருக்கிறது. மேற்குலகத்தில் அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு போட்டியாக பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ வல்லரசாக உருவாகி நிலைபெற்ற சோவியத் யூனியன் சிதைவதற்கு தலைமை தாங்கியதற்காக அவர்கள் கொர்பச்சொவ்வை மதிக்கிறார்கள். கொர்பச்சொவ், அரசியல், மற்றும் பொருளாதார சுதந்திரத்தை கொண்டு வந்தார், கெடுபிடிப்போரை முடிவுக்கு கொண்டுவந்தார், சர்வதேச அமைதி மற்றும் நிராயுதபாணியான காலகட்டத்தை உருவாக்கினார் என்ற படிமம் உருவாக்கப்பட்டுள்ளது. இது இவர் குறித்த ஒருபக்கச் சித்திரம். இது பரந்த் மற்றும் நீண்ட வரலாற்று சூழலை மறைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு பொய்மையான சித்திரமாகும்.

சோவியத் யூனியன் பொருளாதார சுரண்டல் நோக்கங்களுக்காக இராணுவ வெற்றியால் கட்டமைக்கப்பட்ட நாடன்று. அது முன்னேற்றத்திற்கான புரட்சிகர சக்திகளுக்கும், மேற்கத்திய ஆதரவுடைய கொடுங்கோலர்கள் மற்றும் சுரண்டுபவர்களுக்கும் இடையிலான உள்நாட்டுப் போரின் முடிவால் கட்டப்பட்டது. அக்கட்டுமானம் இரண்டாம் உலகப்போர் காலத்தில் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொண்டது. போரின் முடிவுக்குப் பிறகு, நாஜி படையெடுப்பாளர்கள் மற்றும் அவர்களின் தேசியவாத, பாசிச, யூத எதிர்ப்பு ஒத்துழைப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளின் பின்னர் சிதிலமடைந்த சமூகங்களுக்கும் தேசங்களுக்கும் மத்தியில், கிழக்கு ஐரோப்பாவில் சோசலிசத்தைக் கட்டமைக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கு சோவியத் யூனியனில் சோசலிசம் மீண்டும் கட்டப்பட்டது மிகப்பெரிய உந்துதலாக இருந்தது.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த மூன்று தசாப்தங்களின் பின்னர், அமெரிக்கா மற்றும் மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகளை விட சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளில் பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருந்தது. முழு வேலைவாய்ப்பு மற்றும் ஒப்பீட்டளவில் தாராளமான நலன்புரி வசதிகள், சமூக மற்றும் கலாச்சார வசதிகளுக்கான அசாதாரண அணுகல் ஆகியவற்றின் நிலைமைகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. ஆயினும்கூட, சோசலிசத்திற்கான பாதையை தெரிவு செய்த சமூகங்களில் பொருளாதார மற்றும் அரசியல் பலவீனங்களும் வேரூன்றின. வள ஒதுக்கீடு, கழிவுகள், சுற்றுச்சூழல் சீரழிவு, புதுமை மற்றும் உற்பத்தித்திறன் குறைதல் போன்ற பிரச்சினைகள் வளர்ந்தன. குடிமக்கள் அதிகாரத்துவ-கட்டளை அமைப்பின் முக்கிய அம்சங் களில் இருந்து அந்நியப்பட்டதாக உணர்ந்தனர். இது ஜனநாயகப் பங்கேற்பில் மக்களை ஈடுபடுத்தத் தவறியது.

மேற்கத்திய நாடுகளால் ஒவ்வொரு கட்டத்திலும் நடத்தப்பட்ட இடைவிடாத கெடுபிடிப்போர் நெருக் கடியை கொடுத்தபடியே இருந்தது. காலப்போக்கில் இது ஆயுதப் போட்டியாக மாறியது. இவையனைத்தும் இணைந்து சோசலிச முகாமில் முரண்பாடுகள் தீவிரமடைந்தன. முதலாளித்துவ சமூகத்தில், ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்காக இராணுவவாதமும், போரும் இலாபத்தின் இயக்கிகள். சோசலிசத்தின் கீழ், யாருக்கும் லாபம் இல்லை மற்றும் ஆயுத உற்பத்தி என்பது பொது நலனுக்காக பயன்படுத்தப்படக்கூடிய வளங்களின் வடிகால் ஆகும். இந்த வேறுபாடு சரிவர விளங்கிக் கொள்ளப்படவில்லை.

1985 இல், மிகைல் கொர்பச்சொவ் அதியுயர் பதவிக்கு வந்தபோது, பொருளாதார, அரசியல் சீர்திருத்தத்தின் தேவை மறுக்க முடியாததாக இருந்தது. அதற்குத் தீர்வாக அவரது அரைகுறையான உள்நாட்டு திட்ட மான "பெரெஸ்ட்ரோயிகா" (பொருளாதார மறுசீரமைப்பு) மற்றும் "கிளாஸ்னோஸ்ட்" (ஒளிவு மறைவின்மை) விரைவில் குழப்பத்திற்கு வழிவகுத்தது.

மத்தியில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சோவியத் பொருளாதாரம் சந்தை சக்திகளால் துண்டாடப்பட்டது. கொர்பச்சொவ் மக்கள் சொல்வதைக் கேட்பது போன்றதொரு தோற்றத்தைக் கொடுத்தார். ஆனால் உண்மையில் அவர் தனது சொந்த முதலாளித்துவ சார்பு ஆலோசகர்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"சுதந்திர விவாதம்" என்ற மறைப்பின் கீழ், சோசலிச எதிர்ப்பு, தேசியவாத மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட கருத்துக்கள் முன்னிலையடைந்ததோடு அங்கீகாரத்தையும் பெற்றன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி இந்தக் கருத்துக்களை திறம்பட எதிர்கொள்ளத் தகுதியற்றதாக சீரழிந்திருந்தது.

பொருளாதாரம் சீரழிந்து, சமூக சேவைகள் சரிந்து சோவியத் யூனியனின் தொகுதி குடியரசுகள் பிரிவை நோக்கி நகர்ந்ததால், பல மில்லியன் குடிமக்கள் வறுமையில் தள்ளப்பட்டனர். ரஷ்யாவில் சராசரி ஆயுட்காலம் பதிவுசெய்யப்பட்ட வரலாற்றில் எந்த நாட்டிலும் இல்லாத மிகப்பெரிய வீழ்ச்சியை அனுப வித்தது. இதை கொர்பச்சொவ் தனது சீர்திருத்தத் திட்டங்களின் ஊடு சாத்தியமாக்கினார். இதனால்தான் கொர்பச்சொவ்வின் மரணத்தை இன்று அவரது சொந்த நாட்டில் மக்கள் பரவலாக கவனிக்கவில்லை. இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரஷ்யா-உக்ரேன் போருக்கு ஒருவகையில் கொர்பச்சொவ் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்.

1986 அக்டோபர் இல் ரெய்காவிக் உச்சிமாநாட்டில் மூலோபாய அணு ஆயுதக் குறைப்புக்கான தனது தைரியமான முன்மொழிவுகளை அமெரிக்கா ஏற்க மறுத்து வீட்டோ செய்த பிறகும், நேட்டோ கிழக்கு நோக்கி விரிவடையாது என்ற அமெரிக்க, ஜெர்மன் மற்றும் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களின் அனைத்து உறுதிமொழிகளையும் நம்பிய பைத்தியக்காரத்தனத்தைச் செய்தார் கொர்பச்சொவ்.

"பொதுவான ஐரோப்பிய வீடு" பற்றி அவர் கனவு கண்டார். அனைவரையும் உள்ளடக்கிய சமாதானச் சகவாழ்வான வீடு பற்றிய அவரது பார்வையின் சாத்தியமின்மையை காலம் ஏகபோக மூலதனம், ஐரோப் பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவால் அவருக்கு உணர்த்தியது. அப்போது காலங் கடந்திருந்தது. கொர்பச் சொவ்வும் சோவியத் யூனியனும் இன்று இல்லை. ஆனால் மேற்கத்திய ஏகாதிபத்தியம் வாழ்கிறது, உக்ரேனில் வியாபித்திருக்கிறது. ஆயுதம் ஏந்தி அடுத்த போருக்குத் தயாராகிறது.

## கொர்பச்சொவ் பற்றிய ஹொப்ஸ்பாமின் மதிப்பீடு

இருபதாம் நூற்றாண்டின் முதன்மையான மார்க்சிய வரலாற்றாசிரியர்களில் ஒருவரான எரிக் ஹொப்ஸ்பாம் மிகைல் கொர்பச்சொவ் பற்றி வேறுபட்ட நிலைப்பாட்டை உடையவராக இருக்கிறார். கொர்பச்சொவ் பற்றிய அவரது பார்வை பின்வருமாறு இருக்கிறது:

"வரலாற்றில் கொர்பச்சொவ்விற்கு ஒரு இடமுண்டு. தனிப்பட்ட முறையில் அவர்மீது எனக்கு நிரந்தர அபிமானம் உண்டு. இன்றுவரை உலகம் அணுசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தப் பேரழிவின் நிழலிலேயே இருப்பதற்கும் இன்னொரு அணுசக்தி யுத்தம் ஏற்படாமல் இருப்பதற்கும் காரணமானர் என்ற பெருமை கொர்பச்சொவ்வைச் சாரும். மேலும் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசத்தி லிருந்து அதற்கு அடுத்த பின்-கம்யூனிச சகாப்தத்திற் கான மாற்றம் அமைதியாக நிகழ்ந்துள்ளது. முன்னாள் சோவியத் யூனியனின் பெரும்பாலான பகுதிகளில் குறிப்பிடத்தக்க இரத்தக்களரி இல்லாமல் இது நிகழ்ந் துள்ளது. இதற்கான வாழ்த்துக்கள் கொர்பச்சொவ்வையே சேரும். ஆனால் இவ்வாறு மட்டும் வரலாறு அவரை நினைவுகூராது.

இங்கு எழுகிற கேள்வி யாதெனில் கொர்பச்சொவ் வினால் கொண்டுவரப்பட்ட பெரெஸ்ட்ரோயிகா இரண் டாவது ரஷ்ய புரட்சியைக் கொண்டு வந்ததா? இல்லை. இது 1917 புரட்சியின் மீது கட்டமைக்கப்பட்ட அமைப்பின் சரிவைக் கொண்டு வந்தது. அதைத் தொடர்ந்து சமூக, பொருளாதாரப் பண்பாட்டு அழிவின் காலகட்டத்தைக் கொணடு வந்தது. இந்த அழிவிலிருந்து ரஷ்யா மக்கள் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. இதன் தீவிரம் எத்தகையதெனில் உலகப் போர்களில் இருந்து மீண்டு வருவதற்கு ரஷ்யா எடுத்துக்கொண்டதை விட இந்தப் பேரழிவிலிருந்து மீள்வதற்கு ஏற்கனவே அதிக காலத்தை இது எடுத்துள்ளது. இன்னுமே ரஷ்யா இதிலிருந்து மீளவில்லை.

சோவியத்திற்குப் பிந்தைய இந்தப் பேரழிவிலிருந்து என்ன வெளிவரும் என்பது பெரெஸ்ட்ரோயிகா வால் திட்டமிடப்படவில்லை. பெரெஸ்ட்ரோயிகாவின் ஆதர வாளர்கள் சீர்திருத்தப்பட்ட கம்யூனிசத்தின் அல்லது ஒரு சமூக-ஜனநாயகமயமாக்கப்பட்ட சோவியத் ஒன்றி யத்தின் தங்கள் திட்டம் கூட சாத்தியமற்றது என்பதை உணர்ந்த பின்னரும் கூட இதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பது குறித்து சிந்திக்கவில்லை. புதிய கட்டமைப்பானது தாராளவாத மேற்கத்திய - இன்னும் துல்லியமாக அமெரிக்க - மாதிரியின் முழு முதலாளித்துவ அமைப்பாக இருக்க வேண்டும் என்று நம்பியவர்களால் கூட எவ்வகையான விளைவுகளை இந்தச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தும் என்று கற்பனை செய்யப்படவில்லை.

பெரெஸ்ட்ரோயிகாவின் முடிவு ரஷ்யாவை எந்த உண்மையான கொள்கையும் இல்லாத இடமாக மாற்றியது. மேற்கத்திய பொருளாதார வல்லுநர்களின் கட்டுப்பாடற்ற தடையற்ற சந்தை பரிந்துரைகள் பயனற்றவையாக இருந்தன. அதனையே கொர்பச்சொவ் முன்னெடுத்தார். பரிந்துரைகளை வழங்கியோர் சோவியத் பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை அறியாதோர். சோவியத் பொருளாதாரம் எவ்வாறு செயற்பட்டது என்பது பற்றி அதிகம் அறியாத வர்கள். அவர்களின் அடிப்படையாக இருந்தது, மேற் கத்திய முதலாளித்துவம் எவ்வாறு இயங்குகிறது என்பதே. மாற்றத்திற்கு அவசியமான நீண்ட மற்றும் சிக்கலான விடயங்கள் குறித்து கருத்தில் கொள்ளப்பட வில்லை. இதனால் சரிவு தொடங்கியபோது அது வேகமாக அதலபாதாளத்திற்குக் கொண்டு சென்றது. இதற்கான பொறுப்பு கொர்பச்சொவ்வையே சாரும்." இவ்வாறு கொர்பச்சொவ்வை நினைவுகூரும் எரிக் ஹொப்ஸ்பாம் சோவியத் யூனியனின் வேகமான சிதைவு உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திய தாக்கங் களையும் பாதிப்புக்களையும் கூடக் கொர்பச்சொவ்வின் தவறின் விளைவிலானவை என்றே காண்கிறார்.

1980களில் சோவியத் பொருளாதாரம் சீர்திருத்த முடியாததாக இருந்தது. 1960களில் ஸ்டாலினின் மறைவுக் குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் இந்தச் சரிவுக்கான பாதையை அமைத்தார்கள் என்பதில் மாற்றுக் கருத் தில்லை. ஆனால் சோவியத்தின் திடீர் சரிவு 1980 களின் பிற்பகுதிக்கு முன்னர்வரை சாத்தியமில்லை அல்லது எதிர்பார்க்கப்படவில்லை. மெதுவான காலமெடுக்கின்ற சிதைவு உலக ஒழுங்கில் ஒரு புதிய நிலையை ஏற்படுத்தியிருக்கும். அவ்வாறான நிலையில் சர்வதேச நிலைமை மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கும் என்று வாதிடும் ஹொப்ஸ்பாம், அதற்கு வரலாற்றில் இருந்து சான்றுகளைக் காட்டுகிறார். முதல் உலகப் போருக்குப் பிறகு ஆஸ்ட்ரோ-ஹங்கேரிய மற்றும் ஒட்டோமான் பேரரசுகளின் வீழ்ச்சியைப் போலவே - 18 ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு பெரிய உலக வல்லரசாக இருந்த ஒற்றை ரஷ்ய அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சர்வதேச சீர்குலைவு ஏற்பட்டது. இதைப் போன்ற தொன்றையே பெரெஸ்ட்ரோயிகா செய்து முடித்தது என்கிறார்.

## கொர்பச்சொவ்: மறுமதிப்பீடு

இரண்டாம் உலகப்போரில் சோவியத் யூனியனுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பில் இருந்து மீள்வது மிகுந்த சிரமமான காரியமாயிற்று. ஆனால் ஸ்டாலின் தலைமையில் போரிலிருந்து முன்னிலும் வீரியமுடைய ஒரு நாடாக சோவியத் யூனியன் வளர்ந்தது. ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் தவறுகள் நிகழ்ந்துள்ளன. அதில் மாற்றுக் கருத்தில்லை. அவை சோவியத்தின் சரிவுக்குப் பங்களித்துள்ளன. ஆனால் முதன்மையான பிரச்சினை ஸ்டாலினின் மறைவையடுத்து ஆட்சிக்கு வந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைகளின் செயற்பாடுகளே. சோவியத் யூனியனின் சரிவு திடீரென்று நிகழ்ந்ததல்ல. சோவியத் யூனியன் போன்ற பெரிய நாட்டில் ஜாரிய ஏகாதிபத்தியத்தின் கீழ் குறை விருத்தியடைந்த ஒரு முதலாளித்துவ அமைப்பின் வரலாற்றுப் பின்னணியில், சோசலிச ஆட்சியை நிறுவி நிர்வகிப்பது எளிதல்ல. புரட்சியின் வெற்றியை அடுத்து இடையறாது அயற்தலையீடுகளும் பல்வேறு சோவியத் விரோத நடவடிக்கைகளும் மிகுந்த உலகச் சூழலில் சோவியத் யூனியனையும் அதன் பாட்டாளிவர்க்க அரசதிகாரத்தையும், பேணிக் காப்பது மிகச் சிக்கலானது. லெனின் தலைமை முகங்கொடுக்க வேண்டியிருந்த பிரச்சினைகளை விடப் பெரிய பிரச்சினைகளுக்கு ஸ்டாலின் தலைமை முகங்கொடுக்க வேண்டிருந்தது. சோவியத் புரட்சி எந்த நிலையிலும் ஒரு சீரான முறையில் மேல்நோக்கி முன்னேறவில்லை. இதை விளங்கிக் கொண்டே மா ஓ சேதுங் சோவியத் அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு முரண்பாடுகள் பற்றிய தன் கட்டுரைகளை எழுதினார்.

க்ருஷ்ச்சொவ் தலைமையின் கீழ் சீர்குலையத் தொடங்கிய சோவியத் பொருளாதாரம் சோவியத் ராணுவ விஸ்தரிப்பாலும், அமெரிக்காவுடனான ஆயுதப் போட்டியாலும், உலக மேலாதிக்கத்திற்கான போட்டியின் விளைவாகவும் மேலும் துரிதமாக சீர்குலையலாயிற்று. க்ருஷ்ச்சொவ்விற்கு பின்னர் வந்த ப்ரெஷ்னெவ் தலைமையின் வீழ்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகியது. ப்ரெஷ்னெவ் தலைமையின் கீழ் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் அரசினதும் கட்சியினதும் உயர் மட்டங்களில் பரவலாகிவிட்ட காரணத்தாலும் அந்த அதிகார வர்க்கத்தின் செல்வாக்கை நிலை நிறுத்தும் கருவியாகச் செயற்பட்ட அரச இயந்திரத்தின் வலிமை யான செயற்பாட்டின் விளைவாகவும் ப்ரெஷ்னெவைத் தூக்கி எறிவது இலகுவானதாக இருக்கவில்லை. ப்ரெஷ்னெவ் ஆட்சிமுறையின் குழறுபடிகளினால் ப்ரெஷ்னெவின் இடத்திற்கு கொர்பச்சொவ்வின் வருகை பல வகைகளில் வரவேற்கத்தக்க ஒன்றாகவே தோற்ற மளித்தது. சோவியத் யூனியனின் பொருளாதார நிலை யையும் அதன் சோசலிச ஜனநாயக முறையின் சீரழிவையும் கொர்பச்சொவ் சரியாகவே அடையாளம் கண்டார். ஆனால் அதற்கு அவர் முன்வைத்த தீர்வுகள் சோவியத் யூனியனையே சிதைத்தன.

அரசும் அரசியற் தலைமையும் சோவியத் மக்களது நம்பிக்கையை இழந்த நிலையில் மக்களுக்கான அரசும் அரசியற் தலைமையும் என்ற தகுதியையும் திறமை யையும் எப்போதோ அவை இழந்துவிட்டிருந்தன. இந்நிலையில் மாற்றத்திற்கான பிரதிநிதியாக கொர்பச்சோவ் அதிகாரத்திற்கு வந்தார். திண்டாடிக் கொண்டிருந்த கட்சிக்குள் மிகுந்த தயக்கத்துடனும் சீர்திருத்தத்திற்கான தேவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சீரழிந்துள்ள பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு சோவியத் யூனியன் தன் ராணுவ விஸ்தரிப் பையும் ஆக்கிரமிப்புக் கொள்கையையும் கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானது. இதே காலப்பகுதியில் அமெரிக்காவின் இராணுவ மேலாதிக் கமும் அதன் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தியது. ஜப்பானினதும் மேற்கு ஜெர்மனியினதும் எழுச்சி அமெரிக்காவிற்கு சவாலானதாக மாறியது. எனவே ஆயுதக் குறைப்பு இரு பெரு வல்லரசுகளுக்குமே அவசியமாகி விட்டது. ஏனெனில் தடுமாறும் பொருளா தாரங்களால் இன்னொரு ஆயதமோதலுக்குத் தயாரா வதும் இராணுவச் செலவீனங்களை அதிகரிப்பதும் சாத்தியமல்ல. இதைச் சாத்தியமாக்கும் வகையில் உலகளாவிய நிலையில் ஆயதமோதலை ஏற்படுத்தக் கூடிய மோதல்கள் முடிவுக்கு வந்திருந்தன. எனவே இன்னொரு பாரிய ஆயதமோதலை உந்தித் தள்ளுவதற் கான வாய்;ப்புகள் குறைவாகவே இருந்தன.

இந்தப் பின்னணியில் கொர்பச்சொவ்விற்கு உலகின் புதிய சமாதான தேவதையாக காட்சி தருவது சிரமமாக இருக்கவில்லை. இதுதான் கொர்பச்சோவ் சமாதான விரும்பியாக அறியப்பட்டு நோபல் பரிசுவரைப் பெற்றதற்கான காரணம். கொர்பச்சோவ் எதிர்பார்த்ததை விட மாற்றங்கள் விரைவாக நடந்தன. ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட தோல்வியும் போலந்தின் அரசியல் நெருக் கடியும் கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனின் உள்ளேயும் சோவியத் ஆட்சியின் அதிகாரத்திற்கு ஏற்பட்ட சவால்கள் அனைத்தும் கொர்பச்சோவின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கின. கிழக்கு ஐரோப்பிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுப் பதிலும் சர்வதேசப் பிரச்சினைகளைச் சமாளிப்பதிலும் கொர்பச்சொவ் தலைமை தெரிந்த பாதையானது சோசலிசத்தை நிலை நிறுத்தி மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதற்கு மாறாகச் சிக்கலான பிரச்சினைகளைக் கைகழுவி சோவியத் யூனியனுள் தன் அதிகாரத்தை நிறுவுவதையே நோக்காகக் கொண்டிருந்தது. இதன் போக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கொர்பச்சொவ் தலைமை எதிர்பாராத புதிய உள் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன.

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் நடாத்திய ஆக்கிரமிப்பே சோவியத்தின் பன்முக வீழ்ச்சிக்கு வழி வகுத்தது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆப்கானிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தானில் சோவியத் யூனியனின் இயலாமையின் விளைவான பின்வாங்கல் சோவியத் இராணுவ வலிமை பற்றி எதிரிகளது அச்சத்தை இல்லாமல் செய்தது. இது சோவியத் யூனியனின் நேச சக்திகள் மத்தியில் நம்பிக்கையீனத்துக்கும் தளர்ச்சிக்கும் வழிகோலியது. சோவியத் யூனியனின் உள்ளே நெருக்கடிகள் தீவிர மாகியது. தனது அதிகாரத்தைத் தக்கவைக்கவே அவர் பாடுபட்டார். முக்கியமான விடயங்களில் அவர் கவனஞ் செலுத்தத் தவறினார். உதாரணமாக சிறுபான் மைத் தேசிய இனங்களின் மத்தியில் இருந்த முரண்பாடுகளைக் கையாள்வதில் கொர்பச்சொவ் மந்த மான போக்கைக் கடைப்பிடித்தார். இது அம்முரண்பாடு களின் வளர்ச்சிக்கு வித்திட்டதோடு புதிய முரண்பாடு களையும் தோற்றுவித்தது. இம் முரண்பாடுகளின் எதிரொலி இன்றுவரை நீடிக்கிறது.

## நிறைவாக

மேற்குலகால் கொண்டாடப்படும் ஒருவராகவே கொர்பச்சோவ் மறைந்தார். ரஷ்யர்களும் முன்னாள் சோவியத் குடியரசில் வாழ்ந்தவர்களும் அவரைக் கொண்டாடுகிறார்களா என்ற கேள்வியே அவரை மதிப்பிடுவதற்குச் சரியான அளவுகோலாக இருக்க முடியும். 2007ம் ஆண்டு உலகின் மிகவிலையுயர்ந்த பைகளை உற்பத்தி செய்யும் பிரெஞ்சு நிறுவனமான Louis Vuitton இன் விளம்பரமொன்றில் தோன்றினார் கொர்பச்சோவ். இதுவே அவரது செயல்களுக்கான மிகச்சிறந்த கருத்துருவாக்கமாக இருக்கவியலும். அவ்விளம்பரத்தில் மிகவும் விலையுயர்ந்த Louis Vuitton பையொன்றுடன் Limousine காரில் அவர் அமர்ந்திருக்கிறார். இதைவிடச் சிறப்பாக கொர்ப்ச்சோ வின் பங்களிப்பை நினைவுகூரவியலாது. இவர் விளம்பரத்தில் தோன்றுகின்ற முதலாவது தடவை இதுவல்ல. இவர் 1997ம் ஆண்டு Pizza hut விளம்பரத்தில் தோன்றினார். அந்த விளம்பரம் இதுதான்:

*கொர்பச்சோவ் தனது 10 வயது பேத்தியுடன் ரஷ்யாவில் உள்ள Pizza hut உணவகத்தில் பீட்சாவை ரசிக்கக் அமர்ந்திருக்கும்போது, அருகில் இருந்த மேசையில் அவரை அடையாளம் கண்டுகொண்ட இருவர் கொர்பச்சோவ்வின் நாட்டுக்கு நல்லது விளைந்ததா அல்லது தீமை விளைந்ததா என்று வாதிடத் தொடங்குகின்றனர். "அவரால் எங்களுக்கு பொருளாதார நெருக்கடியே பரிசாகக் கிடைத்தது" என்று ஒரு பெரியவர் கூறுகிறார். அதற்கு ஒரு இளைஞன், "அவரால் எங்களுக்கு வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன" என்று வாதிடுகிறார். வாதம் தொடர்கிறது. குறுக்கிட்ட பெண்ணொருவர் "அவரால் எங்களிற்கு Pizza hut போன்ற பல விடயங்கள் கிடைத்தன" என்று அந்தப் பெண் கூறுகிறார். உணவகத்தில் கூடியிருந்தோர் Pizza hut யை சாத்தியமாக்கியதற்கு கொர்பச்சோவை பாராட்டுகின்றனர்.*

சோவியத் யூனியனின் முடிவின் முப்பதாண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக ரஷ்யாவில் உள்ளவர்களிடம் குறிப்பாக முடிவுக்கு வந்தபோது பதின்ம வயதுகளில் இருந்தவர்களிடம் இதுகுறித்துக் கருத்துக் கேட்கப்பட்டது. அதில் ஒருவர் கொர்ப்ச்சோவ் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கு சொன்ன பதிலே ரஷ்யர்கள் இவர் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதற்கான சிறந்த பதிலாக இருக்க முடியும். "ஸ்டாலினின் மறைவோடு புரட்சிகர சோவியத் யூனியன் தனது அஸ்தமனத்தைத் தொடங்கியது. கொர்ப்ச்சோவ் இந்த அஸ்தமனம் என்ற துன்பியலின் கடைசி அத்தியாயம்". ஸ்ரீ




### கிடைக்கப்பெற்றோம்

*நூல்: கோவர்த்தனம்*

*விடயம்: மன்னார் சூழலை பகைப்புலமாக கொண்ட நாவல். குறுகிய தரையில் ஐந்தறிவு ஜீவன்களுடன் வான் விரிந்த கனவுகளைச் சுமந்த ஆறறிவு ஜீவன்களின் போராட்டம்*

*நூலாசிரியர்: ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்*

*வெளியீடு: ஜீவநதி வெளியீட்டகம்*

*கிடைக்குமிடம்: புத்தக பண்பாட்டு பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்.*

*விலை : ரூபா 500/=*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்



# கொரோனா வேள்வி

எனது பிஞ்சுக் கால்களுடன்
தளர்நடை பயின்ற
ஊர்மண் தரையில்,
ஒவ்வொரு அடியினையும்
எடுத்து வைக்கும்போது
கால்கள் சிதறிப் போகலாம்
என்ற அச்ச உணர்வுடன்
நத்தையைப் போல் நகர்கின்றேன்
எனது அம்மாவின்
புதைகுழியையாவது
பார்த்துவிடவேண்டும்
என்ற பரிதவிப்புடன்

நிலத்தினில் பொறிவெடிகள்
இடைவெளியில் எறிகணைகள்
தூரத்தில்
ஒற்றனின் சினைப்பர்' கண்கள்
எந்த நேரத்திலும்
எதுவும் நடக்கலாமென்ற
மரண பயத்துடன்
பதுங்கு குழிக்குள்
வாழ்தலின் வலியினை,
எனது உணர்வுகளுக்கு
நெருக்கமான நண்பனுக்கு
எழுதி அனுப்பிவிட்டு - அவனது
உருக்கமான பதிலுக்காகக் காத்திருந்தேன்

பனங்காய் பழுத்தால்
விழத்தான் செய்யும்
பார்த்துப் போ!
பற்றைக்குள் முள்ளிருக்கும்
கவனமாய் நட!
என்பதுவே
அவனது பதிலாய் இருந்தது

எனது நிலைமையினை
எவ்வாறு எடுத்துரைப்பேன்
காலங்கள் பல கரைந்தன
எமது தொடர்பாடல்கள்
அறுந்தறுந்து தொடர்ந்தன
ஒட்டியும் ஒட்டாமலும்

எனது கடந்தகால வாழ்வின்
உணர்வுத் தூறலை
எடுத்துரைக்க உவமையின்றி
எனது எழுதுகோல்
உறங்குநிலை வித்தாய்க்கிடந்தது

உறங்கிக் கிடந்த
எனது எழுதுகோல்
வீறுகொண்டு எழுதுகின்றது,
யுத்தத்துள் வாழ்தல்
திசைதெரியாத
உருத்தெரியாத
கொரோனா வைரசுடன்
மரண பயத்துடன்
வாழ்தல் போலென்று
புதிய உவமையுடன்
எனது கடிதம்
படைப்பாற்றல் பெறுகின்றது

எனதருமை நண்பனுக்கு
அவனது அச்சத்துடன்
எனது அச்சத்தையும்
எடுத்துச் சொல்லி
ஆற்றுதல் செய்து
மரண பயத்தினை
பகிர்ந்து கொள்கின்றேன்

ஓ! கொரோனா தேவதையே!
முள்முடி தரித்த - நீ
சதிராடி நடாத்தும்
நர வேள்வித் தீயில்
சமூக நீதியுடன்
'ஜனசாக்களும்' ஆகுதியாகின்றன
இரத்தின சூத்திர மந்திரங்கள்
ஓங்கி ஒலிக்கின்றன
தனிமனித இடைவெளியுடன்
சமூக உறவுகளும்
கருக்கப்படுகின்றன

ஓ! கொரோனா தேவதையே!
உனது 'போகிப் பண்டிகையின்
பங்குதாரர்களை
இறுக அணைத்துக்கொள்
உன்னைச் சுட்டெரிக்கும்
சூரியன் எழுகின்றான்

**இதயராசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









தசிய கலை இலக்கியப் பேரவையின் மல்லாகம் புத்தக அரங்க விழா - ஜூன்









தசிய கலை இலக்கியப் பேரவையின் வட்டுக்கோட்டை புத்தக அரங்க விழா - செப்டம்பர்






ணேசராசாவின் "பொறுப்பது உன் விதியோ?" நா[illegible] மற்றும் "காதலுக்கு மருந்து" நாடக ஆற்றுகையின் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



ஓவியர் ஆசை இராசையா, எழுத்தாளர் மாவை வரோதயன் நினைவு நிகழ்வு



கொழும்பு தமிழ் சங்கத்தில் சமூகநீதிக்கான வெகுஜன அமைப்பு நடாத்திய கருத்தரங்கம்



தாயகம் சஞ்சிகையின் 105 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு – ஹட்டனில்



சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டக் கலந்துரையாடல்கள் – கொக்குவில்



சுழிபுரம் கே ஏ சுப்பிரமணியம் நூலகத்தில் இடம்பெற்ற நாடக ஆற்றுகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலேக்கா பேரின்பக்குமாரின் "கோவர்த்தனம்" என்ற நாவல் நூல் வெளியீடு – நானாட்டான் , இறுவில்